# කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය

*கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு*

# Ministry of Agriculture, Livestock, Land and Irrigation

**කෘෂිකර්ම සහ පශු සම්පත් අංශ**

*கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவு*

Agriculture and Livestock Divisions

## ප්‍රගති වාර්තාව

*முன்னேற்ற அறிக்கை*

## Progress Report

**(2025.01.01 – 2025.09.30)**

වෙළුම - **I**

*தொகுதி - I*

**Volume - I**

**අයවැය කාරක සභා අවස්ථා විවාදය - 2026**

*வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதம் - 2026*

**Committee Stage of the Budget Debate - 2026**

# முன்னேற்ற அறிக்கை

## வரவுசெலவுத் திட்ட குழுநிலை 2026

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

இல. 80/5, கொவிஜன மந்திரய, ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்ல

முன்னேற்ற அறிக்கை

வரவுசெலவுத் திட்ட குழுநிலை 2026

*(2025.09.30 வரை கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் 2026 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்குகள் என்பவற்றை உள்ளடக்கிய முன்னேற்ற அறிக்கை )*

*அமைச்சின் செலவுத் தலைப்பு - இலக்கம் 118*

*கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு*

- *கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் – கௌரவ திரு. கே.டீ லால் காந்த அவர்கள்*
    - *கமத்தொழில் மற்றும் கால்நடை வள அபிவிருத்தி பிரதி அமைச்சர் – கௌரவ திரு. நாமல் கருணாரத்ன அவர்கள்*
    - *காணி மற்றும் நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர் – கௌரவ திரு. அரவிந்த செனரத் விதாரண அவர்கள்*
- *அமைச்சின் செயலாளர் - திரு. டீ.பீ. விக்கிரமசிங்க அவர்கள்*


| | |
|---|---|
| தொலைபேசி | *011-2034300* |
| தொலைநகல் | *011-2868910* |
| *மின்னஞ்சல் முகவரி* | *info@agrimin.gov.lk* |
| இணையத்தளம் | *www.agrimin.gov.lk* |

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 04-07 |
| கமத்தொழில் பிரிவு மற்றும் கால்நடை வளங்கள் பிரிவு | 08 |
| 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் சுருக்கம் மற்றும் அவற்றின் நிதிசார் முன்னேற்றம் | 09-10 |
| 2026 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் | 11—12 |
| கமத்தொழில்ப் பிரிவு | 13 |
| செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் | 14-16 |
| செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மீண்டுவரும் செலவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் | 16-17 |
| 2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் | 18-30 |
| கமத்தொழில் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் | 31-120 |
| கால்நடை வளங்கள் பிரிவு | 121 |
| செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் | 122-127 |
| 2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் | 128 |
| கால்நடை வளங்கள் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் | 129-148 |

# அறிமுகம்

*2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிக்காக விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனம் என நான்கு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, இந்த அறிக்கையில், விவசாயம் மற்றும் கால்நடை வளங்கள் ஆகிய துறைகள் மற்றும் அந்தத் துறைகளின் கீழ் உள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் 30.09.2025 ஆம் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான நிதியியல் மற்றும் பௌதீக இலக்குகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன (தொகுதி I). காணி (தொகுதி II) மற்றும் நீர்ப்பாசனம் (தொகுதி III) ஆகிய துறைகள் தமது முன்னேற்ற அறிக்கைகளைத் தனித் தனியாகத் தயாரித்து இலங்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கவுள்ளன.*

- *கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவுடன் தொடர்பான கடமைகளும் பணிகளும் (2024 நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்குரிய 2412/08 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமாணி அறிவித்தலுக்கு அமைவாக )*

1 *அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசனம் பற்றிய விடயத்துடனும் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்*

2 *அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்*

3 *ஊழலும், வீண்விரயமும் இல்லாதொழிக்கப்படுகின்ற அதேவேளை, அமைச்சின் பணிகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தி, நவீன முகாமைத்துவ நுணுக்கங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.*

4 *நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உணவு உற்பத்தி செய்தல்.*

5 *தரமான விவசாய உற்பத்திகள் மூலம் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவு வழங்குதலை உறுதி செய்தல்.*

6 *உள்நாட்டில் பயனுள்ளவாறு பயிரிட முடியுமான உணவு உற்பத்தியை ஊக்குவித்தல்.*

7 *இறக்குமதி செய்யப்படும் பயிர்களுக்குப் பொருத்தமான பதிலீட்டுப் பயிர்களை உள்நாட்டில் உற்பத்தி செய்தலை ஊக்குவித்தல்.*

8 *ஏற்றுமதி விவசாய கிராமங்களை மேம்படுத்தல்.*

9 *நிகழ்நேர விவசாய தரவு முறைமையை நடைமுறைப்படுத்தல்.*

10 *இருப்பைக் கையாளுவதற்கும் மற்றும் வழங்கல் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்*

11 *பயிர் பல்வகைப் படுத்துகையின் அடிப்படையிலான கமத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்*

12 *உள்நாட்டு கமத்தொழில் உற்பத்திகளின் தரத்தை நுகர்வோருக்கு உறுதிப்படுத்து வதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்.*

13 *பாரம்பரிய விவசாயிகளை, இளைஞர்களை மற்றும் மாணவர்களை நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய விவசாய கற்கைகளுக்காக வழிப்படுத்துதல்.*

14 *இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.*

15 *இரசாயனக் பீடைநாசினிகள் மற்றும் ஏனைய இரசாயனக் கலவைகள் குறித்த தரத்துடன் பயன்படுத்துவதற்கு ஒழுங்குறுத்தல்.*

16 *விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு பயிர்ச் செய்கை காப்புறுதி முறைமை மற்றும் விவசாய ஓய்வூதியத் திட்டங்களை விஸ்தரித்தல்.*

17 *விநியோகச் சங்கிலிகளை வலுவூட்டுவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்தல்.*

18 *காலநிலை மாற்றங்கள் மற்றும் வான்நிலை தொடர்பான நாளாந்த தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளுதல்.*

19 *தரமான விதைகள், கன்றுகள் என்பவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.*

20 *நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப நீர் வழங்கல் முகாமைத்துவம் .*

21 *விவசாய அபிவிருத்தி வலயங்கள், விவசாயக் கிராமங்கள், விவசாயி நிருவகிக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் மற்றும் விவசாய கம்பனிகள் (farmer-administered co-operatives and farmer companies) போன்றவற்றை பிரபலப்படுத்துதல்.*

22 *சிறிய அளவிலான விவசாயத் தொழில் முயற்சிகள் மற்றும் அமைப்புகளை எழுச்சிபெறச் செய்வதற்கும், மேம்படுத்துவதற்குமான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.*

23 *சேதனப் பசளைப் பயன்பாடு மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி தொடர்பில் அதிகளவில் ஈடுபாடு கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை விஸ்தரித்தலும் ஊக்குவித்தலும்.*

24 *தரமான உர இறக்குமதி, விநியோகம் என்பவற்றை அரச நிவாரண கொள்கைத் திட்டத்திற்கமையச் செயல்திறனுடன் நடைமுறைப்படுத்துதல்*

25 *சிறந்த தரத்திலான இரசாயனப் பசளைகள் மற்றும் சூழலுக்குச் சாதகமான சேதனப் பசளைகளை உரிய நேரத்தில் பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல்*

26 *உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சர்வதேச தரத்துக்கமைவான சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவித்தல்.*

27 *உள்நாட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் திருப்தியடையும் வகையில நியாயமான விலைகளுக்கான கொள்கையொன்றையும் பயிர்ச் செய்கைக்கான பல்லினத்தன்மை நிகழ்ச்சித் திட்டமொன்றையும் நடைமுறைப் படுத்துதல்.*

28 *மேலதிக உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு முறையான பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துதல்*

29 *விவசாய உற்பத்திகளைப் பெறுமதிசேர்த்து ஏற்றுமதி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.*

30 *சர்வதேச மட்டத்திலான தரமான விதை உற்பத்திகளுக்காக உள்நாட்டு விதைக் கொள்கைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்*

31 *தரமான விதைகள் மற்றும் பயிர்ச் செய்கைக்கான உற்பத்திகளுக்காக தனியார்துறையினரை ஊக்குவித்தல்.*

32 *அரச விவசாயப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்*

33 *உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பயிர்களை இறக்குமதி செய்தலைக் குறைத்தல்*

34 *கால்நடைவளப் பிரிவின் உற்பத்திகளை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளைச் வழங்குதல்.*

35 *கால்நடை நலன்புரி மற்றும் அவை தொடர்பான செயற்பாடுகள்*

36 *தரமான உற்பத்தியினைப் போதுமான அளவில் மேற்கொள்வதற்கு இட்டுச்செல்கின்ற நவீன*

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை வளம் தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவினை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை நடைமுறைப்படுத்துதல்.

37 கால்நடைகளின் இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்காக விஞ்ஞானரீதியில் இனவிருத்தி முறைகளை பிரபல்யப்படுத்தலும் மற்றும் அத்தகைய கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாப்பது மற்றும் தனிமைப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள்

38 பல்வேறு வகையான பூகோளத் தேவைகளுக்கமைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

39 கால்நடைவளத் துறையைச் சேர்ந்த உற்பத்திகளை மேம்படுத்தலும் அவற்றை ஏற்றுமதிக்காக ஊக்குவிததலும்

40 நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கால்நடைப் பண்ணைகளை நிருமாணிப்பதற்குத் தேவையான காணிகளையும் முதலீட்டு வசதிகளையும் வழங்குதல்.

41 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன்மூலம் உள்நாட்டு உற்பத்திகளையும் நுகர்வுக்கான வாய்ப்புகளையும் அதிகரித்தல்.

42 இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரச் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமைத்துவமும்.

43 விலங்கு உணவு உள்ளடங்கலாக உள்நாட்டுக்குத் தேவையான சோளத்தை நாட்டிற்குள் பயிரிடுவதற்கு வசதியேற்படுத்துதல்.

44 இலங்கை கமத்தொழில் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமையும்

45 நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள்

46 அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்.

- கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் கீழுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்

1. விவசாயத் திணைக்களம்
2. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
3. கமநல அபிவிருத்தித் திணைக்களம்
4. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்
5. தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்
6. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை
7. நெல் சந்தைப்படுத்தல் சபை
8. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
9. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம்
10. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகையும், குடியேற்ற அதிகாரசபையும் (ஹதபிம அதிகாரசபை)
11. தேசிய உரச் செயலகம்
12. ஸ்டேட் பர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டெட்
13. இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை (தேசிய உணவு மேம்பாட்டுச் சபை)
14. தேசிய கால்நடைவளங்கள் அபிவிருத்திச் சபையும் இணைக் கம்பனிகளும்
15. மில்கோ (பிறைவேட்) லிமிட்டெட்
16. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி

- *கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்*

1. *1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்*
2. *2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்*
3. *1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கிராமோதய சபைச் சட்டம்*
4. *1951 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்*
5. *2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதை நெல் சட்டம்*
6. *1996 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மண்வளம் பேணல் சட்டம்*
7. *1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம்*
8. *1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கமத்தொழில் அலுவல்கள் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனச் சட்டம்*
9. *1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை மன்றச் சட்டம்*
10. *1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்*
11. *1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்படுத்தல் சட்டம்*
12. *1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்*
13. *1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்*
14. *1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை சட்டம்*
15. *1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்ச் சட்டம்*
16. *1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்கு தீனிச் சட்டம்*
17. *1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம்*
18. *1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விலங்கு மருத்துவ தொழில்துறைச் சட்டம்*
19. *1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டம்*
20. *வேறு அமைச்சரொருவரின் கீழ் குறிப்பாக ஒதுக்கப்படாத விடயங்களுடன் தொடர்பான ஏனைய அனைத்து நியதிச் சட்டங்களும்*

# கமத்தொழில் பிரிவு மற்றும் கால்நடை வளங்கள் பிரிவு

- தொலைநோக்கு

*"உணவுப் பாதுகாப்பையும் தேசிய சுபீட்சத்தையும் நோக்காகக் கொண்ட வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதும், பலமானதுமான விவசாயத்துறை"*

- செயற்பணி

*"இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதினூடாக சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புதுவடிவமுடையதும் வர்த்தக நோக்கத்துடன் கூடியதுமான, பூகோல ரீதியில் போட்டிமிகு உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சி விவசாயத்துறையொன்றை அடைதல்"*

நோக்கங்கள்

1 உணவு மற்றும் இவை சார்ந்த விவசாயப் பயிர்த்துறைக்கு கொள்கை ஒத்துழைப்பை வழங்குதல்.
2 உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
3 விவசாய உற்பத்திகளுக்கான தளம்பலற்ற விலையை முன்னெடுத்துச் செல்லல்.
4 நெல் இருப்புக்களை கொள்வனவு செய்தலும் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறன் மிக்க வகையில் முகாமை செய்தலும்.
5 கருத்திட்டங்களை உரிய வேளையில் அமுல் செய்தல்.
6 தெரிவு செய்யப்பட்ட பயிர் வகைகளின் உற்பத்தியை அதிகரித்தல்.
7 துரித உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை வினைத்திறன் மிக்க வகையிலும், விளைவுப் பெருக்கமுள்ளதாகவும் அமுல் செய்தல்.
8 வெளிநாட்டு நிதி அமைப்புக்களை வினைத்திறன் மிக்க வகையிலும் விளைவுப்பெருக்கமுள்ளதாகவும் ஈடுபடுத்தல்.
9 சேவை வழங்குணர்களுக்கு நட்புறவுடனான மற்றும் சிறந்த பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட நிருவாக முறையொன்றை அமுல் செய்தல்.
10 முழு அரச சேவையிலும் விளைவுப் பெருக்கமுள்ள முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

- அமைச்சினால் நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

1. இலக்கு 2 - பட்டினிக்கு முடிவுகட்டுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணைத் தரத்தை அடைவதற்காக நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.
2. இலக்கு 5 - பாலின சமத்துவத்தை அடைவது மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டல்.
3. இலக்கு 12 – நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்.

*2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதிசார் முன்னேற்றம்*

*(செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் விவசாய மற்றும் கால்நடை வளங்கள் பிரிவுகளின் - 30.09.2025 ஆம் திகதி வரையில்)*

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 1. | மூலன செலவு | 101,780.00 | 102,877.31 | 34,805.13 | 34 |
| 2 | மீண்டுவரும் செலவு | 51,639.00 | 51,633.00 | 34,544.67 | 67 |
| | மொத்த வரவுசெலவு | 153,419.00 | 154,510.31 | 69,349.80 | 45 |

விவசாயப் பிரிவு - செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| | மீண்டுவரும் செலவுகள் | | | | |
| 1 | உர மானிய நிகழ்ச்சித் திட்டம் | 35,000.00 | 35,000.00 | 22,727.74 | 65 |
| 2 | உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் காலமுறையான கடன் (கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள்) | 2,005.00 | 2,005.00 | 1,181.43 | 59 |
| | மூலதன செலவுகள் | | | | |
| 1. | உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம் | 550.00 | 640.07 | 57.65 | 9 |
| 2. | மேலதிக பயிர் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | 150.00 | 150.00 | 25.69 | 17 |
| 3. | பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாயக் கொள்கையை தயாரித்தல் | 56.00 | 55.55 | 49.05 | 88 |
| 4. | பயிர் காப்பீட்டிற்கான அரசின் பங்களிப்பு | 1,500.00 | 1,500.00 | 626.00 | 42 |
| 5. | பாதுகாப்பான நெல் இருப்பைப் பராமரித்தல் | 6,000.00 | 6,000.00 | 5,949.80 | 99 |
| 6. | விவசாய மற்றும் தொழில்துறை துறைகளில் இளம் தொழில்முனைவோரின் மேம்பாடு (பக்க இலக்கம் 14 ஐப் பார்க்க) | 500.00 | 500.00 | - | - |
| 7. | உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் காலமுறையான கடன் (கடனுக்கான மூலதனக் கொடுப்பனவுகள்) | 8,664.00 | 8,664.00 | 6,978.81 | 81 |
| | உப கூட்டுத்தொகை - i | 17,420.00 | 17,509.62 | 13,687.00 | 78 |
| | வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள் | | | | |
| 1. | காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயச் செயற்திட்டம் (CSIAP) - உலக வங்கிக் கடன் | 8,775.00 | 8,765.00 | 2,832.23 | 32 |
| 2. | சிறிய அளவிலான விவசாய வியாபர பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) – IFAD | 3,470.00 | 3,470.00 | 1,167.00 | 34 |
| 3. | விவசாயத் துறையை நவீனமயமாக்கும் | 1,250.00 | 2,829.50 | 1635.80 | 58 |

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில்.ரூபா) | நிதிசார் முன்னேற்றம்% |
|---|---|---|---|---|---|
| | செயற்திட்டம் (ASMP) - உலக வங்கிக் கடன் | | | | |
| 4. | சிறிய அளவிலான விவசாய வர்த்தகத்திற்கான பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கான செயற்திட்டம் (SARP) | 5,947.00 | 4,443.45 | 709.34 | 16 |
| 5. | ஒருங்கிணைந்த கிராம-நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை தாங்குதிறன் தொடர்பான செயற்திட்டம் | 30.00 | 40.00 | 5.52 | 14 |
| 6. | தேசிய தாவர தனிமைப்படுத்தல் நிலையத்தின் பரிசோதனை வசதிகளை விருத்தி செய்தல் | - | 6.24 | 1.33 | 21 |
| உப கூட்டுத்தொகை - ii | | 19,472.00 | 19,554.19 | 6,351.22 | 32 |
| | அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்கள் | | | | |
| 1. | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் | 38.00 | 38.00 | 13.75 | 36 |
| 2. | அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம் | 33.00 | 33.00 | 8.50 | 26 |
| 3. | இலங்கை ஹதபிம அதிகாரசபை | 338.00 | 338.00 | 104.09 | 31 |
| 4. | இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை | 75.00 | 75.00 | 32.88 | 43 |
| உப கூட்டுத்தொகை - iii | | 484.00 | 484.00 | 159.22 | 33 |
| மொத்த கூட்டுத்தொகை - (i+ii+iii) | | 37,376.00 | 37,547.81 | 20,197.44 | 54 |

*கால்நடை வளங்கள் பிரிவு – செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம்% |
|---|---|---|---|---|
| 1. | விலங்கு இனவிருத்திப் பண்ணைகளை நிறுவுதல் | 69.00 | 7.21 | 11 |
| 2. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) | 150.00 | 18.27 | 12 |
| 3. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (அபிவிருத்தி உதவிகள்) | 100.00 | 9.17 | 09 |
| 4. | ஆடு வளர்ப்பு மூலம் வாழ்வாதார அபிவிருத்தி | 200.00 | 0.005 | 0.003 |
| மொத்த கூட்டுத்தொகை | | 519.00 | 34.66 | 06 |

## *2026 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள்*

- *கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் 2026 ஆம் ஆண்டுக்கான நிதிசார் இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதனச் செலவு | 135,000.00 |
| | கமத்தொழில் மற்றும் கால்நடை வளத்துறை | 52,000.00 |
| | நீர்ப்பாசன பிரிவு | 78,000.00 |
| | காணிப் பிரிவு | 5,000.00 |
| | | |
| 2 | மூலதனச் செலவு | 89,000.00 |
| | கமத்தொழில் மற்றும் கால்நடை வளத்துறை | 71,000.00 |
| | நீர்ப்பாசன பிரிவு | 10,000.00 |
| | காணிப் பிரிவு | 8,000.00 |
| | மொத்தம் (1+2) | 224,000.00 |

## *01. கமத்தொழில் பிரிவு*

*2026 ஆம் ஆண்டுக்கான நிதி இலக்குகள்*

- *உர மானிய நிகழ்ச்சித் திட்டம்*

| தொ/ இல | செயற்திட்டம் | தேவையான ஒதுக்கீடு (மில். ரூபா) |
|---|---|---|
| | மீண்டுவரும் செலவுகள் | |
| 1. | இரசாயன மற்றும் சேதனப் பசளைகளுக்கான உர மானிய நிகழ்ச்சித் திட்டம் (பண மானியம்) | 36,900.00 |
| 2. | உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் காலமுறையான கடன் (கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள்) | 700.00 |
| | | |
| | மூலதனச் செலவுகள் | |
| 1. | உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் காலமுறையான கடன் (கடனுக்கான மூலதனக் கொடுப்பனவுகள்) | 5,500.00 |

- *ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்*

| தொ/ இல | செயற்திட்டம் | தேவையான ஒதுக்கீடு (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஷேட நிகழ்ச்சித் திட்டம் | 800.00 |
| 3 | தேசிய விவசாய ஆராய்ச்சிக் கட்டமைப்பை பல்கலைக்கழகங்களுடன் செயல்படுத்துதல் | 80.00 |
| 4 | பயிர்க் காப்பீட்டிற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு | 1,800.00 |

| தொ/ இல | செயற்திட்டம் | தேவையான ஒதுக்கீடு (மில். ரூபா) |
|---|---|---|
| 5 | மேலதிகப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் | 200.00 |
| 6 | விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் இளைஞர் தொழில்முனைவோரை விருத்தி செய்தல் | 750.00 |
| | மொத்தம் | 3,630.00 |

## 02. கால்நடை வளங்கள் பிரிவு

- *2026 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்)*

| தொ / இல | செயற்திட்டம் | தேவையான ஒதுக்கீடு (மில். ரூபா) |
|---|---|---|
| 1. | கால்நடை இனப்பெருக்கப் பண்ணையை நிறுவுதல் | 150.00 |
| 2. | சிறிய மற்றும் நடுத்தர கால்நடை வள அபிவிருத்தி (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) | 140.00 |
| 3. | சிறிய மற்றும் நடுத்தர கால்நடை வள அபிவிருத்தி (அபிவிருத்தி உதவிகள்) | 200.00 |
| 4. | ஆடு வளர்ப்பு மூலம் வாழ்வாதார விருத்தி | 300.00 |
| | மொத்தம் | 790.00 |

# கமத்தொழில் பிரிவு

# செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

## 01. உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம் - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-020-2202

உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் 550.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் மூலோபாய முன்னுரிமைகள் பின்வருமாறு:

- i. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு
- ii. விவசாய முறைமைகளின் உயர் உற்பத்தி மற்றும் செயல்திறனை உறுதி செய்தல்.
- iii. விவசாய தொழில்முனைவு மற்றும் நிலைபேறான சந்தை வாய்ப்புகளை ஊக்குவித்தல்.
- iv. உகந்த நில முகாமைத்துவத்திற்கு உதவி வழங்கல்.
- v. விவசாய நடைமுறைகளை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கு உதவி வழங்கல்..
- vi. விவசாயம் தொடர்பான செயல்பாடுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மேற்கொள்வதற்கு உதவி வழங்கல்
- vii. தொழில்முனைவு மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்கான பயனாளிகளை வலுவூட்டல்.
- viii. விவசாய ஆராய்ச்சி மற்றும் அறிவு முகாமைத்துவம் செய்வதற்கு உதவி வழங்கல்

இந்த நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு, அடையாளம் காணப்பட்ட விஷேட பயிர்களின் (களப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள், காய்கறி வகைகள்) உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல், விவசாயத்தில் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், விவசாயத் தொழிற்துறை மற்றும் தொழில் முனைவு அபிவிருத்தி, நீர் முகாமைத்துவம், பயன்படுத்தப்படாத நிலங்களை அபிவிருத்தி செய்தல், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைக்கும் பொருட்டு மேற்கொள்ளும் பயிர் பாதுகாப்புத் நிகழ்ச்சித் திட்டங்கள், விவசாய செயற்திட்ட நடவடிக்கைகள், விவசாயப் புத்தாக்க நடவடிக்கைகள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம் ஆகிய துறைகளின் கீழ் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள செயற்திட்டங்கள் கமத்தொழில் அமைச்சு, 17 மாவட்டச் செயலகங்கள், விவசாயத் திணைக்களம், தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம், நெல் சந்தைப்படுத்தல் சபை, விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை, இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபை, தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகார சபை (ஹதபிம அதிகார சபை), ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. செயற்திட்டத்தின் முன்னேற்றக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

| தொ/ இல | செயற்திட்டங்களை செயல்படுத்திய நிறுவனம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்) | முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதி (மில். ரூபாய்) | பௌதீக (%) |
| 1 | கமத்தொழில் அமைச்சு | 11 | 34.30 | 57.65 | 32 |
| 2 | மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள் (14 ஊடாக) | 60 | 156.23 | | |
| 3 | விவசாயத் திணைக்களம் | 52 | 252.58 | | |
| 4 | தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் | 07 | 26.20 | | |
| 5 | நெல் சந்தைப்படுத்தும் சபை | 02 | 15.96 | | |
| 6 | விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை | 02 | 7.00 | | |

| தொ/ இல | செயற்திட்டங்களை செயல்படுத்திய நிறுவனம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்) | முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதி (மில். ரூபாய்) | பௌதீக (%) |
| 7 | இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபை | 01 | 2.00 | | |
| 8 | தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகார சபை (ஹதபிம அதிகார சபை) | 01 | 8.73 | | |
| 9 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 06 | 27.67 | | |
| | மொத்தம் | 142 | 530.66 | | |

**02.** மேலதிகப் பயிர் வகைகளைப் பயிரிடுவது தொடர்பான நிகழ்ச்சித் திட்டம்
- செலவுத் தலைப்பு 118-2-03-071-2202

பிராந்திய ரீதியாகக் காணப்படும் சாத்தியப்பாடுகளின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் பரவிக் காணப்படும் மேலதிக உணவுப் பயிர்ச் செய்கை முயற்சிகளை இனங்கண்டு தேசிய உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் அதன் மூலம் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல் என்பவற்றுக்கு பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளோருக்கு ஊக்கமளிப்பதே இந்த செயற்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

2025 ஆம் ஆண்டில் மேலதிக உணவுப் பயிர்ச் செய்கை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 150 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன், உளுந்து, பாசிப்பயறு, கடலை மற்றும் கௌபி ஆகிய மேலதிக உணவுப் பயிர்களின் செய்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு விதை மானியம் வழங்கப்பட்டது. மேலும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மூன்றாம் போகத்தில் பாசிப்பயறு செய்கை நிகழ்ச்சித் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மொனராகலை, அம்பாறை, குருநாகலை, மன்னார், திருகோணமலை, பொலன்னறுவை, முல்லைத்தீவு, புத்தளம், மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டதுடன், தற்போது 25.69 மில்லியன் ரூபாய் நிதி முன்னேற்றம் பதிவாகியுள்ளது.

புகைப்பட இலக்கம் 01

03. பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-026-2507 (SLCARP))

நிறுவனம் பற்றிய பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்க இலக்கம் 88)

04. பயிர்க் காப்பீட்டிற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு
செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-043-2202

நிறுவனம் பற்றிய பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்க இலக்கம் 99)

05. பாதுகாப்பான நெல் கையிருப்பு ஒன்றை பேணுதல் -
செலவினத் தலைப்பு இலக்கம் 118-2-03-094-2509

அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் 2025 ஆம் ஆண்டுக்காக 2025.02.17 அன்று சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் போதுமான பாதுகாப்பு நெல் கையிருப்பைப் பேணுவதற்காக 6,000.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நெல் விலையில் தொடர்ந்து நிலவும் நிலையற்ற தன்மையைத் தவிர்ப்பதற்காகவும், சந்தையில் அரிசியின் கேள்வி மற்றும் விநியோகத்தை வரையறுக்கும்போது அதனை தாக்குப்பிடிக்கும்

நடவடிக்கையாகவும் 2024/2025 பெரும் போகத்திலிருந்து போதுமான பாதுகாப்புக் கையிருப்பைப் பேண எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய, 2024/2025 பெரும் போகத்திற்காக 5,000.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சந்தையிலிருந்து நெல் மற்றும் அரிசிக் கையிருப்பைச் சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் 2025.09.30 ஆம் திகதி வரையிலான செலவு 5,949.80 மில்லியன் ரூபாய் ஆகும். வருடாந்த பௌதிக இலக்கு 48,000 மெற்றிக் தொன் ஆகும். 2025.09.30 வரையான காலப்பகுதியில் 49,571.50 மெற்றிக் தொன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இது 103% முன்னேற்றம் ஆகும்.

### 06. விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் இளைஞர் தொழில்முனைவோரை விருத்தி செய்தல் - செலவினத் தலைப்பு இலக்கம் 118-2-03-095-2202

விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகளை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக முயற்சிகளை ஆரம்பிக்கும் பொருட்டு சிறு மற்றும் நடுத்தர அளவிலான இளைஞர் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக 500.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தின்படி, விவசாயத் துறையின் முன்னுரிமைகளில் ஒன்றான 50,000 இளைஞர் தொழில்முனைவோரை உருவாக்குவதற்கு இந்த செயற்திட்டம் நேரடியாகப் பங்களிக்கிறது.

செயற்திட்டத்தின் முதன்மை நோக்கங்கள்:

i.) 2025 இல் குறைந்தபட்சம் 100 விவசாய தொழில்முனைவோரை உருவாக்குவதற்காக அதிகபட்சமாக 5.00 மில்லியன் ரூபாய் வரையிலான குறைந்த வட்டி வீதத்துடன் (வருடாந்தம் 4%) நிதி வசதிகளை வழங்குதல்.

ii.) பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் புத்தாக்கமான விவசாய மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களை அதிகரித்தல் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி அளவை அதிகரித்தல்.

iii.) செயற்திட்டத்தின் நேரடிப் பயனாளிகளின் வருமான மட்டத்தை அதிகரித்தல்.

இந்தச் சலுகைக் கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகள் மூலம் வசதிகள் வழங்கப்படுகின்றன.

விவசாயப் பயிர்கள் மற்றும் தானியங்கள் தொடர்பான பயிர்ச் செய்கை, பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட ஏனைய விவசாய உபகரணங்கள் கொள்வனவு, உள்நாட்டு விவசாய உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பதப்படுத்தல் கைத்தொழில்கள், ஏற்றுமதியை முதன்மைப்படுத்திய சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாயச் செயற்திட்டங்கள், விவசாயம் தொடர்பான பெறுமதி சேர்க்கும் செயற்திட்டங்கள் மற்றும் கால்நடை வளர்ப்புத் தொடர்பான செயற்திட்டங்களுக்கு இதன் கீழ் நிதியளிக்கப்படுகிறது.

முன்னேற்றம்:
பயனாளிகளுக்குக் கடன் வழங்கும் செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## செலவுத் தலைப்பு இலக்கம் 118 மீண்டுவரும் செலவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

### 1. உர மானிய நிகழ்ச்சித் திட்டம்

உயர் உற்பத்தித் திறனுடன் உணவுப் பாதுகாப்பு நிறைந்த நாடு என்ற கொள்கைக்கு இணங்க, விவசாய (வயல்) நிலங்களில் நெல் மற்றும் ஏனைய களப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு தேவையான உர வகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக உர நிதி மானியத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டம், விவசாய உள்ளீடுகளின் வினைத்திறனான முகாமைத்துவத்தையும், தாவர ஊட்டச்சத்துக்களைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துவதையும் ஊக்குவிப்பதன் மூலம், அதிக விளைச்சலை

அடைவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதுடன், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல், ஊட்டச்சத்துக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து உணவு நெருக்கடியைத் தணித்தல், மற்றும் உணவுப் பயிர்கள் இறக்குமதிக்காக ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்கு செலவிடப்படும் அந்நிய செலாவணியைக் குறைத்தல் ஆகியவற்றுக்கு உதவுகிறது.

தற்போது விவசாய (வயல்) நிலங்களில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கைக்காக ஒரு ஹெக்டேயருக்கு 25,000 ரூபாயும், விவசாயப் பணிப்பாளர் நாயகத்தால் பரிந்துரைக்கப்பட்டு போகக் கூட்டங்களில் தீர்மானிக்கப்படும் ஏனைய களப் பயிர்களின் செய்கைக்காக 15,000 ரூபாயும் என கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக இரண்டு (02) ஹெக்டேயருக்குப் உர நிதி மானியம் வழங்கப்படுகிறது.

இதற்கமைய, விவசாயம், பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தியை ஊக்குவித்தல், நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்தல், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தல் ஆகியவற்றுடன், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உர வகைகள் உள்ளிட்ட விவசாய உள்ளீடுகளை நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்குதல் போன்ற முக்கிய நோக்கங்களை அடைவதற்கு, மேற்குறிப்பிட்ட உர மானிய நிகழ்ச்சித் திட்டம் மூலம் பிரதானமாக எதிர்பார்க்கப்படுகிறது.

நிதி முன்னேற்றம்

| விளக்கம் | ஒதுக்கப்பட்ட நிதி (மில்.ரூபாய்) | செலவிடப்பட்ட நிதி (மில். ரூபாய்) 2025.09.30 வரை | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டும் வரும் செலவுகள் | 35,000.00 | 22,727.74 | 65 |

- பௌதிக முன்னேற்றம்

2025 சிறு போகம்

i.) 2025 சிறு போகத்திற்காக நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு உர வகைகளை கொள்வனவு செய்வதற்காக, 1 ஹெக்டேயருக்கு ரூ. 25,000.00 வீதம், அதிகபட்சமாக 2 ஹெக்டேயர் பயிரிடும் நிலப்பரப்புக்கு ரூ. 50,000.00 ஆக, ஏனைய களப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு 1 ஹெக்டேயருக்கு ரூ. 15,000.00 வீதம், அதிகபட்சமாக 2 ஹெக்டேயர் பயிரிடும் நிலப்பரப்புக்கு ரூ. 30,000.00 ஆக, விவசாயிகளின் தனிப்பட்ட கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

ii.) அதன்படி, 2025 சிறு போகத்திற்கான உர நிதி மானியம் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும், ஏனைய களப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கும் உர நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

| போக காலம் | பயிர் வகை | செலவிடப்பட்ட நிதி (மில். ரூபாய்) | நிலப்பரப்பு (ஹெக்.) | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2025 சிறு போக செய்கை | நெல் | 13,229.06 | 527,514.09 | 868,808 |
| | ஏனைய பயிர்கள் | 212.71 | 14,180.63 | 48,870 |

அதன்படி, 2025 சிறு போகத்தில் நெல் மற்றும் ஏனைய பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு உர நிதி மானியம் வழங்குவதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு 13,441.77 மில்லியன் ரூபாய் ஆகும்.

## 2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற் திட்டங்களின் முன்னேற்றம்

### 01. விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் (ASMP)

1.1. அறிமுகம்

இந்தச் செயற்திட்டம் நிறைவடைந்துள்ளதுடன், இந்த வருட வரவுசெலவுத் திட்டம் மூலம் ஒதுக்கப்பட்ட திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடான 2,829.50 மில்லியன் ரூபாய் ஆனது, தீர்க்கப்படாத விலைப்பட்டியல்களைச் செலுத்துவதற்கும் செயற்திட்டத்தை நிறைவு செய்யும் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2025.09.30 ஆம் திகதிக்கான நிதி முன்னேற்றம் 2,421.50 மில்லியன் ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 02

### 02. காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)

2.1. அறிமுகம்

இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட காலநிலைத் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய முக்கிய வலயங்களில் உள்ள சிறிய அளவிலான காணி உடமையாளர் சமூகத்தினரின், காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் நீர்ப்பாசன விவசாயத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் என்பவற்றை பிரதான நோக்கமாகக் கொண்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் (125 மில்லியன் அமெரிக்க டொலர்) ஜூன் 2019 முதல் கமத்தொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலமும், காலநிலைக்கு ஈடுகொடுக்கக்கூடிய விவசாய முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாய பயனுறுதித்தன்மையை அதிகரித்தல் மற்றும் இலக்காகக்கொண்ட சிறு விவசாய உற்பத்திச் சமூகத்திற்கு சந்தை அணுகலை அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் மூலம் இந்த நோக்கத்தை அடையக்கூடியதாக இருக்கும்.

இலங்கையின் வடக்கு மாகாணம் (கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு), கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை), வடமத்திய மாகாணம் (அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை), வடமேல் மாகாணம் (குருணாகல் மற்றும் புத்தளம்), தென் மாகாணம் (ஹம்பாந்தோட்டை) மற்றும் ஊவா. மாகாணம் (மொனராகலை) ஆகிய 6 மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 11 நிர்வாக மாவட்டங்களில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள காலநிலை மாற்றத்தின் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய 350,000 இற்கும் அதிகமான சிறிய அளவிலான (பயிர்ச் செய்கை நிலப் பரப்பு 2 ஹெக்டயரிற்கும் குறைவான) விவசாயிகளுக்கும் சுமார் 60,000 விவசாயக் குடும்பங்களுக்கும் நேரடிப் பயனை வழங்கும் வகையில் 375,000 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதே இந்த செயற்திட்டத்தின் இலக்காகும். உலக உணவுத் திட்டம், சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்திய கூட்டு ஆய்வுக்கு அமைவாக, காலநிலை மாற்றத்தின் தீவிர மாறுதல்களுக்கு உட்படும் பகுதிகளை அடிப்படையாகக்கொண்டு இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

2.2. 2026 ஆண்டில் நிதி இலக்கு

| தொ/இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 4,000.00 |

*2.3. 2026 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் | திட்டத்தை நிறைவு செய்வதுடன் தொடர்பான விலைப்பட்டியல்களைத் தீர்வு செய்தல் | | 4,000.00 | 4,000.00 |
| மொத்த கூட்டுத்தொகை | | | | | 4,000.00 |

*2.4. 2025.09.30 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 2025.09.30 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் | 8,775,00 | 2,832.23 | 32 |

*2.5. 2025.09.30 ஆம் திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

- *2025 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி 8,775.00 மில்லியன் ரூபாய் ஆகும், அந்தத் தொகையிலிருந்து இதுவரை 2,832.23 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதன்படி, மொத்த செயற்திட்ட நிதி ஒதுக்கீடான 37,014 மில்லியன் ரூபாய். (சராசரி அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 300/= ரூபாய் எனக் கருதி) இல் இருந்து 26,934.12 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*
- *மூன்றாம் காலாண்டின் இறுதிக்குள், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 90% ஆக இருந்தது.*
- *விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களைப் பெற்று வீட்டுத் தோட்டச் செய்கைத் திட்டத்தில் ஈடுபாடுகொண்டு அதில் பங்கேற்ற மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை 66,039 ஆகும். சிறு மற்றும் பெரும் போகச் செய்கைக் காலங்களில் முறையே 14,700 ஹெக்டேயர் மற்றும் 19,600 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு, முறையே சுமார் 29,100 மற்றும் 46,100 மெற்றிக் தொன் அறுவடை பெறப்பட்டுள்ளது. மேலும், இடை போகச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகளுக்கு ஆர்வமூட்டப்பட்டதன் மூலம் 5,613 ஹெக்டேயர் பரப்பளவில் ஏனைய களப் பயிர்ச் செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.*
- *காலநிலைக்கு சீரமைவான விவசாயப் பயிற்சிப் பாடசாலையின் 127 நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக 2861 விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் இந்தப் பயிற்சி அறிவை அவர்கள் தங்கள் அண்டை விவசாய சமூகத்தினரிடையே பரப்ப உத்தேசித்துள்ளனர். விவசாய வியாபாரப் பாடசாலைகள் தொடர்பான 12 தொகுதிகளைக் கொண்ட பாடநெறிக்கான ஒரு பொதி தயாரிக்கப்பட்டு, 113 விவசாய ஆலோசகர்கள் மற்றும் 47 விவசாய உதவியாளர்கள் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மூலம் 15,000 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது சுமார் 11,200 விவசாயிகள் அந்தப் பயிற்சியைப் பெற்றுள்ளனர்.*
- *2025 ஆம் ஆண்டில் 30 காலநிலைக்கு சீரமைவான விவசாய முன்மாதிரி கிராமங்களை நிறுவுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*
- *544 விவசாய உற்பத்தியாளர் சங்கங்களும், பொருத்தமான விதத்தில் அந்தச் சங்கங்களை ஒருங்கிணைத்து 45 உற்பத்தியாளர் நிறுவனங்களும் நிறுவப்பட்டு, அந்த உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அறுவடைகளை விற்பனை செய்தல் மற்றும் போட்டிச் சந்தை*

*விலை ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, இந்த உற்பத்தியாளர் நிறுவனங்கள், பிரதான வர்த்தக நிறுவனங்களுடன் வர்த்தக உறவுகளை ஏற்படுத்த ஊக்குவிக்கப்பட்டுள்ளன. இதன் கீழ், பிரதான வர்த்தக நிறுவனங்களுக்கு விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வது ஊக்குவிக்கப்பட்டுள்ளது.*

- *முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் கூழாம்புரையிலுள்ள 1000 மெட்ரிக் தொன் கொள்ளளவு கொண்ட மத்திய தர தானியக் களஞ்சியத்தின் நிமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நுழைவுப் பாதை செயற்திட்ட உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது.*
- *செயற்திட்டம் செயல்படுத்தப்படும் 6 மாகாணங்களில் உள்ள 47 கமநல சேவைகள் மையங்களுக்கு விவசாய இயந்திரங்கள் மற்றும் விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட உடனேயே அனைத்துச் சேவை மையங்களும் நவீனமயமாக்கப்பட்டன.*
- *1316 விவசாயக் கிணறுகள் புனரமைக்கப்பட்டு, அவற்றின் கீழ் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் 200 கிணறுகளின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டத்தின் கீழ் 52 விவசாயப பாதைகளை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*
- *சூரியசக்தி நீர்ப்பாசன அமைப்புகள் வழங்கப்பட்டு பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட விவசாயிகள் எண்ணிக்கை சுமார் 300 பேர் ஆகும்.*
- *பயனாளி குடும்பங்கள் மற்றும் பயிர்களின் பாதுகாப்பிற்காக 1400 கி.மீ. பயிர் பாதுகாப்பு மின்வேலிகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 765 கி.மீ. தூரத்தை உள்ளடக்கிய பயிர் வேலிகளுக்கான உதவி வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் சுமார் 740 கி.மீ. தூரத்தை உள்ளடக்கும் வகையில் தேவையான உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.*
- *.மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்திட்டக் கட்டுமானப் பணிகள் தொடர்பாக 519 சமூகக் கணக்காய்வுக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.*
- *நீர்ப்பாசன விவசாய மேம்பாட்டிற்காக 72 குள அடுக்கைத் தொகுதிகளில் புனரமைக்கப்படவுள்ள குளங்களின் எண்ணிக்கை 476 ஆகும். அந்த முதலாம் கட்டத்தில் உள்ள குளங்களில் 461 குளங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. எஞ்சிய புனரமைப்புப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவுசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்திற்காக 177 குளங்களின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவை இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவுசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
- *பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரைச் சரியான அளவில் வெளியிடுவது பற்றிய புரிதலை வழங்குவதற்காக, நீர்ப்பாசனத் தொகுதிகளின் செயல்பாடு மற்றும் முகாமைத்துவம் / நீர் முகாமைத்துவம் தொடர்பாக விவசாய நிறுவனங்களை இலக்காகக் கொண்டு 260 பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. விவசாய நிறுவனங்களுக்கு நீர் முகாமைத்துவம் தொடர்பான 8500 கையேடுகள்/தகவல் குறிப்பேடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 5200 பிரதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*
- *வினைத்திறனான நீர்ப்பாசன நீர் பயன்பாட்டை நோக்கமாகக் கொண்ட லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வயல்களை மட்டப்படுத்துவது குறித்து ஆரம்ப கட்ட விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது அவ்வாறு பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலத்தின் அளவு 21 ஹெக்டேயர் ஆகும். இரண்டு லேசர் தொழில்நுட்ப உபகரண அமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய டிரக்டர்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டு, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் விவசாயத் திணைக்களங்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*
- *குள அடுக்கைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு 35 நீர் முகாமைத்துவத் திட்டங்கள் இதுவரை தயாரிக்கப்பட்டுள்ளன.*
- *செயல்பாட்டு முகாமைத்துவம் மற்றும் நிலைபேறான இருப்பு என்பவற்றை நோக்கமாகக் கொண்டு 60 குள அடுக்கைத் தொகுதிகளுக்கான முகாமைத்துவக் குழுக்கள்*

நிறுவப்பட்டுள்ளன. 6 மாகாணங்களில் பங்குதாரர்களின் பங்களிப்புடன் நடத்தப்பட்ட குறுக்கு வெட்டுப் பயணங்கள் (Transect Walk) மேற்கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்ட குள அடுக்கைத் தொகுதிகளின் விவரங்களின் அடிப்படையில், 60 குள அடுக்கைத் தொகுதிகளின் முகாமைத்துவத் திட்டங்களில் இதுவரை 59 நிறைவு செய்யப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 149 செயற்பாடுகள் செயற்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.

– சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், செயற்திட்டத்தின் செயல்பாட்டுத் தலையீடுகளுக்கான 328 சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், நீர்ப்பிடிப்புப் பகுதி முகாமைத்துவத்தை இலக்காகக் கொண்ட மரநடுகைத் திட்டத்தின் மூலம் மீள்வனமாக்கல், விவசாய வனவியல், காற்றுத் தடுப்புச் சுவர்கள் நிறுவுதல், குளத்தைச் சூழவுள்ள நெல் வயலின் பகுதிகளை அபிவிருத்தி செய்தல், இழப்பீட்டு மரங்களை நடுதல் என்ற வகையில் 17,100 மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

– பயனாளிகள் முன்வைக்கும் குறைபாடுகளுக்குத் தீர்வு வழங்கும் பொறிமுறையின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட 317 சிக்கலான சந்தர்ப்பங்களில் 316 விடயங்களுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 03 - 06

## 03. சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)

### 3.1. அறிமுகம்

சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) என்பது நாடளாவிய ரீதியில் உள்ள 57,500 சிறிய அளவிலான விவசாயப் பயனாளிகளின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை நிலைபேறான முறையில் உயர்த்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட ஒரு நிகழ்ச்சித் திட்டம் ஆகும். இதற்காக இலங்கை அரசாங்கமும் (GOSL) சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியமும் (International Fund for Agricultural Development - IFAD) இணைந்து நிதியுதவி அளிக்கின்றன. இந்தத் நிகழ்ச்சித் திட்டமானது அரசு, தனியார், உற்பத்தியாளர் மற்றும் பங்குதாரர் ஆகியவற்றை உள்ளடக்கிய 4P அணுகுமுறை மூலம் சிறிய அளவிலான விவசாயப் பயனாளிகளுக்கு சலுகைக் கடன் விகிதங்களின் கீழ் மானியங்கள் மற்றும் கடன்களை வழங்குகிறது. அதேபோல், சிறிய அளவிலான விவசாயிகளுக்கு அவர்களின் விவசாய அமைப்புகளை வலுப்படுத்த பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அறிவு என்பவற்றை வழங்குதல், அத்துடன் விவசாய வீதிகள், தடுப்பணைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் சாதகமான கொள்கை சூழலை உருவாக்குதல் ஆகியவற்றிற்கும் உதவி வழங்குகிறது. இந்த நடவடிக்கைகளின் ஊடாக, விவசாயத் துறையினர் இடையேயும் மற்றும் விவசாயத் துறையில் ஒரு நிலைபேறான வர்த்தக அபிவிருத்தியை ஏற்படுத்துவதும், விவசாயிகளின் சமூக மற்றும் பொருளாதார சுயசார்பை வளர்ப்பதும் திட்டத்தின் முக்கிய இலக்குகளாகும். இந்த நடவடிக்கைகளின் ஊடாக, விவசாயத் துறையினருக்கிடையிலான இணைப்பை வலுப்படுத்துவதும், விவசாயத் துறையில் நிலைபேறான வர்த்தக அபிவிருத்தியை ஏற்படுத்துவதும், விவசாயிகளின் சமூக மற்றும் பொருளாதார சுயநிறைவை விருத்தி செய்வதும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய இலக்குகளாகும்.

### 3.2. 2026 ஆண்டின் நிதி இலக்கு

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 1,590.00 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 80.00 |

*3.3. 2026 ஆண்டில் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | வர்த்தக கூட்டாண்மைகளுக்கான அணுகல் (4P செயற்திட்டங்கள் மூலம்) | பயனாளர் எண்ணிக்கை | 3,500 | 0.44 | 1,533 |
| 2 | இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி | பயனாளர் எண்ணிக்கை | 250 | 0.23 | 57 |

*3.4. 2025.09.30 திகதியளில் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 2025.09.30 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 1,690.00 | 783.00 | 46 |
| 2 | நுண் நிதித் திட்டங்கள் | 1,780.00 | 384.00 | 22 |
| | மொத்தம் | 3,470.00 | 1,167.00 | 34 |

*3.5. 2025.09.30 ஆம் திகதி வரையிலான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*சிறிய அளவிலான விவசாய வியாபாரக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) 105.00 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மொத்த செலவில் 2017 ஆம் ஆண்டில் ஆறு ஆண்டு செயற்திட்டமாக 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், கொவிட் தொற்றுநோய் மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, இந்தச் செயற்திட்டத்திற்கு 2023 முதல் 2026 வரை மேலும் மூன்று ஆண்டுகள் நீடிப்பு இரண்டு தடவைகளாக வழங்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் (GOSL), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD), தனியார் துறையினர் (விவசாய வர்த்தக நிறுவனங்கள்), சிறு காணி உடமையாளர்கள் மற்றும் பங்கேற்பு நிதி நிறுவனங்கள் (PFIs) என்பன கூட்டாக இணைந்து நடைமுறைப்படுத்தும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக 57,500 சிறு விவசாய தொழில் முனைவோரை சந்தை வாய்ப்புகளுடன் இணைப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரிக்க உதவுதல் மற்றும் மற்றும் அதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் என்பன காணப்படுகின்றன. இந்த நோக்கங்களை அடைய, SAPP பிரதானமாக அரச மற்றும் தனியார் இணைப்புகளுடன் விவசாய தொழில்முனைவோருக்கு வழங்கும் தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் விவசாய இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் ஊடாக மிகவும் சிறந்த சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க SAPP கவனம் செலுத்துகிறது.*

*இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே, தனியார் விவசாய நிறுவனங்கள் மற்றும் விவசாய உற்பத்தியாளர் சங்கங்களுடன் இணைந்து பால் உற்பத்தி, வாசனைப் பொருட்கள், தானியங்கள் மற்றும் அவரையினப் பயிர் வகைகள், தேயிலை, மலர் வளர்ப்பு மற்றும் காய்கறி வகைகள் போன்ற பிரதான விவசாயத் துறைகளை உள்ளடக்கும் வகையில் 39 4P (பொது, தனியார், உற்பத்தியாளர். கூட்டாண்மை) செயற்திட்டங்களை நிறுவுவதில் SAPP வெற்றி கண்டுள்ளது.*

*சிறிய அளவிலான விவசாய வியாபாரக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) கீழ், 2025 செப்டம்பர் 30 ஆம் திகதி நிலவரப்படி, 4P பெறுமதி சங்கிலிகள் (அரச, தனியார், உற்பத்தியாளர் ஆகிய பிரிவினரின் பங்கேற்புடன்), இளைஞர் மற்றும் வருமானம் ஈட்டும் கடன்கள்*

*ஆகியவற்றின் கீழ் 48,617 பயனாளிகள் பலன்களைப் பெற்றுள்ளனர். இது மொத்த செயற்திட்ட இலக்கான 57,500 விவசாய தொழில்முனைவோரில் 84.6% ஆகும்.*

*2025 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை, இந்தச செயற்திட்டத்தின் மூலம் 4P மாதிரிக்காக தற்போது இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 43,000 பயனாளிகளில் 38,298 பேருக்கு பலன்கள் கிடைத்துள்ளன. இளைஞர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் (YED) கீழ் 3,590 SAPP இளைஞர் பயனாளிகளுக்கும், வருமானம் ஈட்டும் கடன் திட்டத்தின் (IG) மூலம் 6,729 பயனாளிகளுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*

*மேலும், SAPP நிறுவனமானது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உதவியுடன் விவசாயக் கால்வாய்கள் மற்றும் விவசாய வீதிகளை புனரமைத்தல் போன்ற பண்ணை சாராத விவசாய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளுக்காக திட்டமிட்டிருந்த 94 செயற்திட்டங்களில், 2025 செப்டம்பர் 30 ஆம் திகதிக்குள் 89 செயற்திட்டங்ககள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இதுவரை இதற்காக 207.8 மில்லியன் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.*

*இதற்கு மேலதிகமாக, விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை மிகவும் நிலைபேறான வர்த்தக நிறுவனங்களாக மாற்றுவதற்காக SAPP செயற்திட்டத்தால் வழங்கப்படும் நிறுவன வலுவூட்டல் (IS) சேவைகளின் கீழ், இதுவரை 7 செயற்பாடுகள் உரிய ஒதுக்கீடுகளுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும், 2025 ஆம் ஆண்டில் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் அதேபோன்ற 13 IS சேவைகள் 2025 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளதுடன் தற்போது செயற்திட்டத்தின் இந்தக் கூறின் கீழ் 133 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.*

*முழு SAPP செயற்திட்டத்திற்கான IFAD இன் நிதி இலக்கான 54.4 மில்லியன் அமெரிக்க டொலரில், 40.21 மில்லியன் டொலர்கள் முதலீடு செய்யப்பட்டு 74% நிதி முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. பயனாளிகள் மற்றும் ஊக்குவிப்பாளர்களிடமிருந்து செயற்திட்டத்திற்கான மேலதிக பங்களிப்பு 13.62 மில்லியன் ஆகும். GOSL, IFAD மற்றும் பங்களிப்பு இலக்கான 105 மில்லியனில், 2025 செப்டம்பர் 30 ஆம் திகதிக்குள் 75.09 மில்லியன் (72%) செலவிடப்பட்டுள்ளது.*

*இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நுண் கடன்களிலிருந்து மீளப் பெறப்பட்ட நிதியைப் பிரதான மூலதனமாகக் கொண்டு, இலங்கையின் விவசாய முறையை நிலைபேறானதாக்கும் நோக்குடன் FSSF (Farming System Sustainability Fund) என்ற பெயரில் ஒரு நிதியை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டில் அந்த நிதியத்தின் மூலம் விவசாயிகளுக்குச் சலுகைக் கடன்களை வழங்குவது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.*

*SAPP பயனாளிகளின் அறிவை மேம்படுத்தவும், நிதிக் கூறுகள் மற்றும் திறன்களைப் பற்றி அறிந்துகொள்ளவும், "நிதி எழுத்தறிவு" தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன. 2025 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை 62 பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு 2,106 பயனாளிகளுக்கு நிதி எழுத்தறிவு குறித்த சிறந்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சியை வழங்குவதற்கு தேசிய தொழில்முனைவோர் மேம்பாட்டு அதிகாரசபையின் (NEDA) அதிகாரிகள் வளவாளர்களாகப் பணியாற்றினர். இதில் SAPP இன் பெறுமதி சங்கிலி செயலூக்க அதிகாரிகளும் பங்கேற்றனர். அங்குணுகொலபெலஸ்ஸ பிரிவில் உள்ள இளைஞர் தொழில்முனைவோர் பயனாளிகளுக்கு அளுத்வெவ விகாரையில் பாலின சமத்துவம் குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. அத்துடன், கலென்பிந்துணுவெவ மஹகலேயகம சனசமூக மண்டபத்தில் CBL சோளச் செய்கை செயற்திட்டம், மிளகாய்ச் செய்கை செயற்திட்டம் மற்றும் மில்கோ திரவப் பால் செயற்திட்டம ஆகியவற்றின் விவசாயிகளுக்கு நிதி எழுத்தறிவுப் பயிற்சி நடத்தப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 07 –11*

## 04. சிறிய அளவிலான விவசாய வியாபாரம் மற்றும் மீண்டெழுதல் செயற்திட்டம் (SARP)

### 4.1. அறிமுகம்

இலங்கையின் புத்தளம், குருநாகல், மாத்தளை, அநுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய 06 உலர் வலய மாவட்டங்களையும் அந்த மாவட்டங்களில் உள்ள மல்வத்து ஓயா, தெதுரு ஓயா மற்றும் மீ ஓயா ஆகிய ஆறுகளின் நீர்பிடிப்புப் பகுதிகளில் அமைந்துள்ள குள அடுக்கைத் தொகுதிகளையும் அடிப்படையாகக் கொண்டு இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பண்ணை வர்த்தகமயமாக்கலை ஊக்குவிக்கும் அதேவேளை, 40,000 சிறிய அளவிலான விவசாய குடும்பங்கள் அல்லது 148,000 தனிநபர்களுக்கு காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் நிலைபேறான தீர்வுகளை வழங்குவதையும் இந்த செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

செயற்திட்டத்தின் பிரதான கூறாக, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை விருத்தி செய்வதற்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டப் பயனாளிகளின் திறன் விருத்தி மற்றும் தெரிவு செய்யப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை புதிதாக உருவாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றுக்கு முதலீடு செய்தல் காணப்படுகிறது. விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) இலங்கை அரசாங்கத்திற்கு நிதியளித்து செயற்படுத்தும் இந்தச் செயற்திட்டத்தின் ஊடாக 82 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதன் செயற்திட்ட காலம் 06 வருடங்களாகும். இந்த செயற்திட்டம் 20.01.2022 அன்று ஆரம்பிக்கப்பட்டது.

### 4.2. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 9,316.07 |

### 4.3. 2026 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|
| 1 | காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை விருத்தி செய்வதற்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளின் எதிர்கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல். | நிகழ்ச்சிகள் | 406.47 |
| 2 | விவசாயத்துடன் தொடர்பான பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான திறன்களை வலுப்படுத்தல். | நிகழ்ச்சிகள் | 39.49 |
| 3 | காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் உற்பத்திகள் மற்றும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்தல் | வீட்டு அலகுகள் | 3,075.69 |
| 4 | பெறுமதிச் சங்கிலி அபிவிருத்திக்கு முதலீடு செய்தல் | வீட்டு அலகுகள் | 5,474.42 |
| 5 | செயற்திட்ட முகாமைத்துவ அலகு | - | 320.00 |

*4.4. 2025.09.30 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட ஒதுக்கீடு | 2025.09.30 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| சிறிய அளவிலான விவசாய வியாபாரம் மற்றும் மீண்டெழல் செயற்திட்டம் (SARP) மூலதன செலவுகள் | 5,947.00 | 4,443.45 | 709.34 | 16 |

- குளங்களை புனரமைக்கும் பணிகள்

இந்தச் செயற்திட்டத்தின் ஊடாக 260 குளங்களைப் புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், அவற்றில் 171 குளங்களின் புனரமைப்புப் பணிகளை 2025 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, தற்போது குருநாகல் மாவட்டத்தில் 14 குளங்கள், வவுனியா மாவட்டத்தில் 5 குளங்கள், அநுராதபுரம் மாவட்டத்தில் 2 குளங்கள் மற்றும் மாத்தளை மாவட்டத்தில் 2 குளங்கள் என 23 குளங்களின் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதன்படி, தற்போது எஞ்சியுள்ள 148 குளங்களின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை புனரமைப்புப் பணிகள் நிறைவுற்ற மற்றும் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் 171 குளங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 624.65 மில்லியன் ரூபாய் ஆகும். தற்போது, புனரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்பட்ட விலைமனு கோரல்களின் மொத்த பெறுமதி 1,928.30 மில்லியன் ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 12

- பெறுமதி சங்கிலி அபிவிருத்திக்கான விநியோக வீதிகளை அமைத்தல்

இந்தச் செயற்திட்டத்தின் கீழ், 4P வர்த்தகச் செயல்பாடுகளுக்காகவும் அதன் மூலம் கிடைக்கும் விளைச்சலின் பெறுமதி சங்கிலி அபிவிருத்திக்கான அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதியாக விநியோக வீதிகளை அமைப்பதற்காக, 2025 ஆம் ஆண்டிற்கு 624 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 266 கிலோமீட்டர் நீளமுள்ள வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக மாவட்டச் செயலாளர்களுக்கு 3.098 மில்லியன் ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

- நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் காடுகளை உருவாக்குதல்

இந்தச் செயற்திட்டத்தின் மூலம் புனரமைக்கப்படும் குளங்களுக்குச் சொந்தமான 834 ஹெக்டேயர் நிலப்பரப்பை உள்ளடக்கிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் காடுகளை உருவாக்குவதன் கீழ், மீ இலுப்பை, வெண் மருது, கருங்காலி மற்றும் புங்கை ஆகிய மரங்களை நடும் பொருட்டு வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 13.53 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதுடன், அத்திணைக்களம் மூலம் இந்தத் தாவர வகைகளை நடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மீள்காடு வளர்ப்புத் திட்டத்திற்கு 376.19 மில்லியன் ரூபாய் செலவிட எதிர்பார்க்கப்படுகிறது.

புகைப்பட இலக்கம் 13

- கால்நடைச் செயற்திட்டம் (4P)

இந்த செயற்திட்டம் ஒரு 4P செயற்திட்டமாக தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு குருநாகல், புத்தளம், அநுராதபுரம் மற்றும் மாத்தளை மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இந்த செயற்திட்டத்தின் மொத்தச் செலவு 592.63 மில்லியன் ரூபாய் ஆகும். இந்தச்

*செயற்திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை 1,000 ஆகும். தற்போது இந்தச் செயற்திட்டத்திற்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

- *சீமை வெள்ளரி (Gherkin) செய்கை செயற்திட்டம் (4P)*

*இது அநுராதபுரம் மற்றும் வவுனியா மாவட்டங்களை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படும் ஒரு செயற்திட்டமாகும். இந்தச் செயற்திட்டம் ஒரு 4P செயற்திட்டமாக ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. பயனாளிகளின் எண்ணிக்கை 1,000 ஆகும். இந்தச் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 256.72 மில்லியன் ஆகும்.*

- *காலநிலை அறிவார்ந்த கால்நடை வலுவூட்டல் செயற்திட்டம் (4P)*

*ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இந்தச் செயற்திட்டத்தின் மொத்தச் செலவு 106.00 மில்லியன் ரூபாய் ஆகும். இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 255 விவசாயிகள் நேரடிப் பலன்களைப் பெறுவார்கள்.*

- *சோளம் பயிரிடும் செயற்திட்டம் (4P)*

*இந்த செயற்திட்டம் பாதகமான காலநிலை மாற்றங்களைத் தாங்குவதுடன் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் ஒரு செயற்திட்டமாகும். இந்த செயற்திட்டத்திற்கான செலவு 101.00 மில்லியன் ரூபாய் ஆகும். அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இது செயல்படுத்தப்படுகிறது. இந்தச் செயற்திட்டம் ஒரு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.*

- *ஆயுர்வேத மூலிகைப் பயிர்ச் செய்கைச் செயற்திட்டம் (4P)*

*ஆயுர்வேத உற்பத்திகளைத் தயாரிக்கும் ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு 4P செயற்திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இதன் கீழ் 200 விவசாயிகள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட உள்ளனர். இந்தச் செயற்திட்டத்தின் மொத்தச் செலவு 94.02 மில்லியன் ரூபாய் ஆகும்.*

- *நன்னீர் மீன் வளர்ப்பு*

*செயற்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் உள்ள மக்களின் ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 72 குளங்களை உள்ளடக்கி நன்னீர் மீன் வளர்ப்பை விரிவுபடுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 29 குளங்களுக்கு நன்னீர் மீன்களை அறிமுகப்படுத்தும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. அங்கு மீன் அறுவடை செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த மீன் வளர்ப்பு தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் (NAQDA) ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுவதுடன், இதற்காக இதுவரை 5.00 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 14*

- *திறந்தவெளி கோழி வளர்ப்பு*

*இந்த செயற்திட்டம் வவுனியா, புத்தளம், குருநாகல், அநுராதபுரம், மன்னார் மற்றும் மாத்தளை மாவட்டங்களை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட 1,100 விவசாயக் குடும்பங்களுக்குக் கோழிக் குஞ்சுகள் மற்றும் கோழிக் கூண்டுகள் உட்பட தேவையான பொருட்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டம் குறைந்த வருமானம் பெறும் பெண்களை இலக்கு வைத்துள்ளதுடன், குடும்பத்தின் ஊட்டச்சத்து தேவைகளையும் குடும்ப வருமானத்தை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 52.50 மில்லியன் ரூபாய் ஆகும். தற்போது இதன் முதலாம் கட்டத்தின் கீழ் பயனாளிகளுக்குக் கோழிக் குஞ்சுகள் மற்றும் கூண்டுகள் வழங்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இரண்டாம் கட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் பணிகள் நிறைவடைந்து, கோழிக் குஞ்சுகள் மற்றும் கூண்டுகளைப் பயனாளிகளுக்கு விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*புகைப்பட இலக்கம் 15*

- *சோளம் பயிரிடும் செயற்திட்டம்*

*இந்த செயற்திட்டம் காலநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதகமான தாக்கங்களைத் தாங்குவதுடன் தொடர்பான ஒரு செயற்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் கீழ் 800 பயனாளிகளுக்கு பலன்களை வழங்கச் செயற்திட்டமிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 16*

- *கலப்பின மிளகாய் பயிரிடும் செயற்திட்டம்*

*இந்தச் செயற்திட்டமும் பாதகமான காலநிலை மாற்றங்களைத் தாங்குவதுடன் தொடர்பான ஒரு செயற்திட்டமாகும். இதற்காக அநுராதபுரம், குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் 250 விவசாயிகள் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிரிட எதிர்பார்க்கப்படும் நிலப்பரப்பு 75 ஏக்கர் ஆகும். இந்தச் செயற்திட்டத்திற்கான உத்தேச செலவு 44.62 மில்லியன் ரூபாய் ஆகும்.*

- *அரை-பாதுகாப்பான முறையில் தர்பூசணி பயிரிடும் செயற்திட்டம்*

*இந்தச் செயற்திட்டமும் பாதகமான காலநிலை மாற்றங்களைத் தாங்கும் ஆற்றலுடன் தொடர்பான ஒரு செயற்திட்டமாக அநுராதபுரம், குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் 200 விவசாயிகளுக்குப் பலன்களை வழங்குவதை இலக்காகக்கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இதற்காக 30.78 மில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது.*

- *2024 ஆம் ஆண்டில் உளுந்துப் பயிரிடும் செயற்திட்டம் - செயற்திட்டத்தின் செலவு 7.50 மில்லியன் ரூபாய் ஆகும். 600 விவசாயிகளுக்கு தேவையான விதைகள் மற்றும் விவசாய களப் பாடசாலைகள் மூலம் தேவையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பாசிப்பயறு வளர்ப்புச் செயற்திட்டம் – 750 விவசாயிகள் மற்றும் 391.5 ஏக்கரை உள்ளடக்கும் வகையில் இந்த செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2024 சிறுபோகப் பருவத்தில் கிடைத்த பாசிப்பயறு அறுவடை 46,000 கிலோகிராம் ஆகும். நிலக்கடலைச் செயற்திட்டம் - 1,500 விவசாயிகளுக்கு பலன்களை வழங்குவதை இலக்காகக்கொண்டு இது செயல்படுத்தப்பட்டது. இதற்கான செலவு 25.00 மில்லியன் ரூபாய் ஆகும். நெற் பயிர்ச் செய்கைக்கான மாதிரி களங்களை நிறுவுதல் - இதன் கீழ் 17 மாதிரிக் களங்கள் நிறுவப்பட்டன. செலவிடப்பட்ட தொகை 0.60 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*05. ஒருங்கிணைந்த கிராம-நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை தாங்குதிறன் செயற்திட்டம் (IRDCRP) - செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-093-2509*

*5.1. அறிமுகம்*

*ஒருங்கிணைந்த கிராம-நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை தாங்குதிறன் செயற்திட்டத்திற்கு (IRDCRP) இலங்கை அரசாங்கமும் (GOSL) மற்றும் உலக வங்கியும் (WB) இணைந்து நிதியளிக்கின்றன. மொத்தச் செயற்திட்டச் செலவு 103 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். இதன் மூலம், பண்ணையிலிருந்து நுகர்வோர் வரையான பெறுமதிச் சங்கிலியில் உள்ள விவசாயம், கால்நடை வளங்கள், மீன்பிடி மற்றும் பெருந்தோட்டத் துறைகளில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர விவசாயத் தொழில்முனைவோருக்கு உதவ இந்தச் செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் வசிக்கும் விவசாய உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்தித் திறன், போட்டித்தன்மை மற்றும் காலநிலை நிலைத்தன்மையை உயர்த்துவது இந்த ஐந்து வருடச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும்.*

5.2. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 1400 .00 |
| 2 | மீண்டுவரும் | 100 .00 |

5.3. 2026 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | குளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புகளின் அபிவிருத்தி | குளங்கள் / குட்டைகள் / நீர்ப்பாசனத் திட்டங்கள் | 46 | 19.57 | 900.00 |
| 2 | விவசாயப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி | பயிர்ச் செய்கைப் பரப்பு (ஹெக்டேயர்) | 100 | 2.00 | 200.00 |
| 3 | பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி | அலகுகள் | 15 | 13.33 | 200.00 |
| 4 | உணவுப் பாதுகாப்பு மற்றும் வர்த்தகத்திற்கான தேசிய தர அபிவிருத்தி | மதிப்பீடு | 01 | 50.00 | 50.00 |
| 5 | விவசாயத் தகவல்களுக்காக ஒரு தரவு அமைப்பை நிறுவுதல் | அமைப்புகள் | 01 | 50.00 | 50.00 |

5.4. 2025.09.30 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | 118-02-03-093-2509-(12) (செயலூக்க மீள் நிதியுதவி) | 30.00 | 1.69 | 06 |
| 2 | 118-02-03-093-2509-(17) (மேலதிக வரவுசெலவு ஏற்பாடு ) | 10.00 | 3.83 | 38 |

5.5. 2025 ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியளவில் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

- இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப செயற்பாடுகள் 2025.06.05 அன்று ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்டப் பணிப்பாளரும் ஒரு சில அதிகாரிகளும் மட்டுமே தற்போது வரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். தேவையான ஏனைய அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனுமதியைக் கோரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி கிடைத்தவுடன் தேவையான அதிகாரிகளைத் துரிதமாகத் தெரிவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

- *30.09.2025 வரை அரசாங்க நிதியில் இருந்து செயலூக்க மீள் நிதியுதவியாக (Retroactive Financing) 1,685 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*
- *உலக வங்கியுடன் 2025.09.08 ஆம் திகதி இந்தச் செயற்திட்டம் தொடர்பான கடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்காக 118-02-03-093-2509-(12) என்ற செலவுத் தலைப்பின் கீழ் 30 மில்லியன் ரூபாய் நிதி இந்தச் செயற்திட்டற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிதி கிடைக்கும் வரை அந்தச் செலவுத் தலைப்பைப் பயன்படுத்த முடியாததால், 2025 ஆம் ஆண்டிற்காக 118-02-03-093-2509-(17) என்ற தலைப்பின் கீழ் 10 மில்லியன் ரூபாய் மேலதிகச் செலவுத் தலைப்பு அங்கீகரிக்கப்பட்டது. அந்தச் செலவுத் தலைப்பின் கீழ் 4.2 மில்லியன் ரூபாய் இந்தச் செயற்திட்டத்திற்கு கிடைத்ததுடன் அதிலிருந்து 3.832 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.*
- *வெளிநாட்டு நிதியைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*
- *தெரிவு செய்யப்பட்ட 9 குளங்களுக்கான களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 3 குளங்களுக்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்புக் குறித்த அறிக்கைகள் தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளதுடன், அவற்றிற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய அறிக்கைககளைத் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.*
- *செயற்திட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கமநல அபிவிருத்தித் திணைக்களம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களங்கள் (வடக்கு, வடமேல், கிழக்கு) மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபை ஆகியவற்றிலிருந்து செயற்திட்ட யோசனைகள் கிடைத்து வருவதுடன் அவற்றை ஆய்வு செய்த பின்னர் பொருத்தமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*06. தேசிய தாவர தனிமைப்படுத்தல் நிலையத்தின் ஆராய்ச்சி வசதிகளை விருத்தி செய்தல் - (JICA) – செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-041-2507*

*இலங்கை சர்வதேச தாவரப் பாதுகாப்பு மாநாட்டில் இணைந்துள்ளது. அதன்படி, தாவரங்கள், தாவரப் பாகங்கள் அல்லது விவசாயப் பொருட்களை உரிய தரங்களுக்கு இணங்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் இலங்கையின் தாவர தனிமைப்படுத்தல் நோக்கத்தின் கீழ் அடங்கும். மேலும், விவசாயிகளின் வறுமையைக் குறைத்தல், வெளிநாட்டு நாணய வருவாயை அதிகரித்தல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில், தாவரத் தனிமைப்படுத்தல் பணியை மிகவும் துல்லியமாகவும் அதிக செயல்திறனுடனும் மேற்கொள்வதற்கும், அத்துடன் இறக்குமதி அல்லது ஏற்றுமதியின்போது சர்வதேசச் சந்தையுடன் ஒருங்கிணைக்கும்போது பொருட்களின் தரத்தை மிகத் துல்லியமாக அடையாளம் காணும் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும், தாவர தனிமைப்படுத்தல் சேவையில் உள்ள உபகரணங்களைப் புதுப்பித்தல் மற்றும் மாற்றுவதற்காக ரூ. 259.6 மில்லியன் நிதியுதவியை ஜப்பானிய அரசாங்கம் (JICA) மூலம் 2017 ஆம் ஆண்டில் வழங்கி இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தாலும், அவ்வாறு செய்ய முடியாததால், 2025 ஆம் ஆண்டிற்குள் செயற்திட்டத்தை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 254.69 மில்லியன் ஆகும். விவசாயத் திணைக்களத்தின் கட்டுநாயக்க தேசிய தாவரத் தனிமைப்படுத்தல் நிலையம் மூலம் இந்த செயற்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளை ஏற்றுமதி செய்யும்போது, சில வெளிநாடுகள் ஆவி வெப்ப சிகிச்சையை (VHT) அத்தியாவசியமான தாவர சுகாதாரச் செயல்பாடாக நிபந்தனை இடுகின்றன. இதன் காரணமாக, பழங்கள் மற்றும் காய்கறி ஏற்றுமதியில் அத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள, ஜப்பான் நாட்டில் இருந்து உதவியாக ஒரு VHT இயந்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் தேசிய தாவரத் தனிமைப்படுத்தல் சேவை (NPQS) தற்போது அதில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது.*

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 2025.09.30 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1. | கொழும்பு – கட்டுநாயக்க தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல். (JICA) | 6.24 | 1.33 | 21 |

# கமத்தொழில் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

## 01. விவசாயத் திணைக்களம் (DOA)

*1.1.* தொலைநோக்கு

"தேசிய சுபீட்சத்திற்காக விவசாயத்தில் மேன்மையினை அடைந்து கொள்ளல். "

*1.2.* பணிகூற்று

"சமத்துவம் மற்றும் நிலைபேறான விவசாய அபிவிருத்தியை அடைதல், மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் விரிவாக்கம் செய்வதன் மூலம் நாட்டு மக்களுக்கு உணவு மற்றும் போசணைப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் விவசாயிகள் மீது அதிக கவனம் செலுத்தி அனைத்துப் பங்குதாரர்களுக்கும் உரிய சேவைகளை வழங்குதல்."

*1.3.* நோக்கங்கள்

விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பவற்றினை விருத்தி செய்தல் மற்றும் நுகர்வோர் ஏற்கக் கூடிய விலை ஒன்றிற்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்காக உணவுப் பயிர்கள் பிரிவின் பயனுறுதி மற்றும் உற்பத்தி என்பவற்றினைப் பேணி வருதல் மற்றும் விருத்தி செய்தல்.

*1.4.* பணிகள்

- விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- விவசாய தொழில்நுட்ப விரிவாக்கம் மற்றும் பயிற்சி
- விதை மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகித்தல்
- விதைச் சான்றளித்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு
- ஒழுங்குபடுத்தும் சேவைகள்

*1.5. 2026* ஆம் ஆண்டிற்கான நிதியியல் இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) | *2025.08.07* அன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது வாய்மொழியாக ஒப்புக்கொள்ளப்பட்ட மேலதிக ஒதுக்கீடு (மில். ரூபாய்) |
|---|---|---|---|
| *1* | மூலதன செலவுகள் | *4,499.00* | *1,797.00* |
| *2* | மீண்டுவரும் செலவுகள் | *7,874.16* | *390.00* |

*1.6. 2026* ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (விவசாயத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | *I.* விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | | | | |
| *1* | தேசிய விவசாய ஆராய்ச்சி கொள்கையின் கீழ் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள் (NARP) | ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | *100* | | *00.00* |
| *2* | சிறு அளவிலான ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் - JICA | ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | *14* | | *50.00* |

| தெ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| *3* | மரங்களை வெட்டி வீழ்த்தும் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் மண் பாதுகாப்புச் சட்டம் என்பவற்றை அமுல்படுத்துதல் | செயல்விளக்கங்களின் எண்ணிக்கை | *33* | | *5.00* |
| *4* | புதிய கலப்பின மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை மிளகாய், சோளம் மற்றும் வெங்காய வகைகளை உருவாக்குதல் மற்றும் விதை உற்பத்தி | ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | புதிய திறந்த மகரந்தச் சேர்க்கை மற்றும் கலப்பின வர்க்கங்களை மேம்படுத்துவதற்கான *70* ஆராய்ச்சிகள் | | *75.00* |
| *5* | இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி உணவுப் பயிர்கள் உற்பத்திக்கு காலநிலை எதிர்ப்புத்திறன் கொண்ட பசுமைத் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல் | ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | காலநிலை மாற்றத்தைத் தாங்கும் வர்க்கங்களை உற்பத்தி செய்வது தொடர்பான *42* ஆராய்ச்சிகள் | | *50.00* |
| | *ii.* விரிவாக்கம் மற்றும் பயிற்சி | | | | |
| *6* | ஊடக நிகழ்ச்சிகள் | தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | *1555* நிகழ்ச்சிகளை தயாரித்தல் (வானொலி *- 1403*, தொலைக்காட்சி *- 152*, விவசாயத் தொலைக்காட்சித் தொழில்நுட்பக் குறுஞ்செய்திகள், வணிகக் குறுஞ்செய்திகள் மற்றும் *1920* விவசாயப் பிரச்சினைகள் அடிப்படையிலான குறுஞ்செய்திகள்) | | *72.00* |
| *7* | விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த மாநாடு *(ASDA)* | மாநாடுகளின் எண்ணிக்கை | விவசாயத் திணைக்களத்தின் ஒரு வருடாந்த மாநாட்டை *(ASDA)* நடத்துதல் | | *9.00* |
| *8* | விவசாய தொழில்நுட்பப் பூங்காக்களைப் பராமரித்தல் | விவசாயத் தொழில்நுட்பப் பூங்காக்களின் எண்ணிக்கை | கன்னோறுவ, படஅத்த மற்றும் தியகம ஆகிய *3* விவசாயத் தொழில்நுட்பப் பூங்காக்களைச் செயல்விளக்கங்களாகப் பேணுதல் | | *18.00* |
| *9* | விவசாயக் கல்லூரிகளை அபிவிருத்தி செய்தல் | விவசாயக் கல்லூரிகளின் எண்ணிக்கை | *11* விவசாயக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் | | *240.00* |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| *10* | மண் வளத்தைப் பரிசோதிக்கும் வசதிகளை அபிவிருத்தி செய்தல் | மண் சுகாதார அட்டைகளின் எண்ணிக்கை | *20,000* | | *40.00* |
| *11* | சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி மூலம் நஞ்சு அற்ற உணவு உற்பத்திக்கு உதவி வழங்கள் | GAP சான்றளிக்கப்பட்ட பண்ணைகளின் எண்ணிக்கை | GAP சான்றளிக்கப்பட்ட பண்ணைகள் - *5000* | | *20.00* |
| *12* | பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களைப் பாதுகாப்பாகவும் பொருத்தமான முறையிலும் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் | ரூ. | வாகன வரியைச் செலுத்துதல் | | *12.00* |
| *13* | ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல் | சதவீதம் | மேலதிக உணவுப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்துதல் | | *800.00* |
| | *III.* விதைச் சான்றளித்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு | | | | |
| *14* | விதை உற்பத்தி மற்றும் கொள்வனவுக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் | பதிவு செய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட விதைகளின் அளவு | *700* மெற்றிக் தொன் ஏனைய களப் பயிர் விதைகள், *75,000* பூசல் நெல் விதைகள், மற்றும் *70* மெற்றிக் தொன் மரக்கறி விதைகள் | | *1,250.00* |
| *15* | விதைச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் விதை மற்றும் நடுகைப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தல் | எண்ணிக்கை | *15* விதைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், *1400* புதிய பதிவுகள் மற்றும் விதைச் சட்டத்தின் கீழ் *1600* பதிவு நீடிப்புகளை மேற்கொள்ளுதல் | | *40.00* |
| *16* | துரித விதைப்பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | விதைப்பண்ணைகளின் எண்ணிக்கை | *29* விதைப்பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் | | *500.00* |
| *17* | விதைச் சான்றளித்தல் நடவடிக்கைகளை வலுவூட்டுதல் | எண்ணிக்கை | மஹஇலுப்பல்லம விதை ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல், கன்னோறுவ விதைச் சான்றளிப்புச் சேவையின் அலுவலகக் கட்டிடத்தைப் பழுது | | *50.00* |

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | | | பார்த்தல் | | |
| *18* | விவசாய இரசாயனங்களால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் குறைத்தல் | எண்ணிக்கை | *ASTA* பயிற்சி வகுப்புகள், பறிமுதல் செய்யப்பட்ட பூச்சிக்கொல்லிகளை அழித்தல் மற்றும் கன உலோகங்களுக்கான மாதிரி பகுப்பாய்வு | | *50.00* |
| *19* | உள்நாட்டு விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை மேம்படுத்துதல் | எண்ணிக்கை | *3* விதை உருளைக்கிழங்குப் பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் | | *30.00* |
| *20* | தாவர மரபணுக் களஞ்சிய நிலையத்தின் தற்போதைய தாவர மரபணுக் களஞ்சிய வங்கியைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் | எண்ணிக்கை | மரபணு வள வங்கியைப் பழுது பார்த்தல் | | *8.00* |
| *21* | உயிர் பாதுகாப்பு மற்றும் தாவர சுகாதாரத் தேவைகளுக்கு அமைய இலங்கையின் தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திப் பொருட்களின் நுழைவாயில்கள் மூலம் வர்த்தகத்தை வலுப்படுத்துதல் | எண்ணிக்கை | விமான நிலையத் தாவர தனிமைப்படுத்தல் நிலையத்தில் வசதிகளை விருத்தி செய்தல் | | *25.00* |

*1.7. 30.09.2025* ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | *2025* ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | *30.09.2025* வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| *1* | மூலதன செலவுகள் | *867.00* | *158.46* | *18* |
| *2* | மீண்டுவரும் செலவுகள் | *7,128.00* | *5,166.34* | *72* |
| *3.1* | விவசாயத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் உள்ள விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| *3.1.1* | விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | *161.50* | *48.767* | *30* |
| *3.1.2* | விரிவாக்கம் மற்றும் பயிற்சி | *952.00* | *141.67* | *15* |
| *3.1.3* | விதைச் சான்றளித்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு | *2,113.00* | *561.03* | *27* |
| *3.2* | தேசிய விவசாய ஆராய்ச்சி கொள்கையின் கீழ் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள் *(NARP)* | *115.00* | *28.97* | *25* |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 3.3 | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் | 152.50 | 40.502 | 27 |
| | மூலதன உப கூட்டுத்தொகை | 3,494.00 | 820.94 | 23 |
| 4 | விவசாயத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் உள்ள விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் | 247.56 | 12.84 | 5 |
| | மொத்த கூட்டுத்தொகை | 3,741.56 | 833.78 | 22 |

*1.8. விவசாயத் திணைக்களத்தின் செலவுக் தலைப்பின் கீழ் (285) உள்ள விஷேட செயற்திட்டங்களின் 2025.09.30 ஆம் திகதியளவில் காணப்பட்ட பௌதீக முன்னேற்றம் – மொத்த நிகழ்ச்சித் திட்டங்களின் சுருக்கம்*

*1.8.1. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி*

*i.) மிளகாய், சோளம், வெங்காயம், மரக்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் புதிய கலப்பின மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை வகைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் விதை உற்பத்தி*

*களப் பயிர்கள்*

- *பீடைகள் மற்றும் நோய்களுக்கு எதிர்ப்புதிறனை உருவாக்குவதற்கு விசேட கவனம் செலுத்தி, மிளகாய், சோளம் மற்றும் வெங்காயம் ஆகிய பயிர்களின் பொருத்தமான நம்பிக்கை தரும் இன வரிசைகள் இனங்காணப்பட்டன.*
- *இனங்காணப்பட்ட உயர்ந்த பண்புகளைக் கொண்ட நம்பிக்கை தரும் இன வரிசைகள் தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை (NCVT) மற்றும் வர்க்க பொருத்த சோதனை (VAT) ஆகியவற்றின் கீழ் தொடர்ந்து பரிசோதனை செய்யும் பொருட்டு களத்தில் நிறுவப்பட்டன.*
- *ஏனைய களப் பயிர்களுக்காக விதை விதைக்கும் கருவி மற்றும் வெங்காயம் அறுவடை செய்யும் இயந்திரம் என்பவற்றை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்பத் திட்டமிடல் மற்றும் முன்செயலாக்க நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன.*

*நெல்*

- *2025 இல் வெளியிடப்படவுள்ள 3 வர்க்கங்கள் (Bw 15-971, Bw 14-509, Bw BLB 72-1) மற்றும் 2025/26 பெரும் போக வர்க்கப் பொருத்த சோதனைக்காக (VAT) விருத்தி செய்யப்பட்ட 3 வர்க்கங்கள் (Bg 15-1027, At 18-1322, Bw 17-764) என்பன இனங்காணப்பட்டுள்ளன.*
- *பேரளவு வர்க்கப் பொருத்தப்பாட்டுப் பரிசோதனையில் (LSVAT) 4 வர்க்கங்களும் (Bw 16-1567, Bg 16-2062, Bw 18-604, At 13-1532) மற்றும் வர்க்கப் பொருத்தப்பாட்டுப் பரிசோதனையில் (VAT) 2 வர்க்கங்களும் (Bw 18-1541, At 21-1088), உட்பட 8 புதிய வர்க்கங்கள் தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனையின் (NCVT) கீழ் 13 இடங்களில் பரிசோதிக்கப்பட்டன.*
- *25 வர்க்கங்களின் தரம் உறுதிப்படுத்தப்பட்ட இனவிருத்தி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.*
- *லபுதுவ ஆராய்ச்சி நிறுவனம் மூலம் நாற்று வீசி நடும் முறைக்கு ஒரு புதிய மாற்று முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அரிசி சார்ந்த 2 புதிய உற்பத்திப் பொருட்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.*

- ஆராய்ச்சி மற்றும் விதை உற்பத்திக்காக பெந்தொட்டை, போம்புவல ஆராய்ச்சி நிலங்களை அபிவிருத்தி செய்தல், ஆராய்ச்சிகளை மேம்படுத்த ஆய்வக உபகரணங்கள் கொள்வனவு செய்தல், கள தின நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், வெளியீடுகளை அச்சிடுவது மூலம் தொழில்நுட்பத்தைப் பரப்புவதற்கான பணிகள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<u>மரக்கறிகள்</u>

- *20 மரக்கறி வகைகளுக்கான (போஞ்சி, தக்காளி, பூசணி, பாகல், வெள்ளரி, வெண்டை, கறிமிளகாய், கத்தரி, சுண்டைக்காய், கரட், கெக்கிரி, அவரை, பயறு, பீர்க்கங்காய், கிழங்குப் பயிர்கள், கீரை வகைகள்) கலப்பின மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை புதிய வர்க்க விருத்தி ஆராய்ச்சி மற்றும் கள ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பரிந்துரைக்கப்பட்ட மரக்கறி வர்க்கங்கள் மற்றும் கலப்பின வர்க்கங்களுக்கான தரத்தில் சிறந்த இனவிருத்தி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.*
- *மரக்கறிச் செய்கைக்கு அவசியமான மண் ஆராய்ச்சிகள், இரசாயன ஆராய்ச்சிகள், நோய் மற்றும் பீடை தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பான ஆராய்ச்சிகள் என்பன மேற்கொள்ளப்படுவதுடன், பரிந்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.*

<u>பழங்கள்</u>

- *9 ஆராய்ச்சி நிலையங்களில் இடத்திற்குரிய மற்றும் பல-இடப் பரிசோதனைகளின் ஊடாக நம்பிக்கைதரும் பழப் பயிர்களின் இனவிருத்தி இன வரிகள் (14 பழப் பயிர் இனங்கள் - சுமார் 2000 இனவிருத்தி இன வரிகள்) மதிப்பீடு செய்தல், தெரிவு செய்தல் மற்றும் மரபணு விருத்தி செய்தல் ஆகியவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *ஹொரண பப்பாசிக் கலப்பினம் மற்றும் ஹொரண கோல்ட் பாஷன் ஃபுரூட் (கொடிதொடை) ஆகியவற்றின் பெற்றோர் சந்ததியின் இனவிருத்தி விதைகளின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.*
- *வெளியிடப்பட்ட பழ வர்க்கங்களின் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் - 5000 தாவரங்களுக்கான வேர்த் தண்டுகளை நடுதல், அரும்பு ஒட்டுதல் மற்றும் பதியம் செய்தல் ஆகியவை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.*
- *10 பழப் பயிர் இனங்களின் 5 கள மரபணு வங்கிகள் மற்றும் தாய் தாவர பழத் தோட்டங்களைப் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறன.*

*ii). இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்து உணவுப் பயிர் உற்பத்திக்கான காலநிலை தாங்குதிறன் கொண்ட பசுமை தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல்.*

<u>நெல்</u>

- *உவர்த்தன்மை மற்றும் நீரில் மூழ்குதல் என்பவற்றுக்காக 98 Ld இனவிருத்தித் தொடர்கள் பரிசோதிக்கப்பட்டதுடன், குளிர் மற்றும் வெப்பத்தை தாங்கக்கூடிய தொடர்கள் அறுவடை செய்யப்பட்டன.*
- *வறட்சியைத் தாங்கக்கூடிய தொடர்கள் தொடர்பான ஆய்வுகள் நடைமுறையில் உள்ளன. தெரிவு செய்யப்பட்ட நெல் தொடர்களின் கள நிலைமைகளில் உயிரற்ற அழுத்தங்களுக்குத் தகவமைவுத் திறன் காண்பதற்கான பரிசோதனைகளின் கீழ், அவை தற்போது அறுவடை செய்யப்பட்டு, தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது.*

- *பிரதான நோய்களுக்கான தொடர் பரிசோதனைகளின் கீழ் சோதனைகள் நிறைவு செய்யப்பட்டு, தரவுப் பகுப்பாய்வு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. பிரதான பீடைகளுக்கான தொடர் பரிசோதனைகளின் கீழ் தரவு சேகரிப்பு நிறைவடைந்துள்ளது.*

*களப் பயிர்கள்*

- *அவரையினப் பயிர்ச் செய்கையில் பிரதான பீடைகளை இனங் காணல் மற்றும் பீடைக் குடித்தொகை மற்றும் காலநிலை அளவுரு என்பவற்றுக்கும் இடையிலான தொடர்பை இனங்காண்பதற்காக களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அந்த தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.*
- *இலங்கையின் உலர்வலயத்தின் செங்கபில நிற மண்ணில் கண்டலூப் / முலாம்பழ (Cucumis melo L.) பயிர்ச் செய்கைக்கு பொருத்தமான நீர்ப்பாசன முறைகள் பற்றி ஆய்வு செய்வதற்கான ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அது பற்றிய தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.*
- *வரண்ட நிலைமைகளின் கீழ் ஏற்படும் அழுத்தத்திற்கு (Drought Stress) சோயா அவரை மற்றும் கௌபி ஆகியவற்றின் பிரதிபலிப்பு மதிப்பீடு செய்யப்படுவதுடன் , சோயா அவரையின் 15 சுட்டிகளில் இருந்து 5 சுட்டிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.*
- *பெரிய விதை கொண்ட நிலக்கடலை வகைகளில் காய்கள் நிரம்புவதற்காக வெவ்வேறு மண் வகைகளின் கீழ் பயன்படுத்தக்கூடிய ஊட்டச்சத்து முகாமைத்துவப் பொதியை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், இளங் கபில நிற மண்ணில் ஜிப்சம் ஹெக்டேயருக்கு 200 கிலோகிராம் வீதம் பயன்படுத்திய போது நிலக்கடலை அறுவடையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.*
- *பாதுகாக்கப்பட்ட மற்றும் பாரம்பரிய கமத்தொழில் முறைகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட களப் பயிர்களின் வளர்ச்சி மற்றும் அறுவடையை ஒப்பிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், பாதுகாக்கப்பட்ட விவசாயத்தில் வைக்கோலைப் பயன்படுத்துவதன் மூலம் தாவரத்தின் வளர்ச்சி அதிகரிப்பதுடன், நிலையானதும் உறுதியானதுமான அறுவடையையும் பெற முடியும்.*
- *மட்டக்களப்பு மாவட்டத்தில் மிளகாய்ச் செய்கை மேற்கொள்ளப்படும் ரெகசோல் (Regosol) மண்ணில் நீரைத் தக்கவைக்கும் திறனை விருத்தி செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு குறித்த ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

*மரக்கறிகள்*

- *உழவியல் முறைகள், ஊட்டச்சத்து முகாமைத்துவம் மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் ஆகியவற்றுக்கான ஆய்வுகள் உள்ளிட்ட பயிர்ச் செய்கைப் பரிசோதனைகள் இடம்பெற்று வருவதுடன், பீர்க்கு மற்றும் பாகல் விதை உற்பத்திப் பொதிகள் மற்றும் உயிரியல் அடிப்படையிலான உருளைக் கிழங்குப் பூச்சு போன்ற சில பரிசோதனைகள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன.*
- *ஆய்வகப் புனரமைப்பு, ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளை அபிவிருத்தி செய்தல் உட்பட ஆராய்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*பழங்கள்*

- *வெவ்வேறு விவசாய - சூழலியல் வலயங்களில் உயிரற்ற அழுத்தங்களுக்கு எதிர்ப்புதிறனை மதிப்பிடுவதற்காக, மஹஇலுப்பல்லம, ரஹன்கல மற்றும் மத்துருகெட்டிய களங்களில்*

*பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தெரிவு செய்யப்பட்ட வர்க்கங்களின் நடுகைப் பொருட்கள் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.*

- *தெரிவு செய்யப்பட்ட 3 வர்க்கங்களிலிருந்து 150 ஒட்டுத் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, களத்தில் நிறுவுவதற்காக பிராந்திய கமத்தொழில் ஆராய்ச்சி நிலையம், பண்டாரவளை மற்றும் தானிய பருப்பு மற்றும் எண்ணெய் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (GLORDC), அங்குணகொலபெலஸ்ஸ ஆகிய இரண்டு இடங்களில் நிலம் பண்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *வெவ்வேறு விவசாய - சூழலியல் வலயங்களில் மாம்பழம் மற்றும் ஆனைக்கொய்யா வர்க்கங்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன், களத்தில் நாற்றுகளின் செயற்பாட்டை மதிப்பிடுவதற்காக அன்னாசி நாற்றுகள் களத்தில் நிறுவப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.*
- *பொறி சேகரிப்புகளிலிருந்து மற்றுமொரு பழ ஈ இனம் (Bactrocera species) கண்டறியப்பட்டதுடன், இதனை இனங்காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.*

*<u>மண்</u>*

- *மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் மரக்கறிச் செய்கையின் போது ஏற்படும் மண் அரிப்பைக் குறைத்தல் மற்றும் மண் ஊட்டச்சத்தை மேம்படுத்தல் என்பவற்றுக்காக கலப்புப் பயிர்ச் செய்கையாகப் தானிய பருப்பு வகைகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறைப் பரிசோதிப்பதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*
- *மண் பாதுகாப்புக் கட்டமைப்புகளான கல்வேலி அமைத்தல் மற்றும் SALT வரம்புகளை அமைத்தல் என்பன பொருளாதார ரீதியாக இலாபகரமற்ற முறைகள் என்பதால், அந்தக் கட்டமைப்புக்களுக்கு மாற்றீடாக பொருளாதார ரீதியாக இலாபகரமான பல்-பயிர் வரம்பை அறிமுகப்படுத்துவதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*iii). மண் பாதுகாப்புச் சட்டம்*

- *நுவரெலியா, மொனராகலை, பதுளை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் கள மாதிரிகளை விருத்தி செய்வதற்காக இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், பாதுகாப்புப் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*
- *மாத்தளை - பலகட்டுவ, ரொசல்ல, பஹல கடுகன்னாவ, கிரியெல்ல – மாதம்பே, கொடகவெல மற்றும் கலவான பிரதேசங்களில் வீதிகளின் இருபுறங்களிலும் 6 பதாகைகள் பொருத்தப்பட்டுள்ளன.*
- *பாதுகாப்புப் பிரதேசங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காகப் பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.*

*iv). தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கையின் கீழ் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள் (NARP)*

*இதன் கீழ் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

- *உயர் தரமான மற்றும் நீண்ட கால விதைகளைக் கொண்ட கத்தரி விதைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு ஒரு விவசாய முகாமைத்துவப் பொதியை விருத்தி செய்தல்.*
- *இலங்கையில் மரவள்ளிக்கிழங்கு நெய்யல் பூச்சி (Hemiptera tingidea) பற்றிய இலங்கையின் முதல் அறிக்கை தொடர்பான பொருளாதார முக்கியத்துவம் மற்றும் பீடைக் கூட்டத்தைக் குறைத்தல் ஆகியவற்றை மதிப்பிடுதல்.*
- *சுண்டைக்காய் (Solanum turvum) இன் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை விருத்தி செய்யும் பொருட்டு உழவியல் முகாமைத்துவ நடைமுறைகளை உகந்ததாக்குதல்.*

- பாரம்பரிய மற்றும் மூலக்கூறு இனப்பெருக்கம் மூலம் பயிரிடப்பட்ட போஞ்சி வகைகளுக்கு ஆந்த்ராக்னோஸ் எதிர்ப்புதிறனை அறிமுகப்படுத்துதல்.
- உணவுப் பயிர்களில் உள்ள பிரதான பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்காக குறைந்த சக்தி புரையேற்ற முறையைப் பயன்படுத்தி மூலிகையாலான நானோ எமல்ஷன் பூச்சிக்கொல்லி கலவைகளை விருத்தி செய்தல்.
- இலங்கையின் கறிமிளகாய்ச் செய்கையில் ஆந்த்ராக்னோஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்காகத் தாவரத்துக்குள் வாழும் நன்மை பயக்கும் பூஞ்சணம் மூலம் ஒரு உயிர் பூஞ்சணக் கொல்லியை உற்பத்தி செய்தல்.
- உயர் மட்ட ஏற்றுமதிச் சந்தைகளை இலக்காகக் கொண்டு கத்தரி, மிளகாய், வெண்டை மற்றும் கீரை வகைகள் என்பவற்றுக்கான ஒருங்கிணைந்த பயிர் உற்பத்திப் பொதிகளை விருத்தி செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- உருளைக் கிழங்கு மற்றும் மேல்நாட்டு மரக்கறிகளில் ஏற்படும் மென் அழுகல் நோய்க்கு *(Pectobacterium carotavorum)* எதிராக நோய் முகாமைத்துவ உத்திகளை விருத்தி செய்தல்.
- *Ralastonia solanacerium* (ரால்ஸ்டோனியா சொலனேசியரம்) இனால் ஏற்படும் பாகல் பாக்டீரியா வாடல் நோயைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த நோய் முகாமைத்துவ வரைமுறையை விருத்தி செய்தல்.
- கத்தரி பாக்டீரியா வாடலுக்கு எதிர்ப்புதிறன் கொண்ட வகைகளின் மரபணுக் களஞ்சியத்தை மதிப்பிடுதல் மற்றும் கலப்பினமற்ற தொடர்களை விருத்தி செய்தல்.
- குறை பாவனைப் பழங்களிலிருந்து இனிப்புப் பொருட்களை உற்பத்தி செய்வதை ஊக்குவித்தல்: ஜெல்லி மிட்டாய் மற்றும் சம் டொபி உற்பத்தி செய்வது தொடர்பான ஒரு ஆய்வு.
- உள்நாட்டு நிலைமைகளுக்குப் பொருந்தும் வகையில் அதிக போசணைப் பெறுமானம் மற்றும் வற்றாலைக் கிழங்கு வண்டுகளுக்கு எதிர்ப்புதிறன் கொண்ட அதிக விளைச்சலை வழங்கும் வற்றாலைக் கிழங்கு வகைகளை விருத்தி செய்தல்.
- ப்ரோபயோட்டிக் *(Probiotic)* பண்புகள் நொதித்த அரிசி இனிப்புகளை மேம்படுத்துகின்றன— நேரம், வெப்பநிலை மற்றும் நுண்ணுயிரி ஊடகம் ஆகியவை தாக்கம் செலுத்துகின்றன.
- உணவு உற்பத்தித் தொழிற்துறையில் பயன்படுத்துவதற்காக எலுமிச்சம் பழத்திலிருந்து *(Citrus aurantifolia)* பெறப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்யும் தொழில்நுட்பம் மற்றும் தர மதிப்பீடு.
- இலங்கையில் புதிய கீரை வகைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் பிரதான கீரை வகைகள் பயிரிடப்படும் பிரதேசங்களை வரைபடமாக்குதல்.
- மரக்கறிப் பயிர்களில் பொதுவாகக் காணப்படும் பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பூஞ்சை மற்றும் நோய்க்கிருமி நுண்ணுயிர்க் கொல்லிகளை (பியூவரியா இனங்கள், மெட்டாரைசியம் இனங்கள், ஐசாரியா இனங்கள்) விருத்தி செய்தல்.
- உயிரியல் கரி கலந்த கொம்போஸ்ட் உரத்தை உற்பத்தி செய்வதில் மண் போசணை மேம்படும் விதம் மற்றும் பயிர்ச் செய்கையில் அதன் தாக்கம் பற்றிய ஆய்வு.
- முள் சீத்தாப்பழத்தின் பூ உருவாக்கத்தைத் தூண்டுவதன் மூலம் பூத்தலை தூண்டுவதன் ஊடாக விளைச்சலை அதிகரித்தல், பழ வளர்ச்சியின் உறக்க காலத்தைக் குறைத்தல், ஒரே நேரத்தில் அதிக பழங்களை அறுவடை செய்தல் மற்றும் தரமான விதையில்லா பழங்களை உற்பத்தி செய்தல்.

- *F1 கலப்பின வகைகளை விருத்தி செய்வதற்காக அதிக விளைச்சல் மற்றும் சிறந்த தரத்திலான கலப்பினமற்ற தொடர்களை விருத்தி செய்தல்.*
- *பலாப் பழ மரபணுக் களஞ்சியத்தைச் சேகரித்தல், மதிப்பீடு செய்தல், இயல்புப்படுத்துதல் மற்றும் தெரிவு செய்தல்.*
- *இலங்கையில் எலுமிச்சை (citrus) செய்கையில் தோன்றும் வைரஸ்கள் மற்றும் வைரொய்ட்களை இனங்காணுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்.*
- *இலங்கையில் கொடிதொடைச் செய்கையுடன் தொடர்பான வைரஸ்களை இனங்காணுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் புதிய வைரஸ்களின் இயல்புகளை இனங்காணுதல்.*
- *வெளிநாட்டு மரபணு மூலங்களைப் பயன்படுத்தி பப்பாசியின் (Carica papaya) கலப்பினமற்ற தொடர்களை விருத்தி செய்தல்.*
- *சிறந்த தரத்திலான அன்னாசிச் செய்கைக்கு மிகவும் பொருத்தமான இடங்களை இனங்காண்பதற்காக இலங்கையின் வெவ்வேறு விவசாய - சூழலியல் வலயங்களில் பயிரிடப்பட்ட இரண்டு அன்னாசி வகைகளின் பௌதீக, இரசாயன மற்றும் ஒட்சியேற்ற எதிர்ப்புதிறன் இயல்புகளை மதிப்பிடுதல்.*
- *சோளச் செய்கையில் படைப் புழுவைக் (Spodoptera frugiperda) (J.E. Smith) (Lepidoptera: Noctuidae) கட்டுப்படுத்துவதற்கான தற்போதைய ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டுப் பொதியை விருத்தி செய்தல்.*
- *சேதனப் பயிர்ச் செய்கையின் கீழ் எள் மற்றும் பாசிப்பயறு ஆகியவற்றின் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்.*
- *முருங்கை இலைகள் மற்றும் காய்கள் உற்பத்திக்கு முருங்கை (Moringa olefera) வர்க்கங்களை விருத்தி செய்தல்.*
- *நிலக்கடலையில் அஸ்பெர்ஜில்லஸ் (Aspergillus spp.) இனம் மூலம் அஃப்லாடாக்சின் சேதம் ஏற்படும் கட்டத்தை இனங்காணுதல் மற்றும் கட்டுப்படுத்துதல்.*
- *விவசாயிகளின் பங்களிப்பு அணுகுமுறையைப் பயன்படுத்தி மழை நீரைப் பெற்று பயிர் செய்யும் தொகுதிகளுக்கு குறுகிய கால நிலக்கடலை வர்க்கங்களை விருத்தி செய்தல்.*
- *இலங்கையில் புளி மற்றும் இனிப்புப் புளியைப் பாதுகாத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் பரிந்துரைத்தல்.*
- *இறக்குமதி செய்யப்பட்ட டஞ்சரீன் பழத்திற்குப் பதிலாக இலங்கையின் டஞ்சரீன் (ஹீன் நாரங்) வர்த்தகச் செய்கைக்கான தொழில்நுட்ப மேம்பாடு, உருவவியல் பண்புகள் பற்றிய விஞ்ஞான ஆய்வு செய்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்திய உற்பத்திகளை விருத்தி செய்தல்.*
- *வறட்சியைத் தாங்கக்கூடிய சோயா அவரை வர்க்கங்களை விருத்தி செய்தல்.*
- *உயர்ந்த தரத்திலான விதைகளை (பெரிய, பளபளப்பான, பச்சை நிறமான, குறைந்த விதைகளைக்) கொண்ட பாசிப்பயறு வர்க்கங்களை உற்பத்தி செய்தல் மற்றும் வர்க்கங்களின் இலைச் சித்திர வைரஸ் மற்றும் வெள்ளைப் பூசண நோய் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு திறனை விருத்தி செய்தல்*
- *இலங்கையின் நெற் செய்கையில் பீடைகொல்லிகளின் பாவனையைக் குறைப்பதற்காக பழுப்பு நிறத் தாவரத் தத்தி (Nilaparvata lugens) மற்றும் வெள்ளை நிறத் தாவரத் தத்தி (Sogatella furcifera) என்பவற்றுக்காக சுற்றுச்சூழலுக்கு இணக்கமான முகாமைத்துவப் பொதியை மதிப்பிடுதல்.*
- *நெற் செய்கையில் நைட்ரஜன் உரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்காக ஒரு புதிய இனவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்கும் பொருட்டு பங்களிக்கும் பெற்றோர்*

*சந்ததியாகப் பயன்படுத்துவதற்கு நெற் செய்கையில் நைட்ரஜன் பயன்பாட்டின் வினைத்திறன் இயல்புகளை ஆய்வு செய்தல்.*

- *களை விதை இருப்பைக் குறைப்பதற்காக இடைகால போகத்தில் பயிர்ச் செய்கை பற்றி ஆய்வு செய்தல்.*
- *இலங்கையின் நெல்லில் மஞ்சள் கரிப்பூட்டை (False Smut) நோயைப் பற்றியும், அதன் முகாமைத்துவ உத்திகள் பற்றியும் ஆய்வு செய்தல்.*
- *இரும்பு நச்சுத்தன்மைக்கு எதிர்ப்புதிறன் கொண்ட அரிசி மரபணுக் களஞ்சியத்தின் உருவவியல் மற்றும் மரபணு இயல்புகள் என்பவற்றைப் பரிசோதித்தல்*
- *களை நெல் விதைகளின் இருப்பைக் குறைப்பதன் மூலம் களை நெல்லைக் கட்டுப்படுத்துவதற்கான பொதியொன்றை விருத்தி செய்தல்.*
- *தாழ்நில ஈரவலயத்திற்கு இசைவாக்கம் அடையக்கூடிய புதிய தாவர வகைகளுடன் நெல் வர்க்கங்களின் வேர்த் தொகுதி இயல்புகளை விருத்தி செய்தல்.*
- *இலங்கையின் தாழ்நில உலர்வலயத்தில் நெற் செய்கையில் நைட்ரஜன் பயன்பாட்டின் வினைத்திறன், மண் இயல்புகள், வளர்ச்சி, அறுவடை மற்றும் தரம் என்பவற்றின் மீது கரி உமி மற்றும் யூரியா உரத்தின் வெவ்வேறு மட்டங்களின் தாக்கம்.*
- *பழுப்பு நிறத் தாவரத் தத்தி (BPH), பாக்டீரியா இலை அழுகல் (BLB) மற்றும் இலை வெடிப்பு என்பவற்றுக்காக மூலக்கூற்று இனப்பெருக்க அணுகுமுறைகள் கொண்ட பல்-எதிர்ப்புதிறன் சந்ததிகளை விருத்தி செய்தல்.*
- *உணவுப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காகப் பயனுள்ள இயல்புகளை இனங்காண்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் பௌதீக, பௌதீக இரசாயன இயல்புகள், ஒட்சியேற்ற எதிர்ப்புதிறன் செயற்பாடு மற்றும் கிளைசீமிக் சுட்டி என்பன பற்றிய பரீட்சார்த்த ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுதல்.*
- *பலவேறு நன்மைகள் கொண்ட நவீனமயப்படுத்தப்பட்ட பயிர் நிறுவும் முறையாக ஹைட்ரோஜெல் பூச்சு செய்யப்பட்ட நெல் விதையை உருவாக்குதல்.*
- *இலங்கையின் அரிசியில் பாக்டீரியா இலை வெளிறல் நோயை ஏற்படுத்தும் சந்தோமோனாஸ் ஒரிசே பிவி ஒரிசே (Xanthomonas oryzae pv oryzae) இன் நோய் வகைகளை உருவவியல் ரீதியாகவும், மூலக்கூறு ரீதியாகவும் இனங்காணுதல்.*
- *அறுவடை இடைவெளியைக் குறைப்பதற்காக காலநிலைத் தாக்கத்தைக் குறைத்து இயல்புகளை உறுதிப்படுத்துதல் மற்றும் உகந்ததாக்குதல்.*
- *வெவ்வேறு சுற்றுச்சூழல் மற்றும் களஞ்சிய நிலைமைகளின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி மற்றும் மேலதிக உணவுப் பயிர் விதைகளின் உயிர்ச்சக்தியைப் பாதுகாக்கும் வகையிலான களஞ்சியப்படுத்தல் காலத்தை எதிர்வுகூறல்.*
- *மரக்கறிப் பயிர்களின் (கறிமிளகாய், தக்காளி மற்றும் பாகல்) விதை வீரியம், சக்தி மற்றும் அறுவடையை மேம்படுத்துவதற்காக விதை முளைப்புத் தொழில்நுட்பங்களை (priming technology) விருத்தி செய்தல்.*
- *இலங்கையில் காணப்படும் சிவப்பு தரவுப் பட்டியலில் உள்ள மற்றும் ஏனைய கொடிவகைக் கிழங்கு இனங்கள் பற்றிய ஆய்வு, உருவவியல் மற்றும் மரபணுவியல் இயல்புப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு.*

*1.8.2. கமத்தொழில் விரிவாக்கம் மற்றும் பயிற்சி*

*i.) விவசாயக் கல்லூரிகிளை அபிவிருத்தி செய்தல்*

- *11 விவசாயக் கல்லூரிகளில் (பெல்வெஹெர, குண்டசாலை, வவுனியா, அங்குணகொலபெலஸ்ஸ, கரபிஞ்ச, அனுராதபுரம், பிபில, வாரியப்பொல, லபுதுவ, பாலமுனை மற்றும் பரந்தன்) உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *அனுராதபுர விவசாயக் கல்லூரியின் விடுதிக் கட்டடத்தை புனரமைக்கும் (கட்டம் 2) பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *அங்குணகொலபெலஸ்ஸ விவசாயக் கல்லூரியின் 1வது மற்றும் 2வது விரிவுரை மண்டபங்களைப் புனரமைத்தல் மற்றும் நிர்வாகக் கட்டடத்தில் உள்ள மாநாட்டு மண்டபத்தைச் சுகாதார வசதிகளுடன் புனரமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஆண்கள் விடுதியைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *பரந்தன் விவசாயக் கல்லூரியின் சமையலறை மற்றும் உணவுக் கூடத்தைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன், லபுதுவ விவசாயக் கல்லூரியின் களஞ்சியக் கட்டடத்தை பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *வாரியப்பொல விவசாயக் கல்லூரியின் புதிய விடுதி நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதுடன், பாலமுனை விவசாயக் கல்லூரியின் பெண்கள் விடுதி நிர்மாணப் பணிகள் (கட்டம் II) நிறைவு செய்யப்பட்டுள்ளன.*
- *வவுனியா விவசாயக் கல்லூரியில் கழிவறை வசதிகளுடன் கூடிய இரு புதிய காவலர் அறைகளை கட்டியமைத்தல், ஊழியர் ஓய்வு அறையின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல். மேலும் கழிவறையைப் பழுதுபார்க்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. விருந்துபசார இல்லம் பழுதுபார்ப்பு (கட்டம் 1) நடவடிக்கைகளுக்காக விலைமனுக் கோரப்பட்டுள்ளது.*
- *குண்டசாலை விவசாயக் கல்லூரியின் பிரதான கட்டடத்தின் கழிவறைப் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதுடன், பிரதான நுழைவாயில் கூரையின் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *கரபிஞ்ச விவசாயக் கல்லூரியின் விடுதிக் கூரையைப் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன், பெல்வெஹெர விவசாயக் கல்லூரியின் உத்தியோகபூர்வ இல்ல இலக்கம் 1, 4, 5, 20 ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*ii.) விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த மாநாடு (ASDA)*

- *விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த மாநாடு 2025 செப்டம்பர் 12 ஆம் திகதி வெற்றிகரமாக நடைபெற்றது.*

*iii.) ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள்*

- *1923 வானொலி நிகழ்ச்சிகள் (கொழும்பு - 496, ரஜரட்ட - 151, கந்துரட்ட - 494, ருஹுண - 749, யாழ்ப்பாணம் - 33) ஒளிபரப்பப்பட்டதுடன், 114 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் (கொவி பிமட்ட அருணலு - 38, மிஹிகத்த திணுவோ - 37, உயரும் உழவும் - 39) ஒளிபரப்பப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.*
- *மொத்தப் பார்வையாளர்கள் எண்ணிக்கை: மிஹிகத்த திணுவோ - 58,761, கொவி பிமட்ட அருணலு - 48,233, உயரும் உழவும் - 29,493, யூடியூப் - 1,308,221 மற்றும் முகநூல் - 334,307.*

- *விவசாயப் பதிப்பகப் பிரிவு மூலம் 19,742 புத்தகங்கள், 7450 மீள் பிரதியாக்கம் மற்றும் 5000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டதுடன், வெளியீடுகளின் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் 1,918,844 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*iv.) விவசாயத் தொழில்நுட்பப் பூங்காக்களைப் பராமரித்தல்*

- *மக்களிடையே பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்துவதற்காக கன்னோருவ மற்றும் படஅத்த விவசாயத் தொழில்நுட்பப் பூங்காக்கள் மாதிரிகளாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கன்னோருவவுக்கு வருகை தந்த மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை 52,968 (உள்நாட்டு - 52,421, வெளிநாட்டு - 547) ஆகும். அதன் மூலம் 1,324,200.00 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. படஅத்தவுக்கு வருகை தந்த 17,380 விருந்தினர்களிடமிருந்து (உள்நாட்டு - 17,259, வெளிநாட்டு - 121) 742,948.72 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. (நுழைவுச் சீட்டுகள்/ கமநல உற்பத்திப் பொருட்கள்/ மீன் சிகிச்சை)*

*v.) மண் வளத்தைப் பரிசோதிக்கும் வசதிகளை அபிவிருத்தி செய்தல்*

- *நெற் செய்கை நிலங்களுக்கு மண் பரிசோதனையின் அடிப்படையில் உரப் பரிந்துரைகளை அறிமுகப்படுத்துவதற்காக மண் மாதிரிகளைச் சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 4 வர்ணமாலை ஒளிமானியையும் (Spectrophotometers), ஒரு இலக்கமுறை pH மீட்டரையும் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டது.*
- *மொனராகலை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்காக இறக்குமதி செய்யப்படவுள்ள ஆய்வக உபகரணங்களுக்கான கொள்வனவு ஆணை வழங்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட மட்டத்திலான 3 மண் ஆய்வகங்கள் (அம்பாறை, மொனராகலை மற்றும் ஹசலக) பரிசோதிக்கப்பட்டன.*

*vi.) சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி மூலம் நஞ்சு அற்ற உணவு உற்பத்தி மற்றும் உணவு உற்பத்திக்கு விவசாயிகளுக்கு உதவுதல்*

- *"சிறந்த விவசாய நடைமுறைகள்" (GAP) ஐப் பின்பற்றும் 236 விவசாய பண்ணைகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் 586 பண்ணைகள் முழுமையாக விருத்தி செய்யப்பட்டு GAP சான்றிதழுக்காக விண்ணப்பித்துள்ளன. மேலும் 1927 GAP விவசாய பண்ணைகளில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *காளான் மற்றும் பெரும்போக நெற் செய்கைக்கான GAP நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்காக 100,000 முத்திரை இடப்பட்ட காளான் பைகள் மற்றும் 5 கிலோகிராம் அரிசிப் பைகள் 60,000 என்பவற்றுக்கான பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அவை விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன. உரிய பெறுமதி சேர்க்கப்பட்ட GAP காளான் மற்றும் அரிசிப் பைகள் பெரிய அங்காடிகளில் விற்பனை செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.*
- *விவசாயிகளுக்கான 300 பயிற்சிப் பட்டறைகளும், சந்தைப்படுத்தலை இலக்காகக் கொண்டு 2 பிரதான பெரிய அங்காடி வலையமைப்புகளுடன் GAP சந்தைப்படுத்தல் பயிற்சிப் பட்டறைகளும் நடத்தப்பட்டுள்ளன.*
- *ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு 137 மெற்றிக் தொன் மரக்கறிகள் மற்றும் பழங்களை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*vii.) ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் செயற்திட்டம்*

- *மிளகாய்ச் செய்கையின் உற்பத்தியை மேம்படுத்துதல்*

*MICHHY1 கலப்பின மிளகாய் விதைகள் 15 கிலோகிராம் மற்றும் 14 நீர்ப் பம்பிகள் 50% மானியத்தின் கீழ் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டதுடன், வீட்டுத் தோட்ட மட்டத்தில் உலர்ந்த மிளகாய் உற்பத்தி செய்வதற்காக 200,000 பயிர்ச் செய்கைப் பைகளைக் கொள்வனவு பணிகள் என்பன நிறைவடைந்துள்ளன. அறுவடை ஆய்வுத் தரவுகளின் துல்லியத் தன்மையை மேம்படுத்துவதற்காக 7 அறுவடை ஆய்வுப் பயிற்சிகள் மற்றும் 32 நில அளவை கணக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. அம்பாறை, அனுராதபுரம் மற்றும் மொனராகலை ஆகிய பிரதேசங்களில் 15 தொழில்நுட்ப விரிவாக்கப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.*

- *இலங்கையில் வெங்காயம் பயிரிடக்கூடிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மானிய உள்ளீட்டு வழங்கல் திட்டம் மூலம் பெரிய வெங்காயம் மற்றும் மெய் விதை உற்பத்தியை விருத்தி செய்தல் மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்.*

*உற்பத்தித்திறனை விருத்தி செய்வதற்காக, 100 சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், மானிய அடிப்படையில் 163 பெரிய வெங்காய உற்பத்தி அலகுகளை நிறுவுவதற்கும், கலென்பிந்துனுவெவ விவசாய சங்கங்களுக்கு இரண்டு பாத்தி தயாரிக்கும் இயந்திரங்களுக்காக விலைமனுக் கோரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*
*சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்கு 30 உற்பத்தி அலகுகளை நிறுவுவதற்கு மானியம் வழங்கப்பட்டதுடன், 2,250 பிளாஸ்டிக் கூடைகளுக்கான பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. டிசம்பர் மாதம் அளவில் 60,000 கிலோகிராம் தாய் குமிழ்களை உற்பத்தி செய்வதற்காக 600 விதை உற்பத்தி அலகுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பொலித்தீன் மற்றும் மலர் தாங்கும் வலைகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*
*மெய் விதை உற்பத்திக்கு 50% விவசாயி பங்களிப்பின் கீழ் தற்காலிக மழை மறைப்புகளை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், சிறிய அளவிலான மழை மறைப்புகளுக்கான தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதன் மூலம் சந்தைப்படுத்தலை வலுப்படுத்துவதற்காக குளிர்பதனக் களஞ்சிய அறை ஒன்றை நிறுவுதல் மற்றும் பொதியிடுவதற்கான உள்ளீடுகளை வழங்குவது தொடர்பான பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டது. விவசாயிகளுக்கான பயிற்சிகள் மற்றும் அறுவடை ஆய்வுப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

- *உள்நாட்டு கலப்பின சோள உற்பத்தியை விருத்தி செய்தல் மற்றும் பிரபலப்படுத்துவதற்கான செயற்திட்டம் - 2025*

*உள்நாட்டு கலப்பின சோள விதைகள் மற்றும் பெற்றோர் வர்க்க உற்பத்தி 150 ஏக்கரில் நிறைவடைந்துள்ளதுடன், உயர்-அடர்த்தி முறையைப் பயன்படுத்தி 8,891 ஏக்கரில் மாதிரிகள் நிறுவப்பட்டன. விவசாயிகளுக்கான ஏழு பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன், 3,000 சுவரொட்டிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. சோள விதைகளின் தரத்தைப் பேணுவதற்காக ஈரப்பதன் மானிகளை கொள்வனவு செய்வதற்காக கேள்விப் பத்திர சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

- *உருளைக் கிழங்கு உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்*

*கள ரீதியில் உருளைக் கிழங்கு விதை உற்பத்தியை 3,000 மெற்றிக் தொன் இலிருந்து 10,000 மெற்றிக் தொன் ஆக அதிகரிப்பதற்காக 50% மானியத்தின் கீழ் 0.25 மில்லியன் G0 விதைகள் வழங்கப்பட்டன. தற்போது, 120 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு சீதாஎளியவில் உள்ள குளிர்பதனக் களஞ்சியங்களில் சேமிக்கப்பட்டுள்ளதுடன், சீதாஎளிய மற்றும் பிதுருதாலாகல பண்ணைகளில் விதை மற்றும் குளிர்பதன வசதிகளை விருத்தி செய்வதற்காக கேள்விப் பத்திரம்*

*வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலான நடவடிக்கைகள் 2025 நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

- *2025 ஆம் ஆண்டில் இலங்கையில் பாசிப்பயறு உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்*

*சுய பாசிப்பயறு விதை உற்பத்தியை விருத்தி செய்வதற்கும், பயிர்ச் செய்கையைப் பரவலாக்குவதற்கும் கள மாதிரிகளுக்காக 4,620 கிலோகிராம் விதைகள் விநியோகிக்கப்பட்டது/ கொள்வனவு செய்யப்பட்டதுடன், உற்பத்தித்திறனை அதிகரிக்கும் மாதிரிகளுக்காக 320 கிலோகிராம் விதைகள் மற்றும் விவசாய இரசாயனங்கள் வழங்கப்பட்டன. செலவைக் குறைத்து, களஞ்சிய நிலைமைகளை விருத்தி செய்வதற்காக 50% மானியத்தின் கீழ் 100 விதை விதைக்கும் கருவிகள், 50 சூரிய மின்சார வேலிகளுக்கான பிறப்பாக்கிகள், விதை பிரிக்கும் இயந்திரங்கள் மற்றும் மூன்று அடுக்கு பைகளுக்கான கொள்வனவுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பயிற்சி நிகழ்ச்சிகள், உயர் விளைச்சல் மாதிரிகள் மற்றும் பாசிப்பயறு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருள் விருத்தி என்பன விவசாயத் திணைக்களத்தின் பல்வேறு நிலையங்களில் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக, 2,000 சுவரொட்டிகள் மற்றும் 4,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டதுடன், விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக ஒரு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. விவசாயிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் 51 பயிற்சிகள் நிகழச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

- *உளுந்து உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்*

*ஹசலக பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு சுய விதை உற்பத்திக்காக 100 கிலோகிராம் சான்றளிக்கப்பட்ட உளுந்து விதைகள் விநியோகிக்கப்பட்டதுடன், 50% விவசாயி பங்களிப்பின் கீழ் 50 மின்சார வேலிகளை கொள்வனவு செய்வதற்கான விலை மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. பொலன்னறுவை, ஹசலக மற்றும் அனுராதபுர மாவட்டங்களில் விவசாயிகளுக்கான 12 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக உளுந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் பற்றிய ஒரு காணொளி தயாரிக்கப்பட்டுள்ளது.*

- *கௌபி உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்*

*ஹசலக கௌபி விவசாயிகளுக்கு விதை உற்பத்திக்காக 60 கிலோகிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டதுடன், பெரும்போக விதை உற்பத்திக்காகத் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 10 உற்பத்தி அலகுகளுக்காக 50% மானியத்தின் கீழ் 100 மீற்றர் அல்காதீன் குழாய்களுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படவுள்ளன. புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பெறுமதி சேர்த்தல் என்பன பற்றிய 10 தொழில்நுட்பப் பொதி மாதிரிகள் மற்றும் விவசாயிகளுக்கான 6 பயிற்சி நிகழ்ச்சிகள் பொலன்னறுவை, மொனராகலை, அனுராதபுரம் மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட்டுள்ளன.*

- *இலங்கையில் கடலை உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்*

*சான்றளிக்கப்பட்ட நிலக்கடலை விதை உற்பத்திக்காக விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிப்பதற்காக 1,600 கிலோகிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் கொள்வனவு செய்யப்பட்டன. இனவிருத்தி விதை உற்பத்திக்கு உதவி வழங்கும் பொருட்டு கரடியனாறு பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு குழாய்க் கிணறு கட்டப்பட்டு வருவதுடன், நிலக்கடலை உற்பத்திச் சங்கங்களுக்கு 10 நிலக்கடலை பிடுங்கும் இயந்திரங்களை இலவசமாக வழங்குவதற்காக ஒரு பத்திரிகை விளம்பரம் தயாரிக்கப்பட்டுள்ளது.*

- *சோயா உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்*

*10,000 கிலோகிராம் சோயா விதைகளை இலவசமாக வழங்குவதன் மூலம் டிசம்பர் மாதத்தில் விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துமாறு மகாவலி அதிகாரசபைக்கு*

அறிவிக்கப்பட்டதுடன், தேவையான விதைகள் விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்திலிருந்து வழங்கல் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது.

- இலங்கையில் குரக்கன் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்

பெரிய மற்றும் சிறு நீர்ப்பாசனத்தின் கீழ் புதிய மேட்டு நிலப் பிரதேசங்களில் குரக்கன் பயிர்ச் செய்கையைப் பரவலாக்குவதற்காக இலவசமாக வழங்கப்பட்ட சான்றளிக்கப்பட்ட விதைகளைப் பயன்படுத்தி மாகாணங்களுக்கு இடையேயான மற்றும் மாகாண அதிகாரப் பகுதிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
பெரிய மற்றும் சிறு நீர்ப்பாசனத்தின் கீழ் மேட்டு நிலங்களில் சிறு போகத்தில் பயிர் நடுதல் மூலம் கள நிறுவல் மேம்பாடும் செயல்படுத்தப்படுவதுடன், சான்றளிக்கப்பட்ட விதைகள் இலவசமாக வழங்கப்படுதல், 50% மானியத்தின் கீழ் நிலப் பண்படுத்தல், பயிர் நடுதல் மற்றும் களத்து மேடு விரிப்புகளை வழங்குதல் என்பன இடம்பெறுகின்றன.
விவசாயிகளுக்கான மூன்று பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- சின்ன வெங்காய உற்பத்தியை மேம்படுத்துதல்

விவசாயிகள் களங்களிலும், விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிறுவனங்களிலும் 101 சின்ன வெங்காய மெய் விதை உற்பத்தி அலகுகள் மற்றும் 55 விதை குமிழ் உற்பத்தி அலகுகளை நிறுவுவதற்காக 50,000 ரூபாய் பெறுமதியான உள்ளீடுகள் வழங்கப்பட்டன. 50% மானியத்தின் கீழ் 10 சின்ன வெங்காய குமிழ் களஞ்சியக் கொட்டகைகள் மற்றும் 10 தெளிப்பு நீர்ப்பாசன தொகுதிகள் என்பவற்றை நிர்மாணிக்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன், அம்பாறை மாகாணங்களுக்கு இடையேயான பிரதேசத்தில் ஒரு விவசாயிகள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.

- எள் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்

பெரும்போகத்தில் எள் சுய-விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலவசமாக விநியோகிப்பதற்காகப் பதிவு செய்யப்பட்ட விதைகளுக்கான வழங்கல் கோரிக்கை செய்யப்பட்டன. இதன் மூலம் புதிய விருத்தி செய்யப்பட்ட வர்க்கங்களின் பெற்றுக்கொள்ளகூடிய தன்மையை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய பிரதேசங்களில் உற்பத்தித் தரத்தை விருத்தி செய்தல் மற்றும் பெறுமதிச் சங்கிலி விருத்திக்கு உதவி வழங்கும் பொருட்டு 50% மானியத்தின் கீழ் தார்பாய்கள், சுத்தம் செய்யும் இயந்திரங்கள் மற்றும் களஞ்சிய கொள்கலன்களை கொள்வனவு செய்ய கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக, விவசாயத் திணைக்களத்தின் பண்ணைகளுக்கு மேலதிக நீர்ப்பாசனத்துடன் கூடிய உயர் விளைச்சல் பொதிகளை பரீட்சிக்கும் பொருட்டு நீர்ப்பாசனத் தொகுதிகளை கொள்வனவு செய்ய கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன.

- இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அயனமண்டல கிழங்குப் பயிர்கள் - வற்றாளைக் கிழங்கு (*Ipomoea batatas*), சிறுகிழங்கு (*Coleus rotundifollius*), இராசவள்ளிக் கிழங்கு (*Dioscorea Spp.*), நாட்டுக் கருணைக் கிழங்கு (*Xanthosoma Spp.*), மரவள்ளிக் கிழங்கு (*Manihot esculenta*) என்பவற்றின் உற்பத்திகளை விருத்தி செய்தல்.

தெலிஜ்ஜவில, வல்பிட்ட, உல்பத்தகம மற்றும் அம்பேபுஸ்ஸ ஆகிய அரச விதைப் பண்ணைகளில் வற்றாளைக் கிழங்கு, நாட்டுக் கருணைக் கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு, சிறுகிழங்கு, உருளைக் கிழங்கு மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் நடுகைப் பொருள் உற்பத்தி நடைபெற்று வருகிறது. சிறந்த வர்க்கங்களைப் பயன்படுத்தி உற்பத்தித்திறனை விருத்தி செய்வதற்காக ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பண்ணைகளில் நில அபிவிருத்தி, நீர்ப்பாசன வசதிகளை விருத்தி செய்தல், நடுகைப் பொருள் உற்பத்தி, இனப்பெருக்கம் மற்றும் ஆராய்ச்சிகள்

என்பன நடைபெற்று வருகின்றன. பிரதான பீடைகள் மற்றும் நோய்களை இனங்காணல் மற்றும் வினைத்திறனுள்ள கட்டுப்பாட்டு உத்திகளை விருத்தி செய்வதற்காக களப் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன. அனுராதபுரம், ஹசலக மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் விவசாயிகள் மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 50% விவசாயிப் பங்களிப்பின் கீழ் 210 விவசாயிகளுக்குப் பாதுகாப்பு வேலிகளை வழங்குவதற்கான விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. வீட்டுத் தோட்ட மட்டத்தில் கிழங்குப் பயிர்கள் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக ஹசலகப் பிரதேசத்தில் வற்றாளைக் கிழங்கு மற்றும் இராசவள்ளிக் கிழங்கு எனபவற்றின் நடுகைப் பொருட்கள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

*1.8.3. விதைச் சான்றளித்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு*

*i.) தேசிய விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம்*

- விவசாயிகள் மத்தியில் தரமான விதைகளின் கிடைக்கும் தன்மையை அதிகரிப்பதற்காக ஒப்பந்த அடிப்படையில் பயிரிடப்பட்ட 261.13 மெற்றிக் தொன் ஏனைய களப் பயிர்களின் விதைகள் (பதிவு செய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட), ஒப்பந்த அடிப்படையில் பயிரிடப்பட்ட 27,847 பூசல் பதிவு செய்யப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட நெல் விதைகள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பயிரிடப்பட்ட 11,330.85 கிலோகிராம் தரமான மரக்கறி விதைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன.
- விதை களஞ்சிய மற்றும் போக்குவரத்திற்காக ஸ்டிக்கர்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் புகையூட்டல் நடவடிக்கைகள் தொடர்பான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*ii.) துரிதப்படுத்தப்பட்ட விதைப்பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

- குண்டசாலை அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையில் நீர்ப்பாசனத் தொகுதி நிறுவப்பட்டுள்ளதுடன், அம்பேபுஸ்ஸ விதை உற்பத்திப் பண்ணையில் சூரிய சக்திப் நீர் இறைக்கும் இயந்திரத் தொகுதி நிறுவப்பட்டு நீர் விநியோக வழி அமைப்பதற்காகக் கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.
- ரஹன்கல, உடரதல்ல, பிதுருத்தலாகல, மீபிலிமான மற்றும் கந்தப்பொல அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகள், கஹகொல்ல சந்தைப்படுத்தல் நிலையம், சீதாஎளிய விவசாயத் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் பசுமை இல்ல வளாகம் ஆகியவற்றுக்காக 132 சூரிய சக்தித் தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன.
- கந்தளாய் மற்றும் நிக்கவெரட்டிய அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளுக்குத் தேவையான 2 விதை உலர்த்திகள் (முறையே 6.5 மெற்றிக் தொன் மற்றும் 3.5 மெற்றிக் தொன்) கொள்வனவு தொடர்பான கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.
- பரந்தன் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையில் உலர்த்தும் தளம் புனரமைப்பு மற்றும் விரிவாக்கம் மற்றும் சங்கிலி வேலி (Chain link fence) அமைக்கும் பணிகள் என்பன நிறைவடைந்துள்ளன. பொலன்னறுவை விதை உற்பத்திப் பண்ணையில் வீதி கொங்கிறீற்று இடுதல் மற்றும் படஅத்த விதை உற்பத்திப் பண்ணை வீதி புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பெல்வெஹெர அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையில் GI களஞ்சியம், அலுவலகக் கட்டடம் மற்றும் உத்தியோகபூர்வ இல்ல இலக்கம் 55 III B புனரமைப்பு அத்துடன் பொலன்னறுவை அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையில் அலுவலகக் கட்டடம் மற்றும் சுற்றுலா பங்களா (கட்டம் III) புனரமைப்புப் பணிகள் என்பன நிறைவடைந்துள்ளன.
- மேலும் மீபிலிமான அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையில் உத்தியோகபூர்வ இல்ல இலக்கம் 3 (III B), கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் விதை

*களஞ்சியம் அமைத்தல், அலுத்தரம பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் அலுவலகக் கட்டடம் புனரமைப்பு (கட்டம் IV) மற்றும் கந்தளாய் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வ இல்ல இலக்கம் 2 புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன.*

*iii.) உள்நாட்டு விதை உருளைக் கிழங்கு உற்பத்தியை விருத்தி செய்தல்*

- *சீதாஎளிய பசுமை இல்ல வளாகத்தில் நாற்று இல்லம் புனரமைப்பு, உபகரணங்கள் கொள்வனவு மற்றும் பழுதுபார்த்தல், நடுகைப் பொருட்கள் உற்பத்திக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் கொள்வனவு, சீதாஎளிய ஆராய்ச்சி நிலையத்தில் இழைய வளர்ப்பு ஆய்வகம், வலை இல்லங்கள் மற்றும் குளிர்பதன அறை விருத்தி மற்றும் பண்டாரவளை ஆராய்ச்சி நிலையத்தில் வேர் பிடித்த தண்டுத் துண்டு நாற்று உற்பத்தித் தொகுதி, வலை இல்லம், இரசாயனப் பொருட்கள், உரங்கள் மற்றும் தினசரி பராமரிப்புப் பணிகள் என்பன நடைபெற்று வருகின்றன.*
- *சீதாஎளிய விதை உருளைக் கிழங்கு களஞ்சியத்தில் சேமிப்பு வசதிகள் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதுடன், தற்போது 45% பணிகள் நிறைவடைந்துள்ளன.*

*iv.) விதைச் சான்றளிப்பு நடவடிக்கைகளை வலுவூட்டுதல்*

- *மஹஇலுப்பல்லம விதை ஆய்வக வசதிகளை விருத்தி செய்தல், கன்னோருவ விதை சுகாதாரப் பரிசோதனைப் பிரிவில் நாற்று இல்லம் மற்றும் படஅத்த விதை ஆய்வகத்தில் நாற்று மேடை மண்டபம் என்பன அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. கன்னோருவ விதைச் சான்றளிப்புச் சேவையின் அலுவலகக் கட்டடப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *கன்னோருவ பழைய குளத்தைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதுடன், ஹிங்குரக்கொட விதைச் சான்றளிப்புச் சேவையின் அலுவலகக் கட்டடப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*v.) விதைச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் விதை மற்றும் நடுகைப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தல்*

- *விதைச் சட்டத்தின் கீழ் 674 விதை கையாளுநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 1156 விதை கையாளுநர்களின் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.*
- *1704 விதை லேபிள்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 2290 விதை கையாளுநர்களின் வளாகங்கள் எழுமாறன முறையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.*
- *6,314 ஹெக்டேயர் நெல் விதைகள், 966 ஹெக்டேயர் ஏனைய களப் பயிர்களின் விதைகள், 93 ஹெக்டேயர் மரக்கறி விதைகள் மற்றும் 87 ஹெக்டேயர் கிழங்கு விதைகள் சான்றளிக்கப் பட்டன. 10,874 ஆய்வகப் பரிசோதனைகள் மற்றும் பகுப்பாய்வுகளும் 1786 அறுவடைக்குப் பிந்தைய கட்டுப்பாட்டு விதை பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.*
- *271 நாற்று மேடைகளை பதிவு செய்வதன் மூலமும் 638,075 பழக்கன்றுகளைச் சான்றளிப்பதன் மூலமும் பழக்கன்றுகள் சான்றளித்தல் மேற்கொள்ளப்பட்டது.*

*vi.) விவசாய இரசாயனப் பொருட்களால் மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படக்கூடிய கடுமையான பாதகமான விளைவுகளைக் குறைத்தல்*

- *16 விவசாய இரசாயன விற்பனைத் தொழில்நுட்ப உதவியாளர் (ASTA) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

- *சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (Environment Protection License) மற்றும் திட்டமிடப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப்பத்திரம் (Scheduled Waste Management License) என்பவற்றைப் பெறுவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டன.*
- *பதிவு செய்வதற்காக 86 பீடைகொல்லிகளின் உயிர் வினைத்திறன் பரிசோதனைகள் மற்றும் 522 கள மாதிரிப் பரிசோதனைகள் நிறைவு செய்யப்பட்டன.*
- *யாழ்ப்பாணத்தில் பிராந்திய வெற்றுப் பீடைகொல்லி கொள்கலன் சேகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அரசுடைமை செய்யப்பட்ட பீடைகொல்லிகளை (4 மெற்றிக் தொன்) முன் செயலாக்கம் மற்றும் இணைச் செயலாக்கம் செய்வதற்கான மனு மதிப்பீடு நடைபெற்று வருகிறது.*
- *ட்ரோன்களைப் பயன்படுத்திப் பீடைகொல்லிகளைப் பயன்படுத்துவதற்கான நெறிமுறைகளை விருத்தி செய்தலின் கீழ் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.*

*vii.) விநியோகச் சங்கிலி கட்டமைப்பை வலுவூட்டுவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாய உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல் (JICA)*

- *சந்தை இலக்குடைய உற்பத்திகள் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாய உற்பத்தியாளர்களின் வருமான மட்டத்தை அதிகரிப்பதற்காக 3 பயிற்றுநர்களுக்கான பயிற்சி (TOT) நிகழ்ச்சித் திட்டங்களும், விவசாயிகளுக்கான 90 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும், 11 நாடுகளின் பங்களிப்புடன் ஒரு சர்வதேச SHEP பட்டறையும் நடத்தப்பட்டன.*
- *சர்வதேசப் பிரதிநிதிகளுடன் 4 களப் பயணங்கள் உட்பட 86 களப் பயணங்கள் நடத்தப்பட்டதுடன், JICA நிறுவனத்தினால் வழங்கப்பட்ட KDH வேன் மற்றும் இரட்டை கெப் வண்டி என்பவற்றுக்கான கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*viii.) கன்னோருவ தாவர மரபணுவள வங்கியைப் பராமரித்தல்*

- *மரபணு வள வங்கிக்குத் தேவையான ஒரு காற்றுப் பதனப்படுத்தல் இயந்திரம், ஒரு GPS சாதனம், ஒரு வெற்றிடச் சுத்திகரிப்பான், ஒரு குளிர்சாதனப் பெட்டி, ஒரு காந்தக் கிளறியுடன் கூடிய சூடாக்கும் தட்டு (Hotplate with magnetic starrer), மாற்றக்கூடிய கொக்கி (, adjustable hook) என்பன கொள்வனவு செய்யப்பட்டதுடன், 12 ஆய்வக உபகரணங்கள் தரப்படுத்தப்பட்டன.*
- *எபோக்சி வர்ணம் பூசுதல் மற்றும் கூரை புனரமைப்பு என்பன நிறைவடைந்துள்ளன.*
- *2 காற்றுப் பதனப்படுத்தல் இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்காக 2 அமுக்கிகள் மற்றும் ஏனைய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், விதை காட்சிப்படுத்துவதற்கு ஒரு பெட்டகம், 12 ஆய்வக அங்கிகள் மற்றும் டிஜிட்டல் மீட்டர்களுக்கான கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*ix.) உயிர் பாதுகாப்பு மற்றும் தாவர சுகாதாரத் தேவைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் எல்லை தாண்டிய வர்த்தகத்தை வலுப்படுத்துதல்*

- *ஏற்றுமதிச் சான்றளிப்பு மற்றும் இறக்குமதி அனுமதி தொடர்பான தாவர தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடன் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன், ஆய்வக மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு நடைபெற்று வருகிறது.*
- *பங்குதாரர்கள் மற்றும் தனிமைப்படுத்தல் உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.*
- *தாவர சுகாதாரத் தேவைகளுக்கு அமையச் சான்றளித்தல் மற்றும் தேசிய உயிர் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் ஆய்வக உட்கட்டமைப்பு மற்றும் பரிசோதனை வசதிகளை விருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன..*

*x.) இலங்கையில் பீடைகொல்லிகள் மற்றும் உரங்களைப் பாதுகாப்பான மற்றும் பொருத்தமான முறையில் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் (JICA செயற்திட்டம்)*

- *JICA நிறுவனத்தினால் வழங்கப்படும் செயற்திட்டப் பணிகளுக்குத் தேவையான வாகனத்தை கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.*
- *குக்குபிட்டேசியே குடும்பப் பயிர்களுக்கான ஒருங்கிணைந்த பீடை மற்றும் போசணை முகாமைத்துவப் பொதியின் வினைத்திறனைப் பரிசோதிப்பதன் கீழ் 3 விவசாயக் களங்கள் மற்றும் ஒரு ஆராய்ச்சி களம் என்பன தெரிவு செய்யப்பட்டதுடன், விவசாயிகளுக்குத் தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது. 2 விவசாயக் களப் பரிசோதனைகளும் 1 களப் பரிசோதனையும் நடத்தப்பட்டன.*
- *கோவா, தக்காளி மற்றும் கறிமிளகாய் ஆகியவற்றிற்கான போசணை முகாமைத்துவப் பொதியை அறிமுகப்படுத்துவதன் கீழ் பதுளையில் கோவாவுக்கான 2 விவசாயக் களங்கள் மற்றும் தக்காளிக்கான 2 களங்கள் மற்றும் கல்பிட்டியில் 2 கறிமிளகாய் களங்கள் மற்றும் 2 கோவா களங்கள் இனங்காணப்பட்டு, நாற்று மேடைகளை நிறுவுவதற்காக தேவையான விதை வகைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.*

*xi.) சிறு அளவிலான வெளிநாட்டு உதவி ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள்*

- *AFACI - ஆசிய உணவு மற்றும் விவசாயக் கூட்டுறவு முயற்சி*

- *AFACI உறுப்பு நாடுகளுக்குப் பொருத்தமான, பாதகமான சூழல் நிலைமைகளுக்குத் தாங்குதிறன் கொண்ட, உயர் விளைச்சல் தரும் நெல் வர்க்கங்களை இனங்காணல்.*
- *ஆசியாவில் மரக்கறி வர்க்க விருத்தி.*
- *ஆசியாவில் மண் வரைபடம் மற்றும் தேசிய மண் தகவல் முறைமைகளை விருத்தி செய்தல்.*
- *ஆசியாவில் கிராமிய விவசாயத் தொழில்நுட்ப முறைகளை விருத்தி செய்தல் (RATES).*
- *ஆசியப் பிராந்தியத்தில் படைப் புழு மற்றும் பழுப்புத் தத்துப் பூச்சிகளை இனங் காணல் மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம்.*

- *KOPIA (சர்வதேச விவசாயத்திற்கான கொரிய நிகழ்ச்சித் திட்டம்)*

- *இலங்கையில் விவசாயிகளின் பங்களிப்புடன் கூடிய தக்காளி கலப்பின விதை உற்பத்திச் செயன்முறையை விருத்தி செய்தல்.*
- *கலப்பின மிளகாய் விதை உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மிளகாய் உற்பத்தி கிராமங்களை உருவாக்குதல்.*

- *IAEA (சர்வதேச அணுசக்தி முகவரகம்)*

- *தூண்டப்பட்ட மரபணு மாற்றங்களின் பயன்பாட்டின் மூலம் குரக்கன் பயிரின் அறுவடை மற்றும் அறுவடையுடன் தொடர்புடைய ஏனைய உழவியல் பண்புகளையும் விருத்தி செய்தல்.*
- *இலங்கையின் தனித்துவமான மூன்று சூழல் மாசடைதலுக்கு உட்பட்ட வலயங்களில் வளிமண்டல நைட்ரஜன் மாசுபாட்டின் மூலங்களை மதிப்பிடுதல், சூழல் நிலைபேறானதன்மை மற்றும் மனித ஆரோக்கியத்தின் மீதான தாக்கத்திற்கான தீர்வு நடவடிக்கைகள் என்பவற்றைக் கண்டறிதல்.*
- *இலங்கையில் அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மலைப்பகுதி விவசாய நீரேந்துப் பிரதேசங்களில் விவசாய மாசுபடுத்திகளின் மூலங்கள் மற்றும் இடப்பெயர்ச்சியைக் கண்டறிதல்.*

- *SDF (சார்க் அபிவிருத்தி நிதியம்)*

- *தெற்காசியாவில் காலநிலைக்கு சீரமைவான விவசாயத்தை (Climate Smart Agriculture) ஊக்குவிப்பது தொடர்பான மாநாடு.*

- சிறு அளவிலான விவசாய வர்த்தகங்களை இலக்காகக் கொண்ட பெறுமதிச் சங்கிலிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் சார்க் பிராந்திய நாடுகளின் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் செயற்திட்டம்.

- *NARO* – தேசிய விவசாய ஆராய்ச்சி நிறுவனம்
- ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நெல் வயல்களில் மீத்தேன் உமிழ்வு மற்றும் உற்பத்தியைக் குறைத்தல் மற்றும் தகவமைக்கும் உத்திகள் மூலம் ஒழுங்குபடுத்துதல்.

- *AVRDC* - ஆசிய மரக்கறி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
- *FRESH* செயற்திட்டத்தின் கீழ் பங்கேற்பு மதிப்பீட்டு அணுகுமுறை மூலம் இலங்கையில் தக்காளி மற்றும் கறிமிளகாய் வர்க்கங்களை விருத்தி செய்தல்.

- ஆசிய உணவு கலவை தகவல் தளம் – *AFCD*
- ஆசிய உணவு கலவை தகவல் தளத்தின் தரத்தை விருத்தி செய்தல்.

- தெற்காசியாவிற்கான போர்லாக் நிறுவனம் – *BISA*
- தெற்காசியாவில் விவசாயத் தகவமைப்பு வரைபடம்: காலநிலை இடர்நேர்வுகள், நடைமுறைகள், தொழில்நுட்பங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இடையிலான தொடர்புகள்.

- *CABI* - பொதுநலவாய விவசாயப் பணியகம்
- தாவரங்களுக் ஏற்ற நிரந்தரப் பயிர்ச் சிகிச்சை நிலைய நிகழ்ச்சித் திட்டம்.

1.9. உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களத்தால் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

- 2025.09.30 30.09.2025 ஆம் திகதி வரையிலான நிதிசார் முன்னேற்றம்

கமத்தொழில், கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் 118-02-03-020-2202 செலவினத் தலைப்பின் கீழ், உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் 247.56 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதன் கீழ், அரசாங்கத்தின் பின்வரும் உத்தேச முன்னுரிமைகளை உள்ளடக்கும் வகையில் 46 செயற்திட்டங்கள் இத் திணைக்களத்தால் செயல்படுத்தப்படுகின்றன.

i.) உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக விவசாய உள்ளீடுகள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு.
ii.) விவசாய முறைமைகளில் உயர் உற்பத்தி மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்தல்.
iii.) விவசாய தொழில்முனைவோர் மற்றும் நிலைபேறான சந்தைப்படுத்தலை மேம்படுத்துதல்.
iv.) விவசாயம் மற்றும் விவசாயத் துறை தொடர்பான காணிகளை விஞ்ஞான ரீதியில் விருத்தி செய்து நிலைபேறான காணிப் பாவனையை அமைத்தல்.
v.) விவசாய நடைமுறைகளை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கு உதவி வழங்கல்
vi.) விவசாயம் தொடர்பான செயற்பாடுகளை சூழலுக்கு இணக்கமான முறையில் நடைமுறைப்படுத்தல்
vii.) தொழில்முனைவு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்காக விவசாயிகளை வலுவூட்டுதல்.
viii.) விவசாய ஆராய்ச்சி மற்றும் அறிவை முகாமைத்துவம் செய்தல்.
ix.) இறக்குமதி செய்யப்படும் பயிர்களுக்குப் பொருத்தமான மாற்றுப் பயிர்களைப் பயிரிடுதல் மற்றும் ஊக்குவித்தல்.
x.) விவசாய உற்பத்திகளுக்காகக் களஞ்சியங்கள், குளிர்பதனக் களஞ்சியங்களை அமைத்தல்.

மேற்கண்ட முன்னுரிமைகளை உள்ளடக்கும் வகையில், களப் பயிர் மேம்பாடு, தேனீ வளர்ப்பு, காலநிலைக்கு சீரமைவான தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல், விவசாயத் துறையில்

விரிவாக்கச் சேவைகளை விருத்தி செய்தல், சிறந்த விவசாய நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல், அரசாங்க விதைப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல், மண் பாதுகாப்பு முறைகளைச் செயற்படுத்துதல், அறுவடைக்குப் பிந்தைய சேதங்களைக் குறைத்தல், பழப் பயிர்களின் ஏற்றுமதி சாத்தியப்பாடுகளை விருத்தி செய்தல், விவசாய உள்ளீடுகளுடன் தொடர்பான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், பீடைத் தொல்லைகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நவீன முறைகளை அறிமுகப்படுத்துதல் போன்ற 46 செயற்திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்படுகின்றன.

புகைப்பட இலக்கம் : 17 – 33

## 02. கமநல அபிவிருத்தி திணைக்களம்

2.1. திணைக்களம் பற்றிய சிறிய அறிமுகம்

இலங்கையின் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில் 1957 ஒக்டோபர் 01 ஆந் திகதி அப்போது இருந்த உணவுத் திணைக்களத்தைக் கலைத்து, கமநல சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வயற் காணிச் சட்டத்தின் மூலம் பலப்படுத்தப்பட்ட இத்திணைக்களம் தற்போது 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

2.2. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 4,794.50 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 13,083.10 |

2.3. 2026 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ / இ ல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|
| 1 | | | |
| | கைவிடப்பட்டுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | குளங்களின் எண்ணிக்கை | 345.00 |
| | சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் சிறிய புனரமைப்பு வேலைகள் (Kick Start) | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 335.00 |
| | வெள்ள அழிவு புனரமைப்பு | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 517.00 |
| | குளங்கள் மற்றும் அணைகளைப் புனரமைப்பு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 595.00 |
| | விவசாய வீதிகளின் திருத்த வேலை | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 313.00 |
| | பயிர்ச் செய்கைக் கிணறுகளின் திருத்தவேலை | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 28.00 |
| | பருவகால பயிர்ச் செய்கைக்கான வேலி அமைத்தல் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 145.00 |
| | கைவிடப்பட்டுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | | 30.00 |
| | பரசூட் தட்டுகளைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டம் | ஏக்கர் எண்ணிக்கை | 110.00 |

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|
| | குளங்களில் மீன் குஞ்சுகளை வளர்த்தல் | குளங்களின் எண்ணிக்கை | 22.00 |
| | 'எக்க மிட்டடட்ட கொவி பிமட்ட' நிகழ்ச்சித் திட்டம் | | 250.00 |
| | விசேட செயற்திட்ட முன்மொழிவுகளுக்காக | | 265.00 |
| | செயற்திட்ட உதவிச் செலவு | | 45.00 |
| | மொத்தம் | | 3, 000.00 |
| | | | |
| 2 | தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் என்பவற்றைப் புதுப்பித்தல் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 60.00 |
| 3 | வாகனங்களைத் திருத்துதல் | வாகனங்களின் எண்ணிக்கை | 40.00 |
| 4 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | 14.50 |
| 5 | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 10.00 |
| 6 | கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களைப் புதுப்பித்தல் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 500.00 |
| 7 | இயந்திரங்களைப் திருத்துதல் | எண்ணிக்கை | 50.00 |
| 8 | வாகனங்களைத் திருத்துதல் | எண்ணிக்கை வாகனங்கள் | 50.00 |
| 9 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | 20.00 |
| 10 | இயந்திரங்களை கையகப்படுத்துதல் | இயந்திரங்களின் எண்ணிக்கை | 600.00 |
| 11 | கட்டிடங்களின் புதிய நிர்மாணம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 400.00 |
| 12 | பயிர் பல்வகைத்தன்மை | திட்டங்களின் எண்ணிக்கை | 50.00 |

*2.4. 2025.09.30 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 4,256.00 | 503.83 | 12 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 11,275.00 | 8,656.10 | 77 |
| | | | | |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| 1 | சிறிய நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைத்தல் மற்றும் தரிசு நிலங்களில் மீண்டும் பயிரிடல் (காணி மற்றும் காணி அபிவிருத்தி) | | | |
| | கைவிடப்பட்டுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | 215.00 | 8.35 | 2 |
| | சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் சிறிய புனரமைப்பு வேலைகள் (Kick Start) | 335.00 | 18.41 | 6 |
| | வெள்ள அழிவு புனரமைப்பு | 660.00 | 29.31 | 5 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| | குளங்கள் மற்றும் அணைகளைப் புனரமைப்பு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | 660.00 | 41.55 | 7 |
| | நுண் நீர்ப்பாசனத் தொகுதிகளை உருவாக்குதல் | 15.00 | - | - |
| | விவசாய வீதிகளின் திருத்த வேலை | 315.00 | 16.51 | 5 |
| | பரசூட் தட்டுகளைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டம் | 163.00 | - | - |
| | குளங்களில் மீன் குஞ்சுகளை வளர்த்தல் | 2.00 | - | - |
| | கவெண்டிஷ் வாழைப் பழச் செய்கைத் திட்டம் | 50.00 | - | - |
| | 'எக்க மிட்டட்ட கொவி பிமட்ட' நிகழ்ச்சித் திட்டத்திற்கு | 392.50 | 21.33 | 5 |
| | நிலுவையில் உள்ள விலைப்பட்டியல்களைத் தீர்த்தல் | 220.00 | 198.81 | 90 |
| | செயற்திட்டப் பொறுப்புகள் | 170.00 | 58.23 | 35 |
| | செயற்திட்ட உதவிச் செலவுகள் | 52.50 | 0.20 | 0 |
| 2 | தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் என்பவற்றைப் புதுப்பித்தல் | 30.00 | 1.97 | 7 |
| 3 | வாகனங்களைத் திருத்துதல் | 25.00 | 13.70 | 55 |
| 4 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 8.00 | 6.28 | 78 |
| 5 | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 10.00 | 3.70 | 37 |
| 6 | கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களைப் புதுப்பித்தல் | 400.00 | 69.00 | 18 |
| 7 | இயந்திரங்களைப் திருத்துதல் | 72.00 | 6.27 | 8 |
| 8 | வாகனங்களைத் திருத்துதல் | 38.00 | 1.94 | 5 |
| 9 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 15.00 | 3.34 | 22 |
| 10 | இயந்திரங்களை கையகப்படுத்துதல் | 8.00 | நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவில்லை | |
| 11 | கட்டிடங்களின் புதிய நிர்மாணம் | 100.00 | 4.93 | 5 |
| 12 | பயிர் பல்வகைத்தன்மை | 50.00 | - | - |

*2.4. 2025.09.30 ஆம் திகதியளவில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

- *தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களைப் புனரமைத்தல்*

*தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் சேவை பெறுவோரின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கில், 281-1-1-0-2001 என்ற செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 30.00 மில்லியன் ரூபாய் நிதியுதவியில், தலைமை அலுவலகம் உட்பட 8 மாவட்ட அலுவலகங்களில் 15 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 2025.09.30 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 1.97 மில்லியன் ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 30% ஆகும்.*

- *தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் வாகனங்களைப் திருத்தியமைத்தல்*

*வாகனங்களைச் செயல்திறனுடன் பயன்படுத்தும் நோக்குடன், தலைமை அலுவலகத்தில் உள்ள வாகனங்களைப் திருத்தியமைப்பதற்காக, 281-1-1-0-2003 என்ற செலவுத் தலைப்பின் கீழ் 25.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2025.09.30 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 13.70 மில்லியன் ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 50% ஆகும்.*

*மாவட்ட அலுவலகங்களில் உள்ள வாகனங்களைப் திருத்தியமைப்பதற்காக, 281-2-2-0-2003 என்ற செலவுத் தலைப்பின் கீழ் 38.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2025.09.30 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 1.94 மில்லியன் ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 10% ஆகும்.*

- *தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணத் தேவைகள்.*

*தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்குடன், 281-1-1-0-2102 என்ற செலவுத் தலைப்பின் கீழ் 8 மில்லியன் ரூபாய் நிதியுதவியின் கீழ் தலைமை அலுவலகத்தின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணத் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவற்றை கொள்வனவு செய்வதற்காக 2025.09.30 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 6.28 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 78% ஆகும்.*

*மாவட்ட அலுவலகங்களின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணத் தேவைகளுக்காக, 281-2-2-0-2102 என்ற செலவுத் தலைப்பின் கீழ் 15.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2025.09.30 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 3.34 மில்லியன் ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 25% ஆகும்.*

- *பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு*

*தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்தவும், செயல்திறனை அதிகரிக்கவும், 281-1-1-0-2401 என்ற செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 10.00 மில்லியன் ரூபாய் நிதியுதவியின் கீழ் 7 பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 2025.09.30 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 3.70 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 30% ஆகும்.*

- *கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களைப் புனரமைத்தல்*

*கமநல சேவை நிலையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் சேவை பெறுவோரின் செயல்திறனை அதிகரிப்பதற்கும், உரக் களஞ்சியங்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்கும், 281-2-2-0-2001 என்ற செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 400.00 மில்லியன் ரூபாய் நிதியுதவியின் கீழ் தலைமை அலுவலகம், கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களைப் புனரமைக்கும் 114 பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2025.09.30 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 69.00 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 40% ஆகும்.*

- *இயந்திரங்களைப் திருத்தியமைத்தல் மற்றும் கொள்முதல் செய்தல்.*

*பயன்படுத்தக்கூடிய விவசாய இயந்திரங்களைப் திருத்தியமைத்தல் மற்றும் புதிய விவசாய இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு 281-2-2-0-2002 என்ற செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 72.00 மில்லியன் ரூபாய் நிதியுதவியைப் பயன்படுத்தி விவசாய இயந்திரங்கள் புனரமைக்கப்பட்டன. 2025.09.30 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 6.27 மில்லியன்*

*ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 10% ஆகும். 281-2-2-0-2103 என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 8.00 மில்லியன் ரூபாய் நிதியுதவியின் கீழ் புதிய கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை*

- *நிலையங்களைப் புதிதாக நிர்மாணித்தல்*

*கமநல சேவை நிலையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் சேவை பெறுவோரின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்குடன், 281-2-2-0-2104 என்ற செலவுத் தலைப்பிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 100.00 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் கீழ் 15 செயற்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 2025.09.30 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 4.93 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 30% ஆகும்.*

- *பயிர் பல்வகைப்படுத்தல் (281 – 2 – 2 – 10 – 2506 Crop Diversification)*

*இந்தச் செலவுத் தலைப்பின் கீழ் 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை 50.00 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாக, தெரிவு செய்யப்பட்ட 12 குளங்களில் நீர் முகாமைத்துவ ஆய்விற்காக 45.00 மில்லியன் ரூபாய் மற்றும் நுவரெலியா கித்துல்பாகமுவ ஆற்றில் நீர் பகிர்வுப் பிரச்சினையை ஆய்வு செய்து தீர்வு வழங்குவதற்காக 5.00 மில்லியன் ரூபாய் நிதி வழங்குவதாகும்.*

*<u>சிறிய நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைத்தல் மற்றும் தரிசு நிலங்களில் மீண்டும் பயிரிடல் (காணி மற்றும் காணி அபிவிருத்தி)</u>*

| செயற்பாடு | திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை (மில். ரூபாய்) | 2025.09.30 ஆம் திகதி வரையான செலவு (மில். ரூபாய்) | நிலுவையிலுள்ள விளைப்பட்டியல்கள் (மில். ரூபாய்) | திருத்தப்பட்ட பௌதீக இலக்குகள் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| கைவிடப்பட்டுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | 215.00 | 8.35 | 0.00 | 19 நீர்ப்பாசனச் செயற்திட்டங்கள் | புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |
| சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் சிறிய புனரமைப்பு வேலைகள் (Kick Start) | 335.00 | 18.41 | 22.61 | 820 செயற்திட்டங்கள் | 386 செயற்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. எஞ்சிய செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. |
| வெள்ள அழிவு புனரமைப்பு | 660.00 | 29.31 | 15.57 | 270 செயற்திட்டங்கள் | 59 செயற்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. எஞ்சிய செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. |
| குளங்கள் மற்றும் அணைகளைப் புனரமைப்பு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | 660.00 | 41.55 | 27.13 | 235 செயற்திட்டங்கள் | 39 செயற்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. எஞ்சிய செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. |
| நுண் நீர்ப்பாசனத் தொகுதிகளை உருவாக்குதல் | 15.00 | 0.00 | - | 30 ஏக்கர் | செயல்படுத்தப்பட்டு வருகின்றது. |
| விவசாய வீதிகளின் திருத்த வேலை | 315.00 | 16.51 | 7.88 | 140 செயற்திட்டங்கள் | 29 செயற்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. எஞ்சிய செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. |

| செயற்பாடு | திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை (மில். ரூபாய்) | 2025.09.30 ஆம் திகதி வரையான செலவு (மில். ரூபாய்) | நிலுவையிலுள்ள விளைப்பட்டியல்கள் (மில். ரூபாய்) | திருத்தப்பட்ட பௌதீக இலக்குகள் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| பரசூட் தட்டுகளைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டம் | 163.00 | 0.00 | - | 5805 ஏக்கர் | பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. |
| குளங்களில் மீன் குஞ்சுகளை வளர்த்தல் | 2.00 | 0.00 | - | 80 குளங்கள் | செயல்படுத்தப்பட்டு வருகின்றது. |
| கவெண்டிஷ் வாழைப் பழச் செய்கைத் திட்டம் | 50.00 | 0.00 | - | 50 ஏக்கர் | செயல்படுத்தப்பட்டு வருகின்றது. |
| 'எக்க மிட்டட்ட கொவி பிமட்ட' நிகழ்ச்சித் திட்டத்திற்கு | 392.50 | 21.33 | 9.00 | | செயல்படுத்தப்பட்டு வருகின்றது. |
| நிலுவையில் உள்ள விலைப்பட்டியல்களைத் தீர்த்தல் | 220.00 | 198.81 | - | | கட்டணங்கள் செலுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| செயற்திட்டப் பொறுப்புகள் | 170.00 | 58.23 | - | 15.21 | 116 செயற்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. எஞ்சிய செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. |
| செயற்திட்ட உதவிச் செலவுகள் | 52.50 | 0.20 | - | | |
| மீதமாகும் என எதிர்வு கூறப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை | 250.00 | - | - | | |
| மொத்தம் | 3,500.00 | 392.70 | 97.40 | | |

புகைப்பட இலக்கம் : 34 - 36

## 03. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

### 3.1. தொலைநோக்கு

வாசனைத் திரவியங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியில் திறம்பட செயல்படல்

### 3.2. பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள்

அதிகளவு வெளிநாட்டு நாணயத்தை ஈட்டுதல் மற்றும் ஏற்றுமதி விவசாயப் பயிர் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பங்குதாரர்களின் நிலைபேறான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி என்பவற்றை முதன்மைப்படுத்தி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்திப் பொருட்களின் அளவு மற்றும் தரம் சார்ந்த மேம்பாட்டை ஏற்படுத்தத் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயன்முறையைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.

### 3.3 அறிமுகம்

1971 ஆம் ஆண்டின் தேசிய விவசாயக் கொள்கையின் மூலமாகவும், பின்னர் 1972 இல் அமைச்சரவைப் பத்திரம் மூலமாகவும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுடன் இணைந்ததாக சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம் நிறுவப்பட்டது. 1975 ஆம் ஆண்டில் இத் திணைக்களம் விவசாய அமைச்சுக்குக் கீழ் கொண்டு வரப்பட்டது. உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (WFP) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) மூலம் ஆரம்பிக்கப்பட்ட பயிர் பல்வகைப்படுத்தல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகளில் ஒரு

பகுதி இத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் வாசனைத் திரவியங்கள் சார்ந்த அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதி அபிவிருத்தியின் முன்னோடியாக செயற்பாட்டு வருகிறது. 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இத் திணைக்களம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதன் மூலம் வாசனைத் திரவியப் பயிர்கள் மற்றும் ஏனைய விவசாயப் பயிர்களின் ஏற்றுமதி தொடர்பான சட்ட ரீதியான அதிகாரம் இத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் பிரதானமாக மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், ஏலக்காய், கோப்பி, கொக்கோ, வெற்றிலை, கமுகு, வனிளா, சிட்ரோனெல்லா, லெமன்கிராஸ், கொரக்கா, இஞ்சி மற்றும் மஞ்சள் போன்ற வாசனைத் திரவியங்கள், பானப் பயிர்கள் மற்றும் ஊக்கப் பயிர்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதையே இலக்காகக் கொண்டுள்ளது. ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் செய்கைப் பரப்பை அதிகரித்தல், தற்போதுள்ள பயிர்ச் செய்கையின் உற்பத்தித்திறன் நடவடிக்கைகள், அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப மேம்பாடு போன்ற அபிவிருத்திப் பணிகள் மற்றும் புதிய வர்க்கங்களை அறிமுகப்படுத்துதல், புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் துறைக்கு அறிமுகப்படுத்துதல் என்பன இத்திணைக்களத்தின் பெறுப்புகளாகக் காணப்படுகின்றன.

3.4. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 01. | மூலதன செலவுகள் | 1,579.50 |
| 02. | மீண்டுவரும் செலவுகள் | 1,230.30 |

3.5. 2026 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| 1 | பயிர்ச் செய்கை பரப்பை விரிவுபடுத்துதல் | ஹெக்டயர் | 2350 | 762.00 |
| 2 | மத்திய தாவர நாற்றுமேடை அபிவிருத்தி | அலகு | 100 | 51.00 |
| 3 | ஏற்றுமதி விவசாய பயிர் நில உற்பத்தித் திறனை அதிகரித்தல் | ஹெக்டயர்/ அலகு | 4075 | 150.00 |
| 4 | பயிர் பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தித் திட்டம் | அலகு | 350 | 98.00 |
| 5 | ஊடக மற்றும் தொடர்பாடல் | நிகழ்ச்சிகள்/ அலகு | 200 | 48.00 |
| 6 | திறன் விருத்தித் திட்டம் | நிகழ்ச்சிகள்/ அலகு | 3500 | 20.00 |
| 7 | நிர்வாக செலவுகள் | | | 35.00 |
| 8 | கட்டிடங்களைப் பழுதுபார்த்தல் 2001 | கட்டிடங்கள் | 100 | 72.00 |
| 9 | இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் 2002 | இயந்திரங்கள் (பண்ணை, அலுவலக, ஆய்வக) | 21 | 11.00 |
| 10 | வாகனங்களைப் பழுதுபார்த்தல் 2003 | வாகனங்கள் | 33 | 18.00 |
| 11 | அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் 2102 | அலுவலக உபகரணங்கள் | 182 | 42.00 |
| 12 | இயந்திரங்கள் மற்றும் | உபகரணங்கள் (அலுவலக, | 66 | 23.00 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| | உபகரணங்களை கொள்வனவு செய்தல் 2103 | ஆய்வக) | | |
| 13 | புதிய கட்டிட நிர்மாணம் 2104 | கட்டிடங்கள் (புதிய) | 29 | 140.00 |
| 14 | காணி மற்றும் காணி அபிவிருத்தி 2105 | அபிவிருத்தி செய்யப்படும் காணிகள் | 47 | 47.00 |
| 15 | பணியாளர்களுக்கான பயிற்சி 2401 | பயிற்சி நிகழ்ச்சிகள் | 01 | 2.00 |
| 16 | உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் 2506 | அபிவிருத்தி செய்யப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் | 25 | 40.00 |
| 17 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி 2507 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளும் கொள்வனவுகள் | 43 | 20.05 |
| | மொத்தம் | | | 1,579.05 |

*3.4. 2025.09.30 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 1,621.00 | 102.62 | 06 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 1,101.00 | 756.97 | 69 |
| | | | | |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| 1 | ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 1,000.00 | 83.51 | 8 |
| 2 | ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய் / பீடை கட்டுப்பாடு | 10.00 | 1.96 | 20 |
| 3 | ஏனையவை (2001, 2104, 2105, 2506, 2002, 2003, 2102, 2103 மற்றும் 2401 செலவுத் தலைப்புகளுக்காக) | 361.00 | 17.15 | 5 |

*3.5. 2025.09.30 ஆம் திகதிக்கு நிறுவனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதிக முன்னேற்றம்*

திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2025 ஆம் ஆண்டிற்காக 1,000.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து 2025.09.30 வரை 83.51 மில்லியன் ரூபாய் நிதிச் செலவை திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதன் நிகழ்ச்சித் திட்டங்கள் கண்டி, நுவரெலியா, பதுளை, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, மாத்தளை, மாத்தறை, பொலன்னறுவை, அம்பாறை, அனுராதபுரம், இரத்தினபுரி, மொனராகலை, கேகாலை, காலி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. மொத்தமாக இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் 71,973 பயனாளிகள் தொடர்புபட்டுள்ளனர்.

இத்திணைக்களத்துடன் தொடர்பான ஒட்டுமொத்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தனித்தனியாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள், நிதி முன்னேற்றம் மற்றும் பௌதிக முன்னேற்றம் என்பன பின்வருமாறு:

- *ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் 2025.09.30 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்*

| நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயற்திட்டங்கள் | தொகை *(மில். ரூபா)* | | செலவு செய்த தொகை *(மில். ரூபா)* | | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்கள் | மானியம் | நிகழ்ச்சித் திட்டங்கள் | மானியம் | நிகழ்ச்சித் திட்டங்கள் | மானியம் |
| *01. • ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்* | | | | | | |
| *1.1 ஏற்றுமதி விவசாயப் பயிர் புதிய பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு திட்டம்* | *103.76* | *168.00* | *13.67* | - | *மிளகு 148.91 ஹெக்டேயர், அரேபிகா கோப்பி 112.04 ஹெக்டேயர், கொக்கோவா 14.83 ஹெக்டேயர், ஏலக்காய் 9.41 ஹெக்டேயர், மஞ்சள் 10.49 ஹெக்டேயர், ரொபஸ்டா கோப்பி 17.59 ஹெக்டேயர், இஞ்சி 24.68 ஹெக்டேயர், சாதிக்காய் 12.58 ஹெக்டேயர், கிராம்பு 11 ஹெக்டேயர், வனிலா 2.54 ஹெக்டேயர், சிட்ரோனெல்லா 0.7 ஹெக்டேயர், லெமன்கிராஸ் 0.10 ஹெக்டேயர் பயிரிடப்பட்டுள்ளது. (மொத்தம் 382.24 ஹெக்டேயர் பயிரிடப்பட்டுள்ளது.)* | *மிளகு 3.75 ஹெக்டேயர், அரேபிகா கோப்பி 3.71 ஹெக்டேயர், மஞ்சள் 44.48 ஹெக்டேயர், இஞ்சி 61.8 ஹெக்டேயர், சாதிக்காய் 0.4 ஹெக்டேயர் என்பன பயிரிடப்பட்டுள்ளன. (மொத்தம் 114.29 ஹெக்டேயர் பயிரிடப்பட்டுள்ளது.* |
| *1.2. சிறிய அளவிலான பயிர்ச் செய்கை ஊக்குவிப்புத் திட்டம்* | *101.08* | - | *16.39* | - | *மிளகுக் கன்றுகள் - 438,393, கோப்பி (அரேபிகா) கன்றுகள் - 392,354, கொக்கோவா கன்றுகள் - 9,130, ஏலக்காய் - 90,237, கோப்பி கன்றுகள் (ரொபஸ்டா) - 26,643, சாதிக்காய் கன்றுகள் - 7,297, கிராம்பு கன்றுகள் - 5,646, வனிலா - 35,573, வெற்றிலை (தண்டு) - 75,635, வெற்றிலைத் தண்டுகள் - 4,688, கொரக்கா கன்றுகள் - 13,746 விநியோகிக்கப்பட்டுள்ளன.*<br><br>*மொத்தம் 1,492,448 கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.* | - |
| *1.3 ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்புத் திட்டம்* | *5.06* | - | *0.273* | - | *மிளகுக் கன்றுகள் - 6,663, கோப்பி (ரொபஸ்டா) கன்றுகள் - 265 விநியோகிக்கப்பட்டுள்ளன.*<br><br>*மொத்தம் - 6,928 கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.* | - |
| *1.4 கமுகுச் செய்கை ஊக்குவிப்புத் திட்டம்* | *137.81* | *1.18* | *8.68* | | *கமுகுக் கன்றுகள் - 967,353 விநியோகிக்கப்பட்டுள்ளன.* | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1.5 விஷேட செயற்திட்டங்கள் | 2.68 | - | - | - | - | - |
| 02. ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | | | | | | |
| 2.1 விதை மற்றும் நடுகைப் பொருட்கள் பெற்றுக் கொள்ளல் | 1.50 | - | 0.29 | - | கமுகுக் கன்றுகள் 40,000, சாதிக்காய் கன்றுகள் 6,500 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | - |
| 2.2 தாவர உற்பத்திக்கான உள்ளீடுகளை கொள்வனவு செய்தல். | 2.20 | - | 5.90 | - | 8*5 பொலித்தீன் பைகள் 1,050,500, 10*7 பொலித்தீன் பைகள் 57,500 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | - |
| 2.3 வலை இல்லங்கள், நீர் வழங்கல் மற்றும் இதர வசதிகளை விருத்தி செய்தல் | 8.00 | - | 4.107 | - | 400 அலகுகள் (கியூப்) நடுகைச் சாடி ஊடகம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | - |
| 2.4 பயிர்ச் செய்கை நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளை கொள்வனவு செய்தல். | 30.53 | - | 0.01 | - | 74 கிலோகிராம் இரசாயனப் பசளைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | - |
| 2.5 தனியார் நாற்றுமேடை அபிவிருத்தி | - | 116.40 | - | - | - | - |
| 2.6 பண்ணை நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளை கொள்வனவு செய்தல். | 3.00 | - | - | | - | - |
| 03. நிலப் பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் | | | | | | |
| 3.1 நில பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் | 16.15 | 58.88 | 0.638 | - | மிளகு 96.6 ஹெக்டேயர், கொக்கோவா 4.4 ஹெக்டேயர், கிராம்பு 1.50 ஹெக்டேயர் பயிரிடப்பட்டுள்ளது. (மொத்தம் 107.5 ஹெக்டேயர் பயிரிடப்பட்டுள்ளது.) | மிளகு 7.1 ஹெக்டேயர், ரொபஸ்டா கோப்பி 1.4 ஹெக்டேயர் என்பன பயிரிடப்பட்டுள்ளன. (மொத்தம் 8.5 ஹெக்டேயர் பயிரிடப்பட்டுள்ளது.) |
| 3.2 பீடை மற்றும் பயிர் சேத தடுப்பு சாதனங்கள் /தொகுதிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டம் | - | 10.39 | 0.26 | - | மின்சார வேலி 3, வலை வேலி 1 (4 அலகுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.) | - |
| 3.3 நுண்ணீர்ப் பாசனத் தொகுதிகளை நிறுவுவதற்கான நிகழ்ச்சித் திட்டம் | - | 10.28 | 0.18 | - | தெளிப்பு முறை (Sprayer system) 02 நிறைவு செய்யப்பட்டுள்ளது. | - |
| 3.4 தாவரப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | 5.00 | - | - | - | - | |
| 04. சிறந்த விவசாய நடைமுறைகளை செயல்படுத்துதல் / சான்றளித்தல் | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4.1 சேதன மற்றும் விவசாய கைத்தொழில் நடைமுறைகள் (GAP) விவசாய தர சான்றளிக்கப்பட்ட பயிர்ச் செய்கைகளை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | - | 4.01 | - | - | - | - |
| 4.2 பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி விவசாய பயிர்களின் தரத்தை அபிவிருத்தி செய்தல் | - | 114.75 | 5.7 | - | அரைக்கும் இயந்திரம் 2, உலர்த்தும் இயந்திரம் 07, களையெடுக்கும் இயந்திரம் 16, துண்டு வெட்டும் இயந்திரம் 01, சீலர் 01, பதப்படுத்தும் நிலையம் 01 என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன. (28 அலகுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.) | - |
| 4.3 விற்பனை ஊக்குவிப்பு திட்டம் | 5.00 | - | - | - | 01 நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டுள்ளது. | - |
| 4.4 சிறந்த விவசாய நடைமுறைகளை செயற்படுத்தல் /சான்றளிப்பு | - | 0.55 | - | - | - | . |
| 4.5 பங்குதாரர்களை பதிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | 5.00 | - | - | - | - | .- |
| 05 ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்பு | | | | | | |
| 5.0 ஊடகம் மற்றும் கண்காட்சி என்பவற்றுக்கூடக ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்பு | 40.00 | - | 12.76 | - | தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் - 38, வானொலி நிகழ்ச்சிகள் - 75, ஏனைய நிகழ்ச்சிகள் - 39, கண்காட்சிகள் - 04, மிளகு வெளியீடு - -01, அச்சு ஊடகம் - 01 | - |
| 06. ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் பங்குதாரர்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம் | | | | | | |
| 6.1. ஏற்றுமதி விவசாயப் பயிர் பங்குதாரர்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 12.77 | - | 4.90 | - | 2,470 விவசாயப் பயிற்சி நிகழ்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 62,386 பயனாளிகள் கலந்துகொண்டனர். 374 கள நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 9,587 பயனாளிகள் பங்கேற்றுள்ளனர். | - |
| 6.2 சேவைப் புதுப்பித்தல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 5.00 | | 0.263 | | 37 உத்தியோகத்தர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. | - |
| 6.3 டிஜிட்டல் விரிவாக்க நிகழ்ச்சித் திட்டங்களை எளிதாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் | 1.00 | - | - | - | - | - |

- *ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய் / பீடை கட்டுப்பாடு செயற்திட்டம் ஆகியவற்றின் (2001, 2104, 2105, 2506, 2002, 2003, 2102, 2103 மற்றும் 2401 செலவினத் தலைப்புகளுக்கு உரிய) 2025.09.30 ஆம் திகதிக்கான முன்னேற்றம்*

| *நிகழ்ச்சித் திட்டம்/ செயற்திட்டம்* | *ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா)* | *செலவு செய்த தொகை (மில். ரூபா)* | *பௌதீக முன்னேற்றம்* |
|---|---|---|---|
| *இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பழுதுபார்த்தல்* | *7.50* | *1.01* | *கணினிகள் - 03, அச்சுப்பொறி இயந்திரம் - 01, ப்ரொஜெக்டர் - 01, நிழற்பட நகல் இயந்திரம் - 01, நீர்ப்பம்பு - 01, மேசைக்கணினி - 01, மடிக்கணினி – 01, மின்கலம் - -01, காற்றுப் பதனப்படுத்தி - 02, கோப்பி கூழ் இயந்திரம் - 02 ஆகியவற்றை பழுதுபார்த்தல்* |
| *வாகனங்கள் பழுதுபார்த்தல்* | *15.00* | *6.76* | *25 வாகனங்களைப் பழுதுபார்த்தல், 03 மின்கலங்கள் கொள்வனவு* |
| *அலுவலக உபகரணங்கள் கொள்வனவு* | *20.00* | *2.27* | *புத்தக அடுக்குகள் - 01, வைஃபை - 01, மடிக்கணினி - 09, மேசைக்கணினி - 23, சுழல் கதிரைகள் - 20, கூரை விசிறிகள் - 02, கால் விசிறிகள் - 11, சுவர் விசிறிகள் - 06, ஃபைல் கபினட்கள் - 15, கோப்புப் பெட்டிகள் - 11, மாநாட்டு மேசைகள் - 02, மாநாட்டுக் கதிரைகள் - 20, அலுவலக மேசைகள் - 20, பாதுகாப்புக் கபினட் - 01, யுபிஎஸ் - 36, அலுவலக அளவு - 01, நில்லம்பவிற்கான மடிக்கணினி - 01, வல்பிட்டவிற்கான மடிக்கணினி – 02, யுபிஎஸ் - 01, மாத்தளைக்கான மேசைக்கணினி – 02, மடிக்கணினி - 01, யுபிஎஸ் - 02, தல்பிட்டியவிற்கான உருக்கு அலமாரி - 01, நாரம்மலவிற்கான மேசைக்கணினி - 01, குண்டசாலைவிற்கான மேசைக்கணினி - 01* |
| *இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு* | *7.50* | *0.94* | |
| *திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்* | *01* | *0.67* | *432 உத்தியோகத்தர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.* |

*கட்டுமானம் மற்றும் பழுதுபார்ப்புகளுடன் தொடர்பான 2001 செலவினத் தலைப்பின் கீழ் 47%, 2104 செலவினத் தலைப்பின் கீழ் 24%, 2105 செலவினத் தலைப்பின் கீழ் 27%, 2506 செலவினத் தலைப்பின் கீழ் 33%, மற்றும் 2507 செலவினத் தலைப்பின் கீழ் 72% என்ற அளவில் செலவினத் தலைப்புகள் 2025.09.30 அன்றைய திகதி வரை, பௌதிக முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 37 - 38*

## 04. தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்

*1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய அமைப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1137/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைய 2000 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 27 ஆம் திகதிக்குரிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2093/26 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த நிறுவனத்தின் பெயர் தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனமாக (NIPHM) மாற்றப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பிரதான பணி யாதெனில், விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைப்பதற்காகவும், விவசாயம் சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காகவும் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள், பயிற்சிகள், விரிவாக்கச் சேவைகள், தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகள் மற்றும் ஆய்வகச் சேவைகளை வழங்குவதாகும்.*

*4.1. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் (Vote:118-02-03-073-2201) | 60.00 |
| | மூலதன செலவுகள் (அமைச்சின் ஊடக மேற்கொள்ளவுள்ள) | 109.23 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 188.40 |

*4.2. 2026 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள்*

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஓரலகின் செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | ஆராய்ச்சிகள் | அறுவடைக்குப் பிந்தைய துறையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இனங்காணும் புதிய தொழில்நுட்பங்கள் | 14 ஆராய்ச்சிச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை இனங்காணல் | 0.41 | 6.99 |
| 2 | அபிவிருத்தி செயற்திட்டங்கள் | | | | |
| 2.1 | கிராமிய மட்டத்தில் அரிசி பதப்படுத்தும் தொழிற்துறையை உருவாக்குதல் | களத்தில் நிறுவிய அரிசி பதப்படுத்தும் அலகுகளின் எண்ணிக்கை | நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில், வீட்டு மட்டத்தில் 50 அரிசி பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல் | 0.06 | 2.82 |
| 2.2 | விவசாயம் சார்ந்த புதிய தொழில்முனைவுகளைத் தொடங்கும் நோக்குடன் சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாய தொழில்முனைவோரை வலுவூட்டுவதற்காக புத்தாக்க வளர் மையங்களை (incubation center) நிறுவுதல் | புத்தாக்க வளர் மையங்களுக்கு ஊடாக நிறுவப்பட்ட தொழில்முனைவுகளின் எண்ணிக்கை | விவசாயம் சார்ந்த புதிய தொழில்முனைவுகளைத் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளவர்களுக்கு அதற்கான சந்தை நிலைபெறும் வரை தேவையான முன் தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல் | 7.65 | 7.65 |
| 2.3 | விவசாயிகளின் வருமானத்தை | விருத்தி செய்யப்பட்ட வீட்டு மட்டத்திலான | தானியங்களைச் சேமிப்பதற்காக 100 | 0.05 | 5.05 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஓரலகின் செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | உயர்த்துவதற்காக அரிசி, சோளம் மற்றும் தானியங்களைச் சேமிப்பதற்காக வீட்டு மட்டத்திலான களஞ்சியங்களை விருத்தி செய்தல் | களஞ்சியங்களின் அளவும், தானியங்களைச் சேமிக்கும்போது அறுவடைக்குப் பிந்திய சேதம் குறைக்கப்பட்ட சதவீதமும் | வீட்டு மட்டத்திலான களஞ்சியங்களை விருத்தி செய்தல் | | |
| 2.4 | இலங்கையில் மா, வாழை மற்றும் பப்பாளி பெறுமதிச் சங்கிலிகளில் அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்காக பொருத்தமான பழுக்க வைக்கும் முறைகளை அறிமுகப்படுத்துதல் | நிறுவப்பட்ட பொருத்தமான மற்றும் பாதுகாப்பான பழுக்க வைக்கும் அலகுகளின் எண்ணிக்கை | பழ விவசாயிகள், சேகரிப்போர் மற்றும் வர்த்தகர்களுக்காக 30 பொருத்தமான மற்றும் பாதுகாப்பான பழுக்க வைக்கும் அலகுகளை நிறுவுதல் | 0.29 | 8.65 |
| 2.5 | மரக்கறி மற்றும் பழங்களை கொண்டு செல்லும்போது ஏற்படும் அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைப்பதற்காகப் பாதுகாப்பான பொதியிடலை அறிமுகப்படுத்துதல் | விநியோகச் சங்கிலிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பொதியிடல் அளவும், விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய சேதம் குறைக்கப்பட்ட சதவீதமும் | விநியோகச் சங்கிலி பங்குதாரர்களுக்கு 29,000 பாதுகாப்பான பொதியிடல் (2 வகைகளில்) வழங்குதல் | 0.002 | 67.62 |
| 2.6 | கிராமிய மட்டத்தில் வாசனைப் பொருட்கள் பதப்படுத்தும் நுண் தொழில்முனைவோரை அறிமுகப்படுத்துதல் | களத்தில் நிறுவப்பட்ட வாசனைப் பொருட்கள் சார்ந்த தொழில்முனைவுகளின் அளவு | 10 வாசனைப் பொருட்கள் பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல் | 0.27 | 2.74 |
| 2.7 | விவசாயப் பயிர்களின் சரியான அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை, விழிப்புணர்வு பெற்றவர்களின் எண்ணிக்கை | அரசு அதிகாரிகள், உள்ளூராட்சி நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் 1,500 விவசாய தொழில்முனைவோருக்கு விழிப்புணர்வு வழங்குதல் | 0.002 | 3.20 |
| 2.8 | விவசாய விநியோகச் சங்கிலிப் பங்குதாரர்களை வலுவூட்டுவதை இலக்காகக் கொண்டு நாட்டின் ஒவ்வொரு பகுதியினதும் சாத்தியப்பாடுகளின் அடிப்படையில் அறுவடைக்குப் பிந்திய பதப்படுத்தும் நிலையங்களை நிறுவுதல் | களத்தில் நிறுவப்பட்ட சரியான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களின் எண்ணிக்கையும், விவசாயம் சார்ந்த தொழில்முனைவுகளின் அளவும் | ஒவ்வொரு பகுதியினதும் சாத்தியப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு 10 அறுவடைக்குப் பிந்திய பதப்படுத்தும் அலகுகளை நிறுவுதல் | 0.45 | 4.50 |
| 2.8 | மரக்கறி வகைகளை கையாளுவதற்காக நுவரெலியா மாவட்டத்தில் குளிர்பதனச் சங்கிலியை நிறுவுதல் | குளிர்பதனச் சங்கிலியை நிறுவுதல் | மரக்கறி விநியோகச் சங்கிலிக்காக நுவரெலியா மாவட்டத்தில் குளிர்பதனச் சங்கிலி முகாமைத்துவத்தைப் | 7.00 | 7.00 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஓரலகின் செலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | | | பயன்படுத்துதல் | | |

*4.3. 30.09.2025 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 33.00 | 8.30 | 25 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 164.18 | 113.26 | 69 |
| | | | | |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 26.20 | 4.80 | 18 |

*4.4. 2025.09.30 நாள் வரையிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

- *ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் முன்னேற்றம் (செலவின விடயம் - 118-02-03-073-2201)*

*அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைத்தல், உணவுப் பதப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்த்தல் மற்றும் பாதுகாப்பான உணவு மற்றும் போசணை ஆகிய 3 பிரதான கருப்பொருள்களின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 15 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்படுகின்றன. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி 11.23 மில்லியன் ரூபாய் ஆகும். 2025.09.30 ஆம் திகதி வரை மேற்கொண்ட செலவு 5.01 மில்லியன் ரூபாய் ஆகும்.*

- *அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம் (செலவின விடயம் - 118-02-03-083-2506)*

- *கிராமிய அளவில் வீட்டு மட்டத்திலான அரிசி பதப்படுத்தும் கைத்தொழில்களை உருவாக்குதல்*

*விவசாயிகள் தமது நெல் அறுவடையை விற்பனை செய்யாமல், அதற்குப் பெறுமதி சேர்த்து அரிசியாகச் சந்தைப்படுத்துவதன் மூலம் அவர்களது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே இந்தச் செயற்திட்டத்தின் நோக்கம் ஆகும். இதன் கீழ் 7 மாவட்டங்களில் 87 அரிசி பதப்படுத்தும் அலகுகளை நிறுவ எதிர்பார்க்கப்படுகிறது. 2025.09.30 வரையில், 507 பயனாளிகள் சரியான முறையில் அரிசி பதப்படுத்துவது குறித்த பயிற்சிகலைப் பெற்றனர், மேலும் 47 அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.*

*இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 5.92 மில்லியன் ரூபாய் ஆகும். 2025.09.30 ஆம் திகதி வரை மேற்கொண்ட செலவு 2.43 மில்லியன் ரூபாய் ஆகும்.*

- *விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு அரிசி, சோளம் மற்றும் தானியங்களைச் களஞ்சியப்படுத்துவதற்காக வீட்டு மட்டத்திலான களஞ்சியங்களை விருத்தி செய்தல்*

*தானியங்களைச் களஞ்சியப்படுத்தும் போது அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 5.05 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் கீழ் 7 மாவட்டங்களில் 108 வீட்டு மட்டத்திலான களஞ்சியங்களை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. 2025.09.30 வரையில், 545 விவசாயிகள்*

*சரியான களஞ்சியப்படுத்தும் முறைகள் குறித்துப் பயிற்சி பெற்றனர், மேலும் 43 அலகுகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேற்கொண்டுள்ள செலவு 1.59 மில்லியன் ரூபாய் ஆகும்.*

- *கிராமிய மட்டத்தில் வாசனைப் பொருட்கள் பதப்படுத்தும் நுண் தொழில்முனைவோரை அறிமுகப்படுத்துதல்*

*கிராமிய மட்டத்தில் வாசனைப் பொருட்கள் பதப்படுத்தும் நுண் தொழில்முனைவோரை உருவாக்கும் நோக்கத்துடன் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்ட இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 1.71 மில்லியன் ரூபாய் ஆகும். 2025.09.30 வரையான செலவு 0.10 மில்லியன் ரூபாய் ஆகும். நிலுவையில் உள்ள பற்றுச்சீட்டுகளின் மதிப்பு 1.44 மில்லியன் ரூபாய் ஆகும். இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 425 பயனாளிகள் வாசனைப் பொருட்கள் பதப்படுத்துவது குறித்துப் பயிற்சி பெற்றுள்ளனர்.*

- *விவசாய விநியோகச் சங்கிலிப் பங்குதாரர்களை வலுவூட்டுவதை இலக்காகக் கொண்டு நாட்டின் ஒவ்வொரு பகுதியினதும் சாத்தியப்பாடுகளின் அடிப்படையில் அறுவடைக்குப் பிந்திய பதப்படுத்தும் நிலையங்களை நிறுவுதல்*

*இந்தச் செயற்திட்டம் மூலம் ஒவ்வொரு பிரதேசத்திலும் பயிரிடப்படும் பயிர்கள் மற்றும் அந்தப் பிரதேசங்களில் காணப்படும் சந்தை ஆற்றல் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, விவசாயம் சார்ந்த 10 தொழில்முனைவோரை வலுவூட்டுவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 2.50 மில்லியன் ரூபாய் ஆகும். 2025.09.30 வரையான செலவு 0.35 மில்லியன் ரூபாய் ஆகும். அதற்கான உபகரணங்கள் கொள்வனவு நடைபெற்று வருகிறது. இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 574 பயனாளிகள் பல்வேறு விவசாயம் சார்ந்த கைத்தொழில்களுக்காகப் பயிற்சி பெற்றுள்ளனர்.*

- *விவசாயப் பயிர்களின் சரியான அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர்க்கும் நிலையங்களை நிறுவுதல்*

*இந்தச் செயற்திட்டம் மூலம் நாடு முழுவதும் 1,000 அரச அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் விவசாய தொழில்முனைவோருக்கு விழிப்புணர்வு வழங்கவும், 4 விவசாயம் சார்ந்த உற்பத்தி அலகுகளை நிறுவவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் தொடர் 'அஸ்வென்னட அருநெல்லக்' எனச் செயல்படுத்தப்படுகிறது. இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 4.12 மில்லியன் ரூபாய் ஆகும். 2025.09.30 வரையான செலவு 0.22 மில்லியன் ரூபாய் ஆகும். அதற்கான உபகரணங்கள் கொள்வனவு நடைபெற்று வருகிறது. இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 714 பயனாளிகள் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் குறித்து விழிப்புணர்வு பெற்றுள்ளனர்.*

- *முன்னோடிச் செயற்திட்டமாக மரக்கறி மற்றும் பழங்களுக்கான குளிர்பதனச் சங்கிலியை நிறுவுதல்*

*இந்தச் செயற்திட்டம் மூலம் நுவரெலியா மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களை மையமாகக் கொண்டு ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 69 விநியோகச் சங்கிலிப் பங்குதாரர்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன. பொதியிடல் கொள்வனவு மற்றும் கழுவிச் சுத்தம் செய்யும் அலகுகளை நிறுவுதல் ஆகியவறுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 1 மில்லியன் ரூபாய் ஆகும். 2025.09.30 வரையான செலவு 0.11 மில்லியன் ரூபாய் ஆகும்.*

- *மரக்கறி மற்றும் பழங்களை கொண்டு செல்லும்போது ஏற்படும் அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைப்பதற்காகப் பாதுகாப்பான பொதியிடலை அறிமுகப்படுத்துதல்*

*மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பிந்திய சேதம் அதிகமாக போக்குவரத்தின்போதே ஏற்படுகிறது. இந்தச் சேதத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 5.90 மில்லியன் ரூபாய் ஆகும். இந்தச் செயற்திட்டம் 2025 செப்டெம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்டதால் இதுவரை செலவு எதுவும் ஏற்படவில்லை. பொதியிடல் பொருட்கள் கொள்வனவுக்கான பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

*3. மீண்டு வரும் செலவுகள் (செலவின விடயம் - 118-02-03-073-1509) இன் கீழ் செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்*

*3.1 தொழில்நுட்பப் பரப்பு நடவடிக்கைகள்*

*முறையான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பப் பயன்பாடு குறித்து 100 பயிற்சி வகுப்புகள் (வதிவிட மற்றும் கள நிகழ்ச்சித் திட்டங்களாக) நடத்துவதன் மூலம் 2,000 பயனாளிகளுக்குப் பயிற்சி அளிப்பதை இலக்காகக் கொண்ட தொழில்நுட்பப் பரப்பு நடவடிக்கைகள் மூலம் 97 வதிவிட மற்றும் களப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு 1,754 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.*

*3.2 ஆலோசனை சேவைகள், பொறியியல் சேவைகள் மற்றும் ஆய்வகச் சேவைகள்*

*அறுவடைக்குப் பிந்திய பதப்படுத்தும் இயந்திரங்களைப் பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தல் மற்றும் அந்தத் தொழில்நுட்பம் தொடர்பான 20 ஆலோசனை சேவைகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளதுடன் ஆய்வகப் பிரிவு மூலம் 1,487 உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் உரிய பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் : 39 - 41*

## *05. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் (HARTI)*

*5.1. அறிமுகம்*

*ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் (HARTI) 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டம் மூலம் நிறுவப்பட்ட விவசாய அமைச்சுடன் இணைக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும். கமநல நடவடிக்கைகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி என்பவற்றுடன் தொடர்பான சமூக பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும், அந்த ஆய்வுகளின் முடிவுகளை கொள்கை ரீதியான முடிவுகளை மேற்கொள்வதற்கு உதவும் வகையில் கொள்கை வகுப்பாளர்களுக்கு வழங்குவதும் இந்த நிறுவனத்தின் முதன்மைப் பணிகளாக அமைகின்றன. சமூகப் பொருளாதாரம் மற்றும் கிராமிய அபிவிருத்தியின் விவசாயம் தொடர்பான கூறுகளை ஆராயும் வகையில் அதிகாரப்பூர்வமாக அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம் இதுவாகும். இந்தப் பின்னணியில், அதன் 52 ஆண்டு கால வரலாற்றில், அரசாங்க, தனியார் மற்றும் சிவில் சமூகப் பங்குதாரர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்காக அதன் கவன வரம்பிற்குள் உயர்தரத் தரவுகளையும் தகவல்களையும் வழங்கும் ஒரு முக்கிய பங்கை இது ஆற்றி வந்துள்ளது. பட்டறைகளை ஏற்பாடு செய்வதன் மூலம் அனைத்து பங்குதாரர்களுடனும் ஆராய்ச்சிகளின் முடிவுகளை பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதும் இதன் ஏனைய செயல்பாடுகளில் ஒன்றாகும். விவசாயிகள், அதிகாரிகள் உள்ளிட்டவர்களின் திறமைகள் மற்றும் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக பயிற்சி திட்டங்களை நடத்துவதும், புதிய கருத்துகள் மற்றும் தொழில்நுட்பங்களை பரப்புவதும் இந்நிறுவனத்தின் முக்கிய பணிகளாக உள்ளன. மேலும், பல்வேறு துறைகளுடன் தொடர்பான பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் உளப்பாங்கு விருத்தியேற்படுத்தல், விவசாயிகளினதும், அதிகாரிகளினதும், வர்த்தகர்களினதும் மற்றும் ஏனைய பங்குதாரர்களினதும் திறன்களையும் விழிப்புணர்வையும் அதிகரித்தலும் எங்கள் நிறுவனத்தால் நிறைவேற்றப்படும் மற்றொரு முக்கியமான பணி ஆகும்*

5.2. தொலைநோக்கு

நிலைபேறான விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான அறிவை உற்பத்தி செய்து விநியோகிப்பதில் முன்னணி நிறுவனமாக திகழ்தல்.

5.3. செயற்பணி

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஊடாக விவசாய மற்றும் கிராமியத் துறைகளைப் பலப்படுத்துதல்.

அட்டவணை 01: **2026** ஆம் ஆண்டிற்கான நிதி இலக்குகள்;

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 269.217 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 55.57 |

அட்டவணை 02: **2026** ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | ஒரு அலகுக்கானசெலவு (மில். ரூபா.) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1. | விவசாயம் மற்றும் கிராமியத் துறையை உள்ளடக்க்கும் வகையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் (உரிய துறைகளைக் இனக்கண்டு தற்போது திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன). | ஆராய்ச்சிகள் அறிக்கைகள் | 100% | - | 20.10 |
| 2. | கல்வி மற்றும் பயிற்சி | பயிற்சி நிகழ்ச்சிகள் எண்ணிக்கை | 100% | - | 8.50 |
| 3. | தகவல் மற்றும் தொடர்பாடல் | | 100% | - | 5.10 |
| 4. | ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கான வளங்கள் | | 100% | - | 1.80 |
| | கூட்டுத்தொகை | | | | 35.50 |

அட்டவணை 03: 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் முடிவில் நிறுவனத்தின் திட்டங்களின் நிதி முன்னேற்றம் (2025.09.30 வரை)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 2025.09.30 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மீண்டுவரும் செலவுகள் | 276,797 | 174,403 | 63 |
| 2 | மூலதன செலவுகள் | 38.00 | 13.75 | 36.2 |
| | வெளிப்புற நிதியுதவி செயற்திட்டங்கள் | | | |
| 1 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பெண் | 3.14 | 2.36 | 75 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை (மில். ரூபாய்) | 2025.09.30 ஆம் திகதி வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| | தொழில்முனைவோர்களிடையே திறன் மேம்பாடு மற்றும் வலையமைப்பு உருவாக்கம் மூலம் வர்த்தக வாய்ப்புகள் மற்றும் தொழில் இணைப்புகளை ஊக்குவித்தல் (DevPro) | | | |
| 2 | இலங்கையில் நிலைபேறான, அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய அபிவிருத்திக்கு பெண்கள் மற்றும் இளைஞர்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான செயற்திட்டம்: கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறை (ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிலையம்) | 1.5 | 1.13 | 75 |
| 3 | சிறந்த தரத்திலான விதை மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி, தரச் சான்றுறுதி மற்றும் சந்தைப்படுத்தல் அமைப்பை வலுப்படுத்துதல் (உணவு மற்றும் விவசாய அமைப்பு) | 7.52 | 4.67 | 62 |
| 4 | இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட பிராந்தியங்களில் வாழை, மா மற்றும் அன்னாசி போன்ற பழ பயிர்களுக்கான பெறுமதிச் சங்கிலிகளை வலுப்படுத்துவது தொடர்பாக இற்றைப்படுத்தப்பட்ட அடிப்படை ஆய்வு. (உணவு மற்றும் விவசாய அமைப்பு) | 6.57 | 1.96 | 30 |

ஆராய்ச்சி கற்கைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளின் பட்டியல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் 04 மற்றும் 05ஆகிய அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை **04:** ஆராய்ச்சி கற்கைகள்

| தொ/ இல | செயற்திட்டம் | நிதி (மில். ரூபாய்) | | பௌதீக (%) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 1 | இலங்கையில் அவரைக் குடும்பப் பயிர் வகைகளை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தலில் உள்ள போக்குகள் மற்றும் சவால்கள்: மதிப்புச் சங்கிலி பகுப்பாய்வு | 2.00 | 1.60 | 60 | 40 |
| 2 | இலங்கையில் காய்கறிச் செய்கையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பீடைக் முகாமைத்துவம்: தகவமைப்பு, சவால்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் | 1.50 | 1.03 | 100 | 50 |
| 3 | மலையக காய்கறி செய்கையில் மண் ஊட்டச்சத்து முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் தடைகள் | 1.50 | 0.46 | 100 | 40 |
| 4 | இலங்கையில் விவசாய சமூகங்களிடையே தாங்குதிறனை உருவாக்குவதற்கான காலநிலை | 0.50 | 0.05 | 100 | 40 |

| தொ/ இல | செயற்திட்டம் | நிதி (மில். ரூபாய்) | | பௌதீக (%) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| | கட்டுப்பாடு: கொள்கைகள், கட்டமைப்புகள் மற்றும் நிறுவன அமைப்பு பற்றிய மதிப்பாய்வு. | | | | |
| *5* | நிலைபேறான உற்பத்திக்கான கால்நடை விரிவாக்க சேவைகளை வலுப்படுத்துதல்: நிறுவன கட்டமைப்புகள், சேவை செயல்பாடுகள் மற்றும் திறன் மேம்பாட்டு உத்திகள் பற்றிய பகுப்பாய்வு | *1.90* | *0.86* | *100* | *40* |
| *6* | இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பிரதான விவசாய உணவுப் பொருட்களின் மீதான இறக்குமதி வரிகள் தொடர்பான மதிப்பாய்வு. | *1.00* | *0.08* | *100* | *35* |
| *7* | இலங்கையில் விவசாயத் துறையில் உள்ள பெண்களை வலூட்டுவதில் மகளிர் அமைப்புகளின் தாக்கம்: வரையறைகள், வாய்ப்புகள் மற்றும் உத்திகள் | *1.70* | *0.60* | *100* | *40* |
| *8* | ஒரு நேர ஆரோக்கியமான *(CoHD)* உணவுக்கான செலவு மற்றும் கட்டுப்படியாகும் தன்மை என்பன பற்றிய பகுப்பாய்வு: இலங்கை | *0.72* | *0.14* | *65* | *45* |
| *9* | இலங்கையில் பாதுகாக்கப்பட்ட விவசாயம்: தற்போதைய நிலை, சவால்கள் மற்றும் கொள்கை தலையீடுகள் | *2.30* | *0.37* | *100* | *35* |
| *10* | இலங்கையில் நெல் ஆலை உரிமையாளர் தொகை கணக்கெடுப்பு | *4.45* | *4.42* | *100* | *100* |
| *11* | விவசாயிகளின் புரிதல் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள் *(GAP)* தொழில்நுட்பங்களை பின்பற்றுதல். | *0.95* | *0* | *100* | *30* |
| *12* | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களுக்கு வாயுத் துப்பாக்கிகளை விநியோகித்ததன் நிலைபேறான தன்மையை மதிப்பீடு செய்தல். | *1.78* | *0* | *100* | *35* |

*அட்டவணை 05: 2025 ஆம் ஆண்டில் இலக்காகக்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்*

| தொ/ இல | பயிற்சி நிகழ்ச்சிகள் | நிதி (மில். ரூபாய்) | | பௌதீக (%) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| *1* | விவசாய அமைப்புகளை வலுப்படுத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | *2.0* | *1.50* | *100* | *80* |

| தொ/ இல | பயிற்சி நிகழ்ச்சிகள் | நிதி (மில். ரூபாய்) | | பௌதீக (%) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 2 | தெங்குத் துறையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்த பட்டறை | 0.4 | 0.27 | 100 | 80 |
| 3 | விவசாய சுற்றுலா நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 1.5 | 0.09 | 100 | 40 |
| 4 | "கிராமிய இளைஞர்களை விவசாய தொழில்முனைவோராக வளர ஊக்குவித்தல்" தொடர்பான மூன்று நாள் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சி | 1.5 | - | 100 | - |
| 5 | வீடியோ ஆவணப்படங்கள் | 1.6 | 0.31 | 100 | 40 |

*மூன்றாம் காலாண்டின் இறுதியளவில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*2025 ஆம் ஆண்டில், விவசாயத் துறையின் பல்வேறு துறைகளை இலக்காகக் கொண்டு வரவுசெலவு ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி 12 ஆராய்ச்சிக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஆய்வுகள் கிராமிய அபிவிருத்தி, உணவு மற்றும் போசணைப் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான விவசாயத் துறை என்பவற்றில் விசேடம் கவனம் செலுத்தி பல தலைப்புகளின் கீழ் செயல்படுத்தப்பட்டன.*

*கிராமியத் துறை அபிவிருத்தி : கிராமியப் பொருளாதாரத்தில் விருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளை ஆராய்வதற்காக இரண்டு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. அவை: நிலைபேறான உற்பத்திக்காக கால்நடை விரிவாக்கச் சேவைகளை வலுப்படுத்துதல்: நிறுவனக் கட்டமைப்பு, சேவைச் செயல்பாடுகள் மற்றும் திறன் மேம்பாட்டு உத்திகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் இலங்கையின் விவசாயப் பெண்களை மேம்படுத்துவதில் மகளிர் அமைப்புகளின் தாக்கம்: வரம்புகள், வாய்ப்புகள் மற்றும் உத்திகள். 2025 செப்டம்பர் மாத இறுதியளவில், இந்த ஆய்வுகள் 40% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன.*

*உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு: இலங்கை உட்பட பல நாடுகள் எதிர்கொள்ளும் சவாலான உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பை உறுதி செய்வது பொருளாதார திட்டமிடலின் முதன்மை நோக்கமாகும். இவ்வாறு குறித்த துறையை இலக்காகக் கொண்டு கொள்கைப் பரிந்துரைகளை வழங்க, 2025 இல் இரண்டு ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது நகர்ப்புற இளைஞர்களிடையே உணவு நுகர்வு முறைகள் மற்றும் நடத்தைகளை ஆராய்கிறது, இது எதிர்கால உணவு தேவையை வடிவமைப்பதில் முக்கியமான மக்கள்தொகை கணக்கெடுப்பாகக் கருத முடியும். இரண்டாவது ஆய்வு, இது நிலைபேறான உணவுக் கொள்கைகளை உருவாக்குவதற்கு அவசியமான காரணிகளான அத்தியாவசிய போசனைமிக்க உணவுகளின் விலை மற்றும் தாங்கத்தகுதிறன் என்பவை தொடர்பாக மதிப்பிடுவதில் கவனம் செலுத்துகிறது, து. இந்த ஆய்வுகளின் பௌதீக முன்னேற்றம் 75% ஆகும். மேலும், இலங்கையில் அவரைக் குடும்பப் பயிர்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் போக்குகள் மற்றும் சவால்கள் என்பன தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. இரண்டாவதாக, இலங்கையின் பிரதான இறக்குமதி செய்யப்படும் விவசாய உணவுப் பொருட்களுக்கான இறக்குமதி வரிகள் பற்றிய ஆய்வில் கவனம் செலுத்தப்பட்டது. ஆரோக்கியமான உணவிற்கான செலவு மற்றும் மலிவுத்தன்மை பற்றிய பகுப்பாய்வு உணவுப் பாதுகாப்பு குறித்த முடிவுகளை மேற்கொள்வதில்*

மிகவும் முக்கியமானது ஆகும். இந்த ஆய்வுகளின் பௌதீக முன்னேற்றம் முறையே 40%, 35% மற்றும் 45% ஆக உள்ளது.

நிலைபேறான விவசாயம் : நிலைபேறான விவசாய நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு 2025 ஆம் ஆண்டில் நான்கு ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் காய்கறிச் செய்கையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பீடை முகாமைத்துவம்: தகவமைப்பு, சவால்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்ட இந்த ஆய்வு 50% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. மலைநாட்டு காய்கறிப் பயிர்ச் செய்கையில் மண்ணின் ஊட்டச்சத்து முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் தடைகள் பற்றிய ஆய்வு மற்றும் இலங்கையில் பாதுகாக்கப்பட்ட விவசாயம்: தற்போதைய நிலை, சவால்கள் மற்றும் கொள்கை தலையீடுகள் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) தொழில்நுட்பங்களை பின்பற்றுவது குறித்த விவசாயிகளின் கருத்து குறித்தும் இந்த ஆண்டு கவனம் செலுத்தப்பட்டது.

காலநிலைக்கு சீரமைவான விவசாயம்: காலநிலைக்கு சீரமைவான விவசாயத் தீர்வுகளை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இலங்கையில் விவசாய சமூகங்களிடையே தாங்குதிறனை உருவாக்குவதற்கான காலநிலை கட்டுப்பாடு: கொள்கைகள், கட்டமைப்புகள் மற்றும் நிறுவன அமைப்பு என்பன பற்றிய மதிப்பாய்வின் மீது கவனம் செலுத்தப்பட்டது. 2025 செப்டம்பர் இறுதிக்குள் இந்த ஆய்வு 40% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

மிகத் துல்லியமான, புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெறும் நோக்குடன், இலங்கையில் உள்ள அரிசி ஆலைகள் பற்றிய தொகைக் கணக்கெடுப்பு இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், இது 100% பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

சந்தை தகவல் திரட்டுதல் மற்றும் விநியோகித்தல் செயற்திட்டம் - விவசாயச் சந்தைத் தகவல்கள், குறிப்பாக உணவுப் பொருட்களின் விலைகளைத் திரட்டுதல், தொகுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவை அந்தக் காலப்பகுதியில் 100% பௌதீக முன்னேற்றத்தைப் பதிவு செய்தது. தினசரி மற்றும் வாராந்த உணவுப் பொருள் விளக்கக் கையேடுகள் (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) தொடர்ந்து வெளியிடப்பட்டன.

2025 இல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி ஆய்வுகள் பலதரப்பட்ட துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன. அவை கிராமிய அபிவிருத்தி, உணவுப் பாதுகாப்பு, பெறுமதிச் சங்கிலி மற்றும் நிலைபேறான விவசாய நடைமுறைகள் ஆகிய பரந்த இலக்குகளுடன் சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும், இவை இலங்கையின் விவசாயத் துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு அத்தியாவசியமான கொள்கை பரிந்துரைகளை வழங்கும். இந்த அனைத்து ஆய்வுகளின் அறிக்கை மற்றும் கொள்கைச் சுருக்கத்தின் முதல் வரைவை 2025 டிசம்பர் 31ஆம் திகதிக்குள் நிறைவுசெய்வதே நிறுவனத்தின் இலக்கு ஆகும்.

பயிற்சித் திட்டங்கள் - 2025

2025 ஆம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழச்சிகளின் எண்ணிக்கை மூன்று ஆகும். இதில், காலி மாவட்டத்தின் கமநல சேவைப் பிரவுகளை மையமாகக் கொண்ட அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சிக்காக 2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன், மாவட்டத்தில் உள்ள 30 கமநல சேவைப் பிரவுகளில் 30 நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. இதன் கீழ், இதுவரை நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை 20 ஆகும். இதில் கலந்துகொண்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வி.ஆ.உ.அ அலுவலர்களின் எண்ணிக்கை 1116 ஆகும். விவசாய சுற்றுலா சார்ந்த தொழில்முனைவோர் அபிவிருத்திப் பயிற்சித் திட்டங்களுக்காக 1.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதன் கீழ் இதுவரை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் விவசாயக் கள அதிகாரிகள் உட்பட, ஏற்கனவே விவசாயச் சுற்றுலா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள மற்றும் அதில் ஆர்வமுள்ள

*இளைஞர்கள் உள்ளிட்ட 75 பேர் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாகாணங்களுக்கிடையேயான விவசாய பணிப்பாளர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.*

*2025 வெளியீடுகள்*

*இந்த நிறுவனம் இந்த ஆண்டு இதுவரை ஏழு ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. இது தவிர, "கொவிஜனதா" சிங்கள சஞ்சிகையின் மூன்று இதழ்கள் (தொகுதி 27, இலக்கம் 1-2 மற்றும் ஆண்டு நிறைவுப் பதிப்பு) மற்றும் தேசிய புத்தரிசி விழா 2025 இற்கான ஒரு விசேட வெளியீடும் வெளியிடப்பட்டது. சுற்றுச்சூழல் விவசாயம் பற்றிய சிங்களக் கையேடு இந்த ஆண்டின் போது வெளியிடப்பட்டது. மேலும், நிறுவனம் 51 ஆவணப்படங்கள் மற்றும் 234 குறுகிய ஆவணப்படங்களைத் தயாரிப்பதன் மூலம் தனது அறிவுப் பரவலாக்கல் முயற்சிகளை விரிவுபடுத்தியுள்ளது. சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை இலக்காகக் கொண்டு SME கையேடு மற்றும் SME சஞ்சிகையின் ஐந்து இதழ்கள் வெளியிடப்பட்டன. இலங்கை மக்களுக்கு சமீபத்திய செய்திகள் மற்றும் விவசாயத் தொழில்நுட்பங்களுக்கான அணுகலை வழங்குவதற்காக கொவிமிண இணையதளம் தடையின்றி இயங்கி வருகிறது.*

*வட மாகாணத்தில் பனை சார்ந்த கைவினைப் பொருட்கள் (handicrafts) குறித்துப் பதிவு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சி இதுவாகும். பனை அபிவிருத்திச் சபையின் மேற்பார்வையின் கீழ் இந்தக் கைவினைப் பயிற்சித் திட்டங்கள் நடைபெறுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தப் படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். பயிற்சியின் போது செய்யப்படும் உற்பத்திகளுக்கும், அத்துடன் பயிற்சிக்குப் பின்னர் அவர்கள் செய்யும் உற்பத்திகளுக்கும் பனை அபிவிருத்திச் சபையின் தலையீட்டால் ஒரு சந்தை வாய்ப்பு வழங்கப்படுவது இந்த பெண்களுக்குப் பெரும் ஆறுதல் அளிக்கும் ஒரு விடயமாகக் காணப்படுகிறது. அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் மற்றும் வயது வேறுபாடு இல்லாமல் இந்தக் கற்கை நெறியைப் தொடர்கிறார்கள். மேலும், இந்த வீடியோக்கள் விரைவில் HARTI இன் உத்தியோகபூர்வ YOUTUBE அலைவரிசையில் ஒளிபரப்பப்பட உள்ளன. பரந்த விளம்பரம் மூலம் இந்த உற்பத்திகளுக்கான சந்தையை விரிவுபடுத்துதல், கிராமியத் கைத்தொழில்களை ஊக்குவித்தல், மற்றும் தொடர்புடைய விடயங்களைப் பற்றிப் படிப்பவர்களுக்கு அறிவை வழங்குதல் ஆகியவையே ஒளிபரப்பின் நோக்கங்களாகும். விவசாய உற்பத்திகளின் பெறுமதி சேர்த்தல் சார்ந்த தொழில்கள், நிலக்கடலை சார்ந்த பெறுமதி சேர்க்கும் உற்பத்தி தொழில்கள் - முல்லைத்தீவு மாவட்டம்*

*புகைப்பட இலக்கம் : 42 – 43*

## *06. நெல் சந்தைப்படுத்தல் சபை (PMB)*

*6.1. நோக்கு*

*நெல் மற்றும் அரிசியைக் கொள்வனவு செய்தல், சேமித்தல், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் என்பவற்றில் முன்னணிக் அரச தலையீட்டாளராகப் செயற்படல்.*

*6.2. பணிக்கூற்று*

*உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினரும் திருப்தியடையும் வகையில், நெல் மற்றும் அரிசியைக் கொள்வனவு செய்தல், சேமித்தல், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தும் செயல்முறையை அறிவு மற்றும் திறமையில் பூரணமான பணியாளர்களைக் கொண்டு வெற்றிகரமாக நிறைவேற்றுதல்.*

*6.3. நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம் பற்றிய சுருக்கமான அறிமுகம்*

- *i.* *உத்தரவாத விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்தல்.*
- *ii.* *நெல்லைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்வனவு செய்யப்பட்ட நெல்லைப் பாதுகாப்பாகச் சேமித்து வைப்பதற்கும் தேவையான சேமிப்புக் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதல்.*

*iii.* கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை அரிசியாகப் பதப்படுத்தி சந்தைக்கு வெளியிடுதல்.

*6.4. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | நெல் கொள்வனவு - பெரும் போகம் மற்றும் சிறு போகம்<br>80,000 மெ. தொன் x 125 ரூபாய் | 10,000.00 |
| 2 | மூலதன செலவுகள்<br>சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்குதல்<br>நெல் உலர்த்தும் நிலையங்களை அமைத்தல்<br>சேமிப்புத் தொட்டிகளை அமைத்தல் | <br>150.00<br>100.00<br>250.00 |
| 3 | மீண்டுவரும் செலவுகள் | 347.00 |
| 4 | உரிமைப் பங்களிப்பு - பழைய அடகு கடன்களை தவணைக் கடனாகச் செலுத்துதல் | 2,697.50 |

*6.5. 2026 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | நெல் கொள்வனவு - 2025/26 பெரும் போகம் | கிலோ கிராம் | 40,000,000 | 125.00 ரூபாய் | 5,000 |
| | 2026 சிறு போகம் | கிலோ கிராம் | 40,000,000 | 125.00 ரூபாய் | 5,000 |
| 2 | மூலதன செலவுகள் | | | | |
| | சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்குதல் | சேமிப்புக் களஞ்சியங்களின் எண்ணிக்கை | 100 | 1.50 | 150.0 |
| | நெல் உலர்த்தும் நிலையங்களை அமைத்தல் | நிலையங்களின் எண்ணிக்கை | 5 | 20.0 | 100.0 |
| | சேமிப்புத் தொட்டிகளை அமைத்தல் | கட்டிடங்களின் எண்ணிக்கை | 5 | 50.0 | 250.0 |

6.6. 2025 ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியளவில் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் (2025.09.30 ஆம் திகதி வரை)

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | | | |
| | 118-02-03-020-2202 | | | |
| | உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம் - சேமிப்புக் கிடங்குகளைப் புனரமைத்தல் - இரண்டாம் கட்டம் | 9.9 | 9.9 | 100% |
| | சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்குதல் - இரண்டாம் கட்டம் | 5.8 | - | 0% |
| | 118-02-03-094-2509 | | | |
| | சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்குதல் - நான்காம் கட்டம் | 151.5 | - | 0% |
| | | 4.0 | 1.7 | 42.5% |
| | சேமிப்புக் களஞ்சியங்களுக்கான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 20.0 | - | 0% |
| | நெல் உலர்த்தும் நிலையங்களை உருவாக்குதல் | 2.0 | - | 0% |
| | வலைப்பக்கம் (Web Page) மற்றும் தகவல் அமைப்பை அபிவிருத்தி செய்தல் | 7.5 | - | 0% |
| | நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் | 2.0 | 0.2 | 10% |
| | | 4.5 | - | 0% |
| | பயிற்சி மற்றும் அபிவிருத்தி | | | |
| | நிர்வாகச் செலவுகள் | | | |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 185.0 | 153.4 | 83% |
| 3 | உரிமைப் பங்களிப்பு | 2,697.5 | 2,071.9 | 77% |
| | மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி மூலம் பெறப்பட்ட அடகு கடன்களை நடைமுறைக் கடனாக தவணை அடிப்படையில் செலுத்துதல் | | | |
| அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | | |
| | நெல் கொள்வனவு, 2024/25 பெரும் போகம், செயற்பாட்டுச் செலவுகள், | 300.0 | 8.07 | 3 |
| 1 | 2025 சிறு போகம், மேலதிக ஒதுக்கீடு, செயற்பாட்டுச் செலவுகள் | 6,008.5 | 5,987.1 | 99 |

*6.7. 2025 ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியளவில் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் (2025.09.30 ஆம் திகதி வரை)*

| செயல் திட்டத்திற்கு அமைவாக இலக்காகக் கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | செயற்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்க எதிர்பார்க்கப்படும் வேலைகள் / சேவைகள் மற்றும் பௌதீக முன்னேற்றம் |
|---|---|
| மூலதன செலவுகள் | |
| *i.* சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்குதல் - இரண்டாம் கட்டம் | *40 சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்கத் திட்டமிடப்பட்டது. 36 சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.* |
| *ii.* - மூன்றாம் கட்டம்<br>*iii.* - நான்காம் கட்டம் | *46 சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்கத் திட்டமிடப்பட்டது. 21 சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.* |
| *iv.*<br>*v.* சேமிப்புக் களஞ்சியங்களுக்கான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல் | *94,500 மெட்ரிக் தொன் கொள்ளளவு கொண்ட 78 சேமிப்புக் களஞ்சியங்களை நவீனமயமாக்கும் பணிகளை மாவட்டச் செயலாளர்கள் மூலம் மேற்கொள்வதற்காக, சேமிப்புக் களஞ்சியங்களின் பட்டியல்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அமைச்சு மூலம் தொடர்புடைய நிதி ஒதுக்கீட்டுக் கடிதங்கள் மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.* |
| *vi.* நெல் உலர்த்தும் நிலையங்களை உருவாக்குதல் | *179 தராசுகள் மற்றும் 8 ஈரப்பதன் அளவிடும் இயந்திரங்களைப் புனரமைத்தல்.* |
| *vii.* வலைப்பக்கம் *(Web Page)* மற்றும் தகவல் அமைப்பை அபிவிருத்தி செய்தல் | கொள்முதல் செயல்முறையை ஆரம்பிப்பதற்காக தொழில்நுட்ப அறிக்கை மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்கள் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன. |
| *viii.* நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் | ஆரம்பக் கட்டப் பணிகளை ஆரம்பிப்பதற்குத் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்றது.<br>தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நடத்தப்பட உள்ளது. |
| *ix.* பயிற்சி மற்றும் அபிவிருத்தி | அதிகாரிகளுக்காக ஒரு பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டுள்ளது. |
| *x.* நிர்வாகச் செலவுகள் | |
| மீண்டுவரும் செலவுகள் | சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய மீண்டுவரும் செலவுகளுக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. |
| உரிமைப் பங்களிப்பு<br>மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி மூலம் பெறப்பட்ட அடகு கடன்களை நடைமுறைக் கடனாக தவணை அடிப்படையில் செலுத்துதல் | உரிமைப் பங்களிப்பின் கீழ், மூன்றாம் காலாண்டு முடிவில் *2,071.9* மில்லியன் ரூபாய் பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பணம் வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. |
| நெல் கொள்வனவு - *2024/25* பெரும் போகம்<br>- *2025* சிறு போகம் | *2024/25* பெரும் போகத்தில், *55.54* மெட்ரிக் தொன் நாட்டரிசி நெல் மற்றும் *2.72* மெட்ரிக் தொன் சம்பா நெல் என மொத்தமாக *59.56* மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.<br>*2025* சிறு போகத்தில், *49,330.82* மெட்ரிக் தொன் நாட்டரிசி நெல், *228.05* மெட்ரிக் தொன் சம்பா நெல் மற்றும் *12.7* |

| செயல் திட்டத்திற்கு அமைவாக இலக்காகக் கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | செயற்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்க எதிர்பார்க்கப்படும் வேலைகள் / சேவைகள் மற்றும் பௌதீக முன்னேற்றம் |
|---|---|
| | மெட்ரிக் தொன் கீரி சம்பா நெல் என மொத்தமாக 49,571.57 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.<br><br>குறிப்பிட்ட தரத்துடன் விவசாயிகள் கொண்டு வந்து ஒப்படைக்கும் ஒரு கிலோகிராம் நாட்டரிசி (வெள்ளை/ சிவப்பு) நெல் 120.00 ரூபாய் வீதமும், ஒரு கிலோகிராம் சம்பா (வெள்ளை/ சிவப்பு) நெல் 125.00 ரூபாய் வீதமும், ஒரு கிலோ கிராம் கீரி சம்பா நெல் 132.00 ரூபாய் வீதமும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |

*புகைப்பட இலக்கம் : 44 - 45*

## 07. விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை (AAIB)

*7.1. நியதிச்சட்டங்களுக்கு அமைவாக நிறுவனம்*

உடனடி அனர்த்த நிலைமைகளின்போது உள்நாட்டு விவசாயத் தொழிற்துறை மற்றும் விவசாய சமூகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பினைச் சுமந்து நிற்கும் அரசின் கடமையை நிறைவேற்றும் பொருட்டு 1973 இன் 27 ஆம் இலக்க விவசாயக் காப்புறுதிச் சட்டம் மூலம் நிறுவப்பட்ட விவசாயக் காப்புறுதிச் சபை, 1999 இன் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம் மூலம் விவசாயக் காப்புறுதிக்கான ஒரேயொரு அரச காப்புறுதி நிறுவனம் என்ற வகையில் விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையாக மறுசீரமைக்கப்பட்டு மீண்டும் நிறுவப்பட்டது.

விவசாய இடர் முகாமைத்துவம் மற்றும் சமூக நலன்புரி ஆகியவற்றை இலக்காகக் கொண்டு, கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை செயற்படுகிறது.

*7.2. பிரதான விடயத் துறைகள் (Core Area)*

விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை மூலம், இலங்கையின் விவசாயத் துறை எதிர்கொள்ளும் இடர் முகாமைத்துவ வழிமுறையாகப் பயிர், கால்நடை மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய துறைகளின் கீழ் பல விவசாயக் காப்புறுதித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம், உடனடி அனர்த்தத்தின்போது விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியைக் குறைப்பதற்கும், அத்தகைய சூழ்நிலையில் விவசாயக் கடன்களை வழங்கும் நிதி நிறுவனங்கள் தமது நிதி ஸ்திரத்தன்மையை விருத்தி செய்துகொள்வதற்கும் இது உதவியாக அமைகிறது.

இவற்றுக்கு மேலதிகமாக, விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை மூலம், இலங்கையின் விவசாயத் துறையுடன் தொடர்புடைய விவசாயிகளின் ஓய்வுநிலை வாழ்க்கையைப் பாதுகாக்கும் நோக்குடன் விவசாயி மற்றும் மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

*7.3. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 10.00 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 7,654.70 |

*2026 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | விவசாயிகள் மற்றும் மீனவர்கள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டம் (தொடர்ச்சி) | - | - | - | 1,800.00 |
| 2 | விவசாயிகள் மற்றும் மீனவர்கள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டம் (தொடர்ச்சி) | - | - | - | 5,817.50 |
| 3 | விவசாயக் காப்பீட்டுத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் விரிவாக்க முயற்சி | - | - | - | 5.00 |
| 4 | கால்நடை சுகாதார காப்பீட்டுத் திட்டத்திற்கான நடைமுறை சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் பங்குதாரர் ஈடுபாடு | - | - | - | 3.00 |
| 5 | விவசாயிகளுக்கான நிலைபேறான சமூகப் பாதுகாப்புத் திட்டம் | - | - | - | 29.20 |

*7.5. 30.09.2025 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | - | - | - |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 7142 | 4599.37 | 64.40% |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| 1 | விவசாயிகள் மற்றும் மீனவர்கள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டம் (தொடர்ச்சி) | 5,635 | 3,972.6 | 70.50% |
| 2 | 2018 ஆம் ஆண்டு வாவுசெலவு முன்மொழிவின்படி நெல், சோயா, உருளைக் கிழங்கு, சோளம், பெரிய வெங்காயம் மற்றும் மிளகாய் ஆகியவற்றுக்கான கட்டாய காப்பீட்டுத் திட்டம் (தொடர்ச்சி) | 1,500 | 626 | 41.73% |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | *2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா)* | *30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா)* | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் *(%)* |
|---|---|---|---|---|
| *3* | விவசாயக் காப்பீட்டுத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் விரிவாக்க முயற்சி | *5* | *0.77* | *15.40%* |
| *4* | விவசாயிகளுக்கான நிலைபேறான சமூகப் பாதுகாப்பு | திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை | | |
| *5* | கால்நடை சுகாதார காப்பீட்டுத் திட்டத்திற்கான நடைமுறை சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் பங்குதாரர் ஈடுபாடு | *2* | - | *0* |

*7.6. 2025.09.30 ஆம் திகதியளவில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதிக முன்னேற்றம்*

*2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில், 2018 தேசிய பயிர்க் காப்புறுதித் திட்டம் எனும் செயற்திட்டத்தின் கீழ் 2023 சிறு போகம் , 2023/24 பெரும் போகம், 2024 சிறு போகம் மற்றும் 2024/25 பெரும் போகம் ஆகிய விவசாயப் போகங்களில் நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய், சோயா ஆகிய பயிர் வகைகளைப் பயிரிடும் 81,735 விவசாயிகளுக்கு, வெள்ளம், வரட்சி, காட்டு யானைகள் தாக்கம் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் காரணமாக சேதமடைந்த 97,757 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலங்களுக்கு 1,678.0 மில்லியன் ரூபாய் இழப்பீட்டு தொகையாக வழங்கப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 46*

*2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில், பழைய விவசாயிகள் மற்றும் மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் நலன்கள் திட்டம் எனும் செயற்திட்டத்தின் கீழ் 185,065 ஓய்வூதியதாரர்களுக்கு 3,972.60 மில்லியன் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்பட்டது.*

*2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில், விவசாயக் காப்புறுதித் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் விரிவாக்க முயற்சி எனும் செயற்திட்டத்தின் கீழ் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் என்பதன் கீழ், சபையின் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தில் மேற்பார்வை மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து உயர்நிலை அதிகாரிகளும் மற்றும் களத்திலுள்ள அபிவிருத்தி மற்றும் கள அதிகாரிகளும், பிரதான ஆறு பயிர்களை அடிப்படையாகக் கொண்டு, விவசாய தொழில்நுட்பம் மற்றும் பயிர்ச் சேதத்தை மதிப்பிடும் வழிமுறைகள் குறித்துப் பயிற்சி அளிக்கும் இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் கமத்தொழில் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியுடன் நடத்தப்பட்டன. இந்த பயிற்சிப் பட்டறைகளில் சுமார் 150 அதிகாரிகள் கலந்துகொண்டனர்.*

*புகைப்பட இலக்கம் 47*

*கால்நடைச் சுகாதாரக் காப்புறுதித் திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் பங்குதாரர்களின் பங்களிப்புச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்தது. அதன்படி, பால் மாடுகளுக்கான சுகாதாரக் காப்புறுதி காப்பீட்டை உருவாக்குவதற்கான ஆரம்ப ஆய்வுப் பணிகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. இதற்கு இணையாக, சபையின் அதிகாரிகள் கால்நடை இடர்நேர்வுகள் குறித்த ஆரம்ப விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்வரும் வாரங்களில் நடத்தத் திட்டமிட்டு வருகின்றனர்.*

விவசாயிகளுக்கான நிலைபேறான சமூகப் பாதுகாப்பு எனும் செயற்திட்டத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை.

## 08. இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை (SLCARP)

### 8.1. அறிமுகம்

1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபைச் சட்டம் அமுலுக்கு வந்ததன் மூலம், விவசாய அமைச்சின் கீழ் 1987 டிசம்பர் 22 ஆம் திகதி இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபை நிறுவப்பட்டது. தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்புக்குள் விவசாய ஆராய்ச்சிக்கான செயலூக்கமான ஒத்துழைப்பை வழங்குவதை இச்சபை நிறைவேற்றுகிறது. தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்புக்குள் சாதகமான சூழலை உருவாக்குவதன் மூலம் விவசாயத் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை விருத்தி செய்வது இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபையின் ஒப்படைக்கப்பட்ட பணியாகும். கொள்கைச் சபையின் பிரதான பணிகளாக, ஆராய்ச்சி முன்னுரிமைத் துறைகளை அடையாளம் காணுதல், உரிய துறைகள் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் இடையீட்டு நடவடிக்கைகளுக்கு வசதி செய்தல், ஆராய்ச்சியை மேற்கொள்ளும்போது ஏற்படக்கூடிய தடைகளை நீக்குதல் மற்றும் தொடர்புடைய குழுக்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கு ஒரு பங்களிப்பை வழங்குதல் என்பன காணப்படுகின்றன.

### 8.2. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 100.00 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 76.62 |
| 3 | தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் | 75.00 |

### 8.3. 2026 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக் கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 2501.01 | 2026 ஆம் ஆண்டிற்கான தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்புக்காக நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சிச் செயல் திட்டங்களைச் சேகரித்தல், தேசிய விவசாய ஆராய்ச்சிக் திட்டம்/ நிறுவனங்களுக்கிடையேயான மற்றும் பன்முகத் துறைசார் ஆராய்ச்சி மானியத் திட்டத்தின் கருத்தாக்கப் பத்திரங்களைச் சேகரித்தல் மற்றும் அரசாங்கத்திற்குப் பரிந்துரைப்பதற்காகக் கொள்கை | செயல் திட்டங்கள் - 25, கருத்தாக்கப் பத்திரங்கள் - 100, கொள்கை அறிக்கைகள் - 02 | 127 | 0.01 | 1.50 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக் கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | அறிக்கைகளைத் தயாரித்தல். | | | | |
| 2501.02 | தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளை வகுத்தல். | அறிக்கைகள் | 06 | 0.08 | 0.50 |
| 2501.03 | ஆராய்ச்சி இடைவெளி பகுப்பாய்வு/ஆராய்ச்சி வெளியீட்டு ஆய்வு (பயிலரங்குகள்/ஆய்வுகள்). | கருத்தரங்குகள் | 1 | 1.00 | 1.00 |
| 2501.04 | "விவசாய ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கான தகவல்" தரவுத்தளத்தை முகாமைத்துவம் செய்தல். | தரவுத்தளங்கள் | 30 | 0.02 | 0.50 |
| 2501.05 | நிறுவனங்களின் வெளிப்புற மீளாய்வு. | நிறுவனங்கள் | 4 | 0.63 | 2.50 |
| 2501.06 | தேசிய விருது விழா. | விழாக்கள் | 2 | 0.25 | 0.50 |
| 2501.07 | வருடாந்த கலந்துரையாடல் கருத்தரங்கு | கருத்தரங்குகள் | 1 | 0.50 | 0.50 |
| 2501.08 | நிறுவனங்களுக்கிடையேயான பன்முகத் துறைசார் ஆராய்ச்சி மானியத் திட்டம் - நிதி. | செயற்திட்டங்கள் | 30 | 1.69 | 50.62 |
| 2501.09 | அக்ரினெட் (Agrinet) மற்றும் நூலகம், இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபையின் சுருக்கச் செய்திப் பத்திரிகை மற்றும் இலங்கை உணவு மற்றும் விவசாய சஞ்சிகை. | இதழ்கள் | 2 | 0.50 | 1.00 |
| 2501.10 | தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்புகளை மேம்படுத்துதல் (ஆசிய பசுபிக் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் சங்கம் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்). | பயிற்சி மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | 12 | 0.83 | 10.00 |
| 2501.11 | விவசாய ஆராய்ச்சி தொடர்பான சர்வதேச, தேசிய மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான பிரச்சினைகள் குறித்து கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளை ஏற்பாடு செய்தல். | கருத்தரங்குகள் | 3 | 1.67 | 5.00 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக் கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 2501.12 | விவசாய ஆராய்ச்சிப் பணியாளர்களின் பட்டப்பின்படிப்புப் பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் விஞ்ஞானிகளைப் பரிமாறிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | பயிற்சி | 5 | 2.00 | 10.00 |
| 2501.13 | விவசாய ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் துறைகளின் செயற்றிறனை அவ்வப்போது மீளாய்வு செய்தல். | செயற்திட் டங்கள் | 80 | 0.03 | 2.00 |

*8.4. 30.09.2025 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 75.00 | 21.12 | 28% |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 93.00 | 39.47 | 42% |

*8.5. 2025.09.30 திகதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

- *2025 ஆம் ஆண்டிற்கான தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்புக்கு நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சிச் செயல் திட்டங்களைச் சேகரித்தல் மற்றும் குறுகிய மற்றும் நடுத்தர கால ஆராய்ச்சிக் கொள்கை முன்னுரிமைகளின் அடிப்படையில் செயல் திட்டங்களை பகுப்பாய்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தேசிய விவசாய ஆராய்ச்சிக் கட்டமைப்பு/ நிறுவனங்களுக்கிடையேயான மற்றும் பன்முகத் துறைசார் ஆராய்ச்சி மானியத் திட்டக் கருத்தாக்கப் பத்திரங்களை மதிப்பிடும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டிற்காக தேசிய விவசாய ஆராய்ச்சி அமைப்புக்கான 25 நிறுவனங்களின் தரவுகள் பெறப்பட்டு செயல் திட்டப் பகுப்பாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 2026 ஆம் ஆண்டிற்காக 179 கருத்தாக்கப் பத்திரங்கள் பெறப்பட்டுள்ளன. அந்தக் கருத்தாக்கப் பத்திரங்களில் 124 மதிப்பிடப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களிடம் முழுமையான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.*
- *தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளை வகுக்கும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தேசிய விவசாய ஆராய்ச்சிக் கட்டமைப்பு/ நிறுவனங்களுக்கிடையேயான மற்றும் பன்முகத் துறைசார் ஆராய்ச்சி முன்மொழிவுகளை மதிப்பிடும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 0.6 மில்லியன் ரூபாய் ஆகும். அதில் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் செலவிடப்பட்ட தொகை 0.13 மில்லியன் ரூபாய் ஆகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு*

முடிவில் ஆறு முன்னுரிமை ஆவணங்களில் நான்கு முன்னுரிமை ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், இரண்டு முன்னுரிமைகளை வரைவு செய்ய வேண்டியுள்ளது. அவற்றில், உணவுப் பயிர் துறைக்கான தேசியக் குழு கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக கருத்துகளுக்காக தேசியக் குழு உறுப்பினர்களிடையே ஆரம்ப வரைவு ஆவணம் விநியோகிக்கப்பட்டது. மேலும், 2026 ஆம் ஆண்டிற்காகப் பெறப்பட்ட 130 செயற்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீட்டிற்காக வெளிப்புற ஆய்வாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 35 மதிப்பீட்டுப் பத்திரங்கள் பெறப்பட்டுள்ளன.

- ஆராய்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வு/ஆராய்ச்சி வெளியீட்டு ஆய்வு (பயிலரங்குகள்/ஆய்வுகள்) செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1 மில்லியன் ரூபாய் ஆகும். அதில் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் 0.21 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் விவசாய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை சமூகத்திற்குத் தெரிவிப்பதற்காக விவசாயத் துறைசார் வல்லுநர்களை அழைத்து நிகழ்ச்சிகள் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
- ."விவசாய ஆராய்ச்சிக் கொள்கை முகாமையாளர்களுக்கு தகவல்" தரவுத்தள முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1 மில்லியன் ரூபாய் ஆகும். அதில் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் 0.58 மில்லியன் ரூபாய் மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் NARS நிறுவனங்கள் 30 இல் 25 நிறுவனங்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.
- நிறுவனங்களின் வெளிப்புற மீளாய்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 2.5 மில்லியன் ரூபாய் ஆகும். தற்போது 6 நிறுவனங்களில் வெளிப்புற மீளாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தேசிய விருது விழா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 7.35 மில்லியன் ரூபாய் ஆகும். 2023 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான ஆராய்ச்சித் தகவல்களைக் கோரி, 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தேசிய விருது விழாவை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- வருடாந்த கலந்துரையாடல் கருத்தரங்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 0.8 மில்லியன் ரூபாய் ஆகும். அந்த வருடாந்த கலந்துரையாடல் கருத்தரங்கு நான்காம் காலாண்டில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- நிறுவனங்களுக்கிடையேயான பன்முகத் துறைசார் ஆராய்ச்சி மானியத் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 20 மில்லியன் ரூபாய் ஆகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் செலவு 16.23 மில்லியன் ரூபாய் ஆகும். 10 புதிய செயற்திட்டங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 5 செயற்திட்டங்களுக்காக நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.
- இலங்கை உணவு மற்றும் விவசாய சஞ்சிகை மற்றும் இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபையின் சுருக்கச் செய்திப் பத்திரிகையின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 2 மில்லியன் ரூபாய் ஆகும். அதில் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் 3.6 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.
- தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்புகளை மேம்படுத்தும் (ஆசிய பசுபிக் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் சங்கம் / புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 10 மில்லியன் ரூபாய் ஆகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் 2.22 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் KOICA உடன் இணைந்து கொரியாவின் NARS விஞ்ஞானிகள் 20 பேருக்குப் பயிற்சித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. சீனக் கூட்டுத் தாபனம் மூலம் 60 வல்லுநர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. MARDI உடன் இணைந்து ஒரு செயல் திட்டம் நடைமுறைப்படுத்த ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. APAARI இன் வருடாந்தப் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

- *விவசாய ஆராய்ச்சி தொடர்பான சர்வதேச, தேசிய மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான பிரச்சினைகள் குறித்து கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளை ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 10 மில்லியன் ரூபாய் ஆகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் 0.6 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு சர்வதேச கருத்தரங்கு மற்றும் 2 தேசிய கருத்தரங்குகள் திட்டமிடப்பட்டுள்ளன.*
- *விவசாய ஆராய்ச்சிக் பணியாளர்களின் பட்டப்பின்படிப்புப் பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் விஞ்ஞானிகளைப் பரிமாறிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 2 மில்லியன் ரூபாய் ஆகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் 0.4 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் 12 மாணவர்கள் சர்வதேசப் பல்கலைக்கழகங்களிலும் (பிலிப்பைன்ஸில் 11 மற்றும் மலேசியாவில் 1), 5 மாணவர்கள் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பயிற்சி பெற்று வருகின்றனர்.*
- *விவசாய ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் துறைகளின் செயற்திறனை அவ்வப்போது மீளாய்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 2.7 மில்லியன் ரூபாய் ஆகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு முடிவில் 0.95 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2025 ஆம் ஆண்டின் ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் முதல் அரையாண்டு முன்னேற்ற அறிக்கைகள் 86 இதுவரை சேகரிக்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இறுதி வரை 30 செயற்திட்டங்கள் இணையவழி கூட்டங்கள் மூலம் மதிப்பிடப்பட்டன. மேலும் 30 செயற்திட்டங்களுக்கு கள மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 48*

*8.6. தேசிய விவசாய ஆராய்ச்சிக் கட்டமைப்பு, பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டம் – 118-2-3-026-2507*

- *2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு இறுதியில் நிறுவனத்தின் தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் (2025.09.30 வரை).*

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 1 | Designing and developing a cost-effective, self-cooling automated polytunnel system for the lowcountry wet zone in Sri Lanka (NARP/2024/UR/AG/02) | 1.5034 | 1.4034 | 93.35% | முதல் பயிர்ச் சுழற்சி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதுடன், விரிவான தரவு பகுப்பாய்வு முடிவடைந்துள்ளது. இரண்டாவது பயிர்ச் சுழற்சிக்கான தயாரிப்புகள் நிறைவடைந்துள்ளன, மேலும் இரண்டாவது சுழற்சியின் நடுகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப வளர்ச்சி |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | *2025* ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை *(*மில். ரூபா*)* | *30.09.2025* வரை செலவு செய்த தொகை *(*மில். ரூபா*)* | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் *(%)* | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| | | | | | கண்காணிப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. |
| *2* | *Implementation of IoT (Internet of Things) Based Smart Protected Agriculture (PA) Systems by for Polytunnels and Urban Houses (NARP/2024/UC/FOT/01)* | *2.4650* | *2.2850* | *92.70%* | பயிற்சித் தளத்தில் கட்டமைப்பு மாதிரி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஹைட்ரோபொனிக் பிரிவு நிறுவல் முன்னேற்றமடைந்த நிலையில் பல முக்கிய கூறுகள் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ளன. அளவுத்திருத்தம் மற்றும் சோதனை இயக்கங்கள் எதிர்வரும் மாதத்திற்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. |
| *3* | *Development of novel food products with functional properties using underutilized herbs in Sri Lanka (NARP/2024/USJ/SC/01)* | *1.2875* | *1.1075* | *86.02%* | தாவர இரசாயனப் பொருட்களின் *(phytochemicals)* பாதுகாப்பிற்கான சிறந்த செயல்முறை உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஜூஜுப்–லுனுவில இனிப்பு தயாரிப்பின் சோதனை உற்பத்தி நிறைவடைந்து, உணர்வுப் பரிசோதனைகள் முடிக்கப்பட்டுள்ளன. சேமிப்பு கால *(shelf-life)* மதிப்பீட்டு சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| *4* | *Weather based Blast Disease Forecasting and Early warning systems for climate risk mitigation (NARP/2024/UP/SC/01)* | *3.9506* | *3.5906* | *90.89%* | புள்ளிவிவர மதிப்பீடு நிறைவடைந்துள்ளதுடன் வானிலைத் தரவுகளை இணைத்த தொடக்க முன்னறிவிப்பு மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. சமீபத்திய களத் தரவுத் தொகுப்புகளைப் பயன்படுத்தி மாதிரி உறுதிப்படுத்தல் தற்போது நடைபெற்று வருகிறது |
| *5* | *Use of seaweed supplements (Kappaphycus alvarezi and Sargassum crassifolium) for restoring fertility in dairy cows with endometritis* | *2.9500* | *2.7700* | *93.90%* | நடுகைப் பொருட்களின் சேகரிப்பு மற்றும் இனபெருக்கல் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. ஆய்வக உயிர்விசை சோதனைகள் (இரண்டாம் கட்டம்) சிறந்த ஆரம்பகட்ட முடிவுகளுடன் முன்னேறி |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| | *(NARP/2024/UWU/ASEA/02)* | | | | வருகின்றன; மூன்றாம் கட்டத்திற்கான தயாரிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| 6 | *Characterization of encapsulated rice brain peptide and development of rice bran peptide incorporated new food product using traditional and improved rice varieties in Sri Lanka (NARP/2024/USJ/FOT/01)* | 1.9294 | 1.7394 | 90.15% | முதற்கட்ட மூடுதொழில்நுட்ப *(encapsulation)* சோதனைகள் நிறைவடைந்து, உறுதிப்படுத்தப்பட்ட நிலைத்தன்மை முடிவுகள் கிடைத்துள்ளன. மாற்று ஊடகங்களைப் பயன்படுத்தி மூடுதிறன் மேம்படுத்தல் முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. |
| 7 | *Effect of plant essential oils on pathogens and odor reductions in swine farm effluents in Sri Lanka (NARP/2024/UWU/ASEA/01)* | 0.4707 | 0.4707 | 100.00% | முக்கிய உயிர் செயற்பாட்டு கூறுகள் *(bioactive constituents)* வரிசைபடுத்தல் நுட்பங்களின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளன. அளவியல் உயிர்விவரப் பரிமாணம் *(quantitative metabolite profiling)* குறிப்பிடத்தகுந்த முறையில் முன்னேற்றமடைந்துள்ளது, மற்றும் மீளக்கூடியதன்மையை உறுதிப்படுத்த மீள்தொடர் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| 8 | *Development of an efficient semi-artificial vertical farming system supplemented with sunlight and bio fertilizer for selected Solanaceae crops (NARP/2024/USJ/UAB/01)* | 1.7700 | 1.5900 | 89.83% | இரண்டாவது பயிர்ச் சுழற்சி சிறந்த முறையில் முன்னேறி வருகிறது, வளர்ச்சி, மலர்ச்சி மற்றும் விளைச்சல் குறித்த விரிவான தரவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டு சுழற்சிகளுக்கிடையிலான ஒப்பீட்டுப் பகுப்பாய்வு விளைச்சல் அளவுகளில் சிறந்த நிலைத்தன்மையைக் காட்டுகிறது. |
| 9 | *Investigation of the effect of fodder maize - legume intercropping on the forage yield and nutritive value of green chop and silage* | 3.1640 | 2.9840 | 94.31% | இரண்டாவது களச் சோதனை சிறப்பாக நிறுவப்பட்டுள்ளது; தீவன மாதிரிகள் ஊட்டச்சத்து அளவுகள் தொடர்பாக மேலதிகமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| | *(NARP/2024/UP/AG/01)* | | | | பாவனைப் பொருட்கள் மற்றும் கள ஒருங்கிணைப்புகள் இடையறாத முன்னேற்றத்தைக் கடைப்பிடிக்கும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. |
| *10* | *Study the production potential of non-traditional export ornamental species in Southern Dry Zone of Sri Lanka: to evaluate the export potential and initiate export-oriented entrepreneurship/export villages (NARP/2024/UR/AG/01)* | *1.1900* | *1.0100* | *84.87%* | மண் இல்லாத நாற்றுச் சாடிக் கலவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சோதனைகள் சிறந்த தாவர நிறுவலைக் காட்டுகின்றன. உரக் கலவையின் உகப்பாக்க சோதனைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.; பூத்தல் மற்றும் கனி உருவாக்கம் மேம்பட்டதாகக் காணப்பட்டது. |
| *11* | *Selection of promissing cinnamon accessions for high yield and quality from two established germplasm collections (NARP/2024/UR/AG/03)* | *2.6460* | *2.2110* | *83.56%* | களப் பராமரிப்பு மற்றும் விரிவான தரவு சேகரிப்பு தடையின்றி முன்னேறி வருகிறது. இலையில் இருந்து எண்ணெய் பிரித்தெடுக்கும் செயற்பாடு மேலதிக மாதிரிகளுக்குத் தொடரப்பட்டுள்ளது. ஒப்பீட்டுப் பகுப்பாய்வில் சிகிச்சைகளுக்கிடையே குறிப்பிடத்தகுந்த வேறுபாடுகள் பதிவாகியுள்ளன. |
| *12* | *Comparative study of smart greenhouse climate and control system with available system in order to improve yield and post harvest quality of vegetable crops grown under protected cover (NARP/2021/UC/FOT/01)* | *0.3322* | *0.3322* | *100.00%* | சேமிப்புக் காலம் மற்றும் எடையிழப்பு தொடர்பான ஆய்வுகள் இரண்டாவது மாதிரி தொகுப்புடன் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. ஆரம்பகட்டப் போக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இது பற்றிய விரிவான அறிக்கை பின்னர் சமர்ப்பிக்கப்படும். |
| *13* | *Investigation of the causes of the forest die back at Horton Plains (NARP/2024/UP/AG/02)* | *0.0200* | *0.0200* | *100.00%* | - |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| *14* | *Investigation on the role of water stress and climate change on forest dieback at Horton Plains (NARP/2021/UP/AG/02)* | *0.76405* | *0.7641* | *100.00%* | - |
| *15* | *Revitalizing Sri Lanka's Coastal Resources: A Multi-disciplinary exploration to harness the potential of Seaweeds (NARP/2025/UP/AG/01)* | *2.7057* | *2.4657* | *91.13%* | ஆய்வுக் கட்டுரைகள் மதிப்பாய்வு நிறைவடைந்துள்ளன. விரிவடைந்த குழுக் கலந்துரையாடல்கள் மேம்படுத்தப்பட்ட பரிந்துரைகளை தந்துள்ளன. கடற்பாசி சேகரிப்பு மேலதிக தளங்களுக்கு விரிவடைந்துள்ளது; உயிர்விசைச் சோதனைகள் தொடக்க நேர்மறை செயல்பாடுகளுடன் முன்னேறுகின்றன. |
| *16* | *Development of biochar-based ethylene scavenger/s for maintaining freshness and extending the post-harvest life of fresh produce (NARP/2025/UM/ENG/01)* | *1.4700* | *0.8950* | *60.88%* | ஆய்வுக்கட்டுரைகளின் மதிப்பாய்வு நிறைவடைந்துள்ளது. ஆரம்ப பரிசோதனை அமைப்பு மேம்படுத்தப்பட்டு, முதல் கட்ட பரிசோதனைகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்ப தரவுப் பகுப்பாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| *17* | *Integrating genomic and field approaches for resistance analysis of Attakkari rice cultivars against major pest and diseases in Northern Sri Lanka (NARP/2025/UJ/AG/01)* | *1.8280* | *1.5730* | *86.05%* | அடிப்படைத் தரவு நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆட்டகரி இனங்களின் சேகரிப்பு மற்றும் பண்புருவாக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது. களங்களில் பீடை கண்காணிப்பு நடவடிக்கை வலுப்படுத்தப்பட்டு, போக்கு பகுப்பாய்வு நடைமுறையில் உள்ளது. டி.என்.ஏ பெருக்கலின் மூலம் நோய்க்கிருமி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. வரிசைப்படுத்தல் *(sequencing)* தயாரிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| *18* | *Harnessing Azolla and Seaweed extract for sustainable foliar fertilizer production to address soil salinity associated problems in Sri Lanka (NARP/2025/UR/AG/01)* | *1.5104* | *1.3204* | *87.42%* | பல்வேறு அடித்தளங்களில் பயிரிடுதல் நிலைபேறான முறையில் முன்னேறி வருகிறது. உவர் நிலை சகிப்புத் திறன் குறித்த இரண்டாம் தரவுத்தொகுப்பு தொகுக்கப்பட்டு, வளர்ச்சியில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. |
| *19* | *Field experiment on introducing an intra-uterine device (IUD) to trouble making female monkeys, castrating sub adult males & examining the presence of arbo Virus, bunya Virus and malaria in monkeys (NARP/2025/UP/VS/01)* | *4.3282* | *3.7087* | *85.69%* | வலைகள்/ கூண்டுகள் தயாரித்தல் நிறைவடைந்துள்ளதுடன் அவற்றைப் பயன்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. IUD கொள்முதல் நிறைவு பெற்றுள்ளது. உறை குறியீட்டுப் பணிமுறை மேம்படுத்தப்பட்டு, மீண்டும் மீண்டும் ஒரே மாதிரியான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. |
| *20* | *Re-tuning the flavor notes of Ceylon Black Tea: Investigating the impact of sun light intensity & spectral composition on the flavor profile (NARP/2025/USJ/SC/01* | *2.4010* | *2.0433* | *85.10%* | முறையான மதிப்பாய்வு அறிக்கை நிறைவடைந்துள்ளது. சோதனை நடைமுறைகள் உறுதிசெய்யப்பட்டு, தொடக்க சோதனைகள் பல முறை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. |
| *21* | *Microalgae-based liquid organic fertilizer for sustainable agriculture in Sri Lanka (NARP/2025/UM/ENG/02)* | *2.7847* | *2.5297* | *90.84%* | தேர்வு செயல்முறையின் மூலம் மேம்பட்ட செயல்திறன் கொண்ட பல நம்பிக்கையளிக்கும் இனங்கள் அடையாளம் காணப்பட்டன. முன்னோடி அளவிலான பரிசோதனைக் குளத்தை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது; திட்டமிடப்பட்ட சோதனைச் செயல்பாடுகளுடன் நிறுவல் நடைபெற்று வருவதுடன். |
| *22* | *Diversifying commercial Dendrobium gremplasm towards new cultivars through induced mutagenesis in In-Vitro* | *3.8964* | *3.7164* | *95.38%* | நெறிமுறை உகந்தப்படுத்தல் தொடர்ந்து நடைபெற்று, மேம்பட்ட மீளுருவாக்கத் திறன் அவதானிக்கப்பட்டுள்ளது. |

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| | *(NARP/2025/RUSL/AG/01)* | | | | வளர்ப்பு ஊடக மேம்பாடு முடிவுகளின் நிலைத்தன்மையை உயர்த்தியுள்ளது. |
| *23* | *Survey of pest species of armored scales (Hemiptera diaspididae) of Sri Lanka (NARP/2025/RUSL/AG/02)* | *1.9900* | *1.3800* | *69.35%* | ஆதார ஆவண ஆய்வு மற்றும் ஆரம்பக் கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படுள்ளன. மேலதிக விவசாய - சூழலியல் வலயங்களை உள்ளடக்குவதற்காகக் கள ஆய்வு மேலும் விரிவுபடுத்தப்பட்டது; மாதிரிச் சேகரிப்பு தொடர்கின்றது. |
| *24* | *Crops for the future: Investigating the effects of applying silicon on enhancing drought tolerance and water use efficiency of selected widely grown field crops of Sri Lanka (NARP/2025/UR/AG/02)* | *3.1750* | *2.9900* | *94.17%* | அனைத்து பாவனைப் பொருட்களும் முழுமையாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. சிலிகான் உறிஞ்சல் குறித்த தொடக்க சோதனைகள் நிறைவடைந்துள்ளன; இரண்டாவது சுற்று நடைபெற்று வருகிறது. ஒப்பீட்டுப் பகுப்பாய்வு தொடர்ந்து நடைபெறுகிறது. |
| *25* | *Effect of climate change on export oriented mango (Magifera indica L.) diversity, production, value addition and marketing in the dry zone of Sri Lanka with spatiotemporal mapping of existing climate resilient mango varieties (NARP/2025/UK/SC/01)* | *2.4240* | *1.7360* | *71.62%* | ஆய்வுக் கண்ணோட்டம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. வானிலை பாதிப்புக்கு உட்படக்கூடிய மாம்பழ வலயங்களின் புவியியல் தகவல் வரைபடம் *(GIS mapping)* ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப வளைய வகைப்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| *26* | *Comparative analysis of the prevalence of campylobacter and Salmonella in poultry, cattle. Pig and human fecal samples in Gampaha district, Sri Lanka (NARP/2025/UK/MED/* | *0.7145* | *0.7145* | *100.00%* | நெறிமுறை அனுமதி பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள பாவனைப் பொருட்களின் பெறுகை நிறைவடைந்துள்ளது; பரிசோதனை கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| | 01) | | | | |
| 27 | Development of *in-vitro* protocols for the rapid production and estimation of secondary metabolizes of *Salacia reticulata* - A highly valuable endangered medical plant (NARP/2025/UR/AG/03) | 1.8750 | 1.6950 | 90.40% | தாய்த் தாவரங்கள் பேராதனை RGB இனால் உறுதிசெய்யப்பட்டுள்ளன. ஆய்வக வளர்ப்பு கலப்படமில்லாத நிலையில் சிறப்பாக முன்னேறி வருகிறது; இனப்பெருக்கல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

குறிப்பு: மேலே உள்ள தேசிய விவசாய ஆராய்ச்சிக் கட்டமைப்பு, பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025.09.30 வரை செலவிடப்பட்டதாகக் குறிப்பிடப்படும் தொகை, அந்த நிறுவனத்தால் பல்கலைக்கழகங்களுக்காக அதுவரை வழங்கப்பட்ட முற்பணத் தொகையின் அளவாகும்.

புகைப்பட இலக்கம் 49

## 09. விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (FTF)

### 9.1. அறிமுகம்

1994 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட நம்பிக்கை உறுதியில் குறிப்பிட்டுள்ள விதத்திலும் 2002 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் மூலம் குறிக்கோள்களை விரிவுபடுத்தியன் மூலம் விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் பின்வரும் குறிக்கோள்களுடன் இயங்கி வருகின்றது.

- இலங்கையில் விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் நலனோம்பலை அபிவிருத்தி செய்தல்.
- சிறு விவசாயிகளுக்கு குறுகிய கால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல்.
- சிறு விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்குதல்.
- சிறு விவசாயிகளின் நிதிக் கஷ்டங்களைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு சிறு விவசாயிகளுக்கு சந்தைக் கடன் வசதிகளை வழங்குதல்.
- சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலனோம்பலுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- பயிர் மற்றும் விலங்கு உற்பத்தி செயற்பாடுகள் மற்றும் உற்பத்தித் தயாரிப்பு என்பவற்றுக்கு சிறு விவசாயிகளுக்குத் தேவையான ஏனைய உதவிகளை வழங்குதல்.
- விவசாய அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நோக்கில் விசேட விவசாய நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்.

*9.2. விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முக்கிய பணிகள்*

*மானியம்*

*விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒதுக்கீட்டின் கீழ் கமநல அபிவிருத்தித் திணைக்களம் விவசாயத் திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலகங்கள் மூலம் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.*

*கடன்கள்*

- *பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து செயல்படுத்தப்படும் 'க்ருஷி சக்தி' கடன் திட்டத்தின் கீழ் செயற்திட்டக் கடன்களை வழங்குதல்.*
- *விவசாய வங்கிகளுக்கு மேலதிக மூலதனத்தை வழங்குதல்.*

  *சிறு விவசாயிகளுக்குக் குறுகிய கால கடன் வசதிகளை வழங்கும் நோக்குடன், விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒதுக்கீட்டின் கீழ் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய வங்கிகள் முன்னோடிச் செயற்திட்டம் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது.*
- *ஏனைய கடன்கள்*

  *விவசாய அவசரத் தேவைகளுக்காக விவசாய அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்குக் கடன் தொகையை வழங்குதல். (உதாரணமாக, நெல் கொள்வனவுக்காக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு)*

*முற்பணம்*

*விவசாய அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களால் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக, ஒரு வருட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் வட்டி இல்லாத கடன் முற்பணங்களை வழங்குதல்.*

*9.3. செயல்படுத்தும் முறை*

*ஒவ்வொரு வருடத்திற்கும் அனைத்து மாகாண சபைகள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், விவசாய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் முன்வைக்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகள் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் அதற்கான பணிப்பாளர் சபை தொடர்புடைய செயற்திட்டங்களைக் கவனத்தில் கொண்டு உரிய அங்கீகாரத்தை வழங்கும். அவ்வாறு அனுமதி வழங்கப்படும் செயற்திட்டங்கள் விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படும்.*

*9.4. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்*

*விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வரவுசெலவு மதிப்பீடு -2026*

| தொடர்/ இல | விபரம் | அடிப்படை மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|---|
| 01 | மானியம் | 31.92 |
| 02 | கடன்கள் | 111.74 |
| 03 | முற்பணம் | 15.96 |
| மொத்தம் | | 159.62 |

*9.5. 2025 ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியளவில் நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம், (2025.09.30 வரை)*

*9.5.1. மானியங்களின் கீழ் செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள்*

| தொ / இல | செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | உண்மையான தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| i.) | திடீர் வெள்ள நிலைமை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களுக்கான நிவாரணங்கள் வழங்கல் - 2023 முன்கொண்டு செல்லல் (க.அ.தி - கமநல அபிவிருத்தித் திணைக்களம்) | 20.00 | 3.62 | 18 |
| ii.) | பெண் விவசாயிகள் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் பெண் விவசாயிகள் அமைப்புகளின் தலைவிகளுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான பாடநெறிக் கட்டணம் செலுத்துதல். | 10.00 | 7.04 | 70 |
| iii.) | இடைக்கால போகத்தில் பாசிப்பயறு பயிரிடும் செயற்திட்டம் - 2024 | 100.00 | 50.00 | 50 |

*i.) திடீர் வெள்ள நிலைமை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களுக்கான நிவாரணங்கள் வழங்கல்.*

*2023 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட திடீர் வெள்ள நிலைமையின் போது பதுளை, மாத்தறை, காலி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் விவசாயக் கால்வாய்கள், தடுப்பணைகள் மற்றும் சிறிய நீர்ப்பாசன அமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களைப் புனரமைப்பதற்காக, கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 20.00 மில்லியன் ரூபாய் தொகையை விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இருந்து ஒதுக்கப்பட்டது.*

*ii.) பெண் விவசாயிகள் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் பெண் விவசாயிகள் அமைப்புகளின் தலைவிகளுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான பாடநெறிக் கட்டணம் செலுத்துதல்.*

*தற்போது நாடு முழுவதும் பரவி வரும் நுண்நிதிய அமைப்புகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றின் கொள்கைகள், சேவைகள், திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி, கணக்குப்பதிவியல், செயற்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் மதிப்பீடு, கடன் மதிப்பீடு மற்றும் அறவிடல்கள், செயற்படும் முறை, பின்தொடர் நடவடிக்கைகள், சந்தைப்படுத்தல் மற்றும் நிதி அல்லாத சேவைகள், சிறிய குழு செயல்முறைகளை மேற்கொள்வதற்காக, சம்பந்தப்பட்ட துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒரு வளக் குழுவை நாடு முழுவதும் செயற்படுத்துவதற்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய வங்கி மூலம் திட்டமிடப்பட்டுள்ள பாடநெறிக்கான நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.*

*iii.) இடைக்கால போகத்தில் பாசிப்பயறு பயிரிடும் செயற்திட்டம் - 2024*

*பாசிப்பயறின் விளைச்சல் பயனுறுதித் தன்மையை அதிகரிக்கும் நோக்குடன், பாசிப்பயறு பயிரிடும் செயல் விளக்கம் மற்றும் விதை பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமாக விவசாயத் திணைக்களம் மூலம் ஹம்பாந்தோட்டை, அம்பாறை, அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாகாண இடை வலயங்களிலும் ஹம்பாந்தோட்டை மாகாணத்திலும்*

*செயல்படுத்தப்பட்ட இந்தச் செயற்திட்டம் மூலம் 10,903 விவசாயிகள் 18,063 ஏக்கர் நிலப் பரப்பில் பாசிப்பயறு பயிரிடப்பட்டுள்ளது.*

*2. 2. விவசாயக் கடன் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல்*

| *தொ / இல* | *செயற்திட்டம்* | *மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்)* | *உண்மையான செலவு (மில். ரூபாய்)* | *நிதி முன்னேற்றம் (%)* |
|---|---|---|---|---|
| *i.)* | *க்ருஷி சக்தி கடன் திட்டம்*<br>*(பிரதேச அபிவிருத்தி வங்கி)* | *300.00* | *11.85* | *04* |

*i.) க்ருஷி சக்தி கடன் திட்டம் (பிரதேச அபிவிருத்தி வங்கி)*

*2025 ஆம் ஆண்டில் சிறு விவசாயிகளுக்குப் பயிர்ச் செய்கைக் கடன் வசதிகளை வழங்கும் நோக்குடன், பிரதேச அபிவிருத்தி வங்கி மூலம் செயல்படுத்தப்படும் க்ருஷி சக்தி கடன் திட்டம் மூலம் 24 விவசாயிகளுக்கு 11.85 மில்லியன் ரூபாய் தொகையை விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் வழங்கியுள்ளது.*

*தற்போதைய நிலைமை*

*அரச நிதித் திணைக்களத்தின் 2024 ஆம் இலக்க 44 ஆம் இலக்க அரச நிதியியல் முகாமைத்துவச் சட்டத்தின் VIII ஆம் பிரிவின் 39 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட சட்டரீதியான நிதிகள் தொடர்பான ஏற்பாடுகளை அமுல்படுத்துவதன் கீழ், சட்டரீதியல்லாத நிதிகள் தொடர்பில் செயற்பட வேண்டிய விதம் குறித்து 2024.11.06 ஆம் திகதிய மற்றும் 4/2024 ஆம் இலக்க அரச நிதியியல் சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*இது தொடர்பாக அரச நிதித் திணைக்களத்தால் சட்டரீதியல்லாத நிதிகள் தொடர்பான ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகள் கிடைக்கும் வரை விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் ஒரு நிச்சயமற்ற தன்மை நிலவியதால், 2025 ஆம் ஆண்டிற்காக விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மூலம் செயற்திட்டங்களுக்கான நிதி வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால், அனைத்து செயற்திட்டங்களின் நிதி முன்னேற்றத்தின் சதவீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது.*

*2025.08.15 ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அமைச்சர் கௌரவ அநுர குமார திசாநாயக்க அவர்களால் சட்டரீதியல்லாத நிதிகள் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2025.08.25 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை ஒரு சட்டரீதியான நிதியமாக மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மேற்கொண்டு வருகிறது.*

## 10. தேசிய உரச் செயலகம்

10.1. அறிமுகம்

1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரங்களை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மற்றும் தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்ளல்.

10.2. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

இலங்கையில் பயிர் செய்யப்படும் அனைத்து பயிர் வகைகளினதும் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கு உரிய தர நிர்ணயத்துடன் கூடிய அசேதன மற்றும் சேதன உரங்களை வழங்குதல் மற்றும் அவற்றின் முறையான பாவனையை உறுதிப்படுத்தல் நிறுவனத்தின் தொலைநோக்காகும். மேலும் உரத்தை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் வழிமுறைகளுக்கு அமைவாக உரிய அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து விஞ்ஞான ரீதியான சிபாரிசுகளின் அடிப்படையில் உரத் தேவையை மதிப்பீடு செய்தல், உர இறக்குமதி மற்றும் இருப்புகளை நிர்வகித்தல், உரிய தரத்தைக் கொண்ட உரத்தை விநியோகம் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றை உறுதி செய்தல், சேதன மற்றும் அசேதன உரப் பாவனையின் போது சூழல் நட்புடன் கூடிய முறையிலான உரப் பாவனையை ஊக்குவித்தல், விவசாய சமூகத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கைக் கொண்ட உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் உரப் பாவனைத் துறையில் காணப்படும் முறைகேடுகளை தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல் என்பது இதன் செயற்பணியாகும். 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரச் சட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதே நிறுவனத்தின் பிரதான பணியாகும்.

10.3. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| 1 | மீண்டுவரும் செலவுகள் | 108.91 |
| 2 | மூலதன செலவுகள் | 24.83 |
| | மொத்தம் | 133.74 |

** இந்த மதிப்பிடப்பட்ட செலவு கீழே உள்ள அட்டவணையில் தொடர் இலக்கம் 01, தொடர் இலக்கம் 02 மற்றும் தொடர் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

10.4. 2026 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | உரிமம் ஒன்றிற்கான கட்டணம் (மில். ரூபாய்) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | (i) சேதன உர புதிய உற்பத்தியாளர்களுக்கு உரிமம் வழங்குதல். (New) | | 03 | 0.02 | 0.06 |
| | (ii) சேதன உர பழைய உற்பத்தியாளர்களின் உரிமங்களை புதுப்பித்தல். (Renewal) | | 56 | 0.02 | 0.84 |
| | (iii) உர இறக்குமதிக்கு உரிமம் வழங்குதல். (New) | | 04 | 0.15 | 0.6 |
| | (iv) உர இறக்குமதி உரிமத்தை | | 178 | 0.10 | 17.8 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | உரிமம் ஒன்றிற்கான கட்டணம் (மில். ரூபாய்) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | புதுப்பித்தல் . *(Renewal)* | | | | |
| | *(v)* சேதனமல்லாத உர வகைகளை உற்பத்தி செய்வதற்கான உரிமம் வழங்குதல். *(Inorganic New)* | | *01* | *0.15* | *0.15* |
| | *(vi) )* சேதனமல்லாத உர வகைகளை உற்பத்தி செய்வதற்கான உரிமத்தைப் புதுப்பித்தல் *(Inorganic Renewal)* | | *08* | *0.10* | *0.80* |
| | *(vii)* உரக் கலவைக்கான உரிமம் வழங்குதல். *(New)* | | *02* | *0.15* | *0.3* |
| | *(viii)* உரக் கலவைக்கான உரிமத்தைப் புதுப்பித்தல். *(Renewal)* | | *58* | *0.10* | *5.8* |
| | | | *310* | | *26.35* |
| | *(ix)* இருப்பை சரிபார்த்தல் மற்றும் களஞ்சியப் பரிசோதனைகள் | | | | |
| | *a.* கமநல அபிவிருத்தி நிலையங்கள் | | *935* | | |
| | *b.* பிராந்திய களஞ்சியங்கள் | | *42* | | |
| | *c.* தனியார் விற்பனை நிலையங்கள் மற்றும் சேதன உர உற்பத்தித் தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல் | | *2922* | | |
| *02* | பயிற்சி நிகழ்ச்சிகள் | | *40* | | மொத்த செலவு 2026 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்குகளில் உள்ளடக்கப்படுள்ளது. |
| *03* | உரங்களின் தரத்தை உறுதி செய்வதற்காக உர மாதிரிகளைப் பெறல் | | | | |
| | *3.1* கமநல அபிவிருத்தி நிலையங்கள் | | | | |
| | *3.2* பிராந்திய களஞ்சியங்கள் | | | | |
| | *3.3* தனியார் விற்பனை நிலையங்கள் மற்றும் சேதன உர உற்பத்தி நிலையங்களை பரிசோதித்தல் | | | | |
| | *3.4* களத்திலிருந்து உர மாதிரிகளைப் பெறல் | | *(6.1)* இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | | |
| *04* | முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள், உரக் குழுக் கூட்டங்கள் மற்றும் உபசரிப்பு செலவுகள் | | *50* | | மொத்த செலவு 2026 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்குகளில் உள்ளடக்கப்படுள்ளது. |
| *5.0* | தயாரிப்பு ஊக்குவிப்பு பிரிவு – *2026* ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | |
| *5.1* | பயிற்சி நிகழ்ச்சி (உயர்தர *Single Super Phosphate* உர உற்பத்தியாளர்கள் தொடர்பானது) | | *03* | | நிதிச் செலவு உரிய நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. |
| *6.0* | தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு - *2026* ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | உரிமம் ஒன்றிற்கான கட்டணம் (மில். ரூபாய்) | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 6.1 | உரங்களின் தரத்தை உறுதி செய்வதற்காக உர மாதிரிகளைப் பெறல் | | 2400 | | |
| 7.0 | இறக்குமதிப் பிரிவு - 2026 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | |
| 7.1 | இரசாயன உரங்கள் இறக்குமதி தொடர்பான ஆவணங்கள் மற்றும் பதிவுகளை ஆய்வு செய்வதற்கான கோப்புகளைத் தயாரித்தல். (Oder Approval) | | 1200 | | நிதிச் செலவுகள் எதுவும் இல்லை |
| 7.2 | இறக்குமதிக்குப் பின் சுங்க அனுமதிக்கான பரிந்துரைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் – (Clearance) | | 1400 | | நிதிச் செலவுகள் எதுவும் இல்லை |
| 7.3 | சந்தைப்படுத்தல் அங்கீகாரம் (Marketing Approval) | | 1400 | | |
| 8.0 தகவல் மற்றும் முகாமைத்துவப் பிரிவு - 2026 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | | |
| உர விநியோக திட்டத்தை செயல்படுத்துதல். | | | | | |
| 8.1 | நெல் மற்றும் தானியங்களுக்கான – சிறு போகம் | | மார்ச் - ஆகஸ்ட் 2026 | | |
| 8.2 | நெல் மற்றும் தானியங்களுக்கான – பெரும் போகம் | | செப்டம்பர் 2026 - பிப்ரவரி 2027 | | |
| 8.3 | ஏனைய பயிர்களுக்கானது | | ஜனவரி - டிசம்பர் 2026 | | |
| 9.0 | நிறுவனப் பிரிவு - 2026 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | |
| 9.1 | அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் (உள்நாட்டு) | | 02 | | |
| 10.0 | திட்டமிடல் பிரிவு - 2026 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | | | | |
| 10.1 | நிகழ்ச்சித் திட்டமிடல் | | 03 | | |
| 10.2 | முன்னேற்ற ஆய்வு | | 10 | | |

*10.5. 2025.09.30 ஆம் திகதிக்கான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 2. | மீண்டுவரும் செலவுகள் | | | |
| 2.1 | (i) சேதன உரங்களை உற்பத்தி செய்யும் புதிய உற்பத்தியாளர்களுக்கு உரிமம் வழங்குதல் | இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஒதுக்கீடு மற்றும் செலவினம் மொத்த எரிபொருள் செலவினம் (2.8) இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. | | |
| | (ii) சேதன உர பழைய உற்பத்தியாளர்களின் உரிமங்களைப் புதுப்பித்தல் | | | |
| | (iii) இருப்பு சரிபார்ப்பு மற்றும் களஞ்சியப் பரிசோதனை | | | |
| | a. கமநல அபிவிருத்தி நிலையங்கள் | | | |
| | b. பிராந்திய களஞ்சியங்கள் | | | |
| | c. தனியார் விற்பனை நிலையங்கள் மற்றும் சேதன உர உற்பத்தி நிலையங்களை பரிசோதித்தல் | | | |
| 2.2 | பயிற்சி நிகழ்ச்சிகள் | | | |
| 2.3 | உரங்களின் தரத்தை உறுதி செய்வதற்காக உர மாதிரிகளைப் பெறல் | | | |
| | 2.3.1 கமநல அபிவிருத்தி நிலையங்கள் | | | |
| | 2.3.2 பிராந்திய களஞ்சியங்கள் | | | |
| | 2.3.3 தனியார் விற்பனை நிலையங்கள் மற்றும் சேதன உர உற்பத்தி நிலையங்களை பரிசோதித்தல் | | | |
| 2.4 | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் உரக் குழுக் கூட்டங்கள் மற்றும் உபசார செலவுகள் | 0.55 | 0.12 | 21% |
| 2.5 | தினசரி ஊதியம் | - | - | - |
| 2.6 | பயண செலவுகள் | 0.01 | - | - |
| 2.7 | காகிதாதிகள் | 0.68 | 0.41 | 60% |
| 2.8 | மொத்த எரிபொருள் செலவுகள் | 1.62 | 1.10 | 68% |
| மொத்தம் | | 2.85 | 1.63 | 57% |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 2. | மீண்டுவரும் செலவுகள் | | | |
| 2.1 | (i) சேதன உரங்களை உற்பத்தி செய்யும் புதிய உற்பத்தியாளர்களுக்கு உரிமம் வழங்குதல் | இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஒதுக்கீடு மற்றும் செலவினம் மொத்த எரிபொருள் செலவினம் (2.8) இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. | | |
| | (ii) சேதன உர பழைய உற்பத்தியாளர்களின் உரிமங்களைப் புதுப்பித்தல் | | | |
| | (iii) இருப்பு சரிபார்ப்பு மற்றும் களஞ்சியப் பரிசோதனை | | | |
| | a. கமநல அபிவிருத்தி நிலையங்கள் | | | |
| | b. பிராந்திய களஞ்சியங்கள் | | | |
| | c. தனியார் விற்பனை நிலையங்கள் மற்றும் சேதன உர உற்பத்தி நிலையங்களை பரிசோதித்தல் | | | |
| 2.2 | பயிற்சி நிகழ்ச்சிகள் | | | |
| 2.3 | உரங்களின் தரத்தை உறுதி செய்வதற்காக உர மாதிரிகளைப் பெறல் | | | |
| | 2.3.1 கமநல அபிவிருத்தி நிலையங்கள் | | | |
| | 2.3.2 பிராந்திய களஞ்சியங்கள் | | | |
| | 2.3.3 தனியார் விற்பனை நிலையங்கள் மற்றும் சேதன உர உற்பத்தி நிலையங்களை பரிசோதித்தல் | | | |
| 2.4 | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் உரக் குழுக் கூட்டங்கள் மற்றும் உபசார செலவுகள் | 0.55 | 0.12 | 21 |
| 2.5 | தினசரி ஊதியம் | - | - | - |
| 2.6 | பயண செலவுகள் | 0.01 | - | - |
| 2.7 | காகிதாதிகள் | 0.68 | 0.41 | 60 |
| 2.8 | மொத்த எரிபொருள் செலவுகள் | 1.62 | 1.10 | 68 |
| மொத்தம் | | 2.85 | 1.63 | 57 |

| தொ/ இல | மீண்டுவரும் செலவுகள் | 2025.09.30 வரை | |
|---|---|---|---|
| | | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்கள் (மில். ரூபாய்) |
| பிரதான காரியாலயம் | | 14.25 | 1.93 |

*10.6. 2025 ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியளவில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

தேசிய உரச் செயலகத்தின் 2025.09.30 ஆம் திகதி வரையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 2.85 மில்லியன் ரூபாய் ஆகும். செலவிடப்பட்ட தொகை 1.63 மில்லியன் ரூபாய் ஆகும். அதன்படி, இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும்

உள்ளடக்கும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் 1,200,000 நெல் விவசாயிகள் நன்மை பெற்றுள்ளனர்.

மேலும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் 545,000 ஹெக்டேயர் நெற் பயிர்செய்கைக்காக, தரமான இரசாயன/ சூழல் நட்பு உரங்கள் உரிய தரத்துடன் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

மேலும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2,000,000 மெட்ரிக் தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்படுகிறது.

## 11. ஸ்டேட் பேர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டட்

*11.1. அறிமுகம்*

"லக் பொஹொர" மற்றும் "கொமர்ஷல் பொஹொர" ஆகிய வர்த்தக நாமங்கள் இலங்கை விவசாய மக்களிடையே நற்பெயர் பெற்றிருப்பதால், சேதன மற்றும் இரசாயன உரங்கள் உட்பட ஏனைய விவசாய உள்ளீடுகள் மற்றும் சேவைகளை வழங்கும் இலாபகரமான வர்த்தக அலகுகளாக அவற்றைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டு, 21/0118/323/005 ஆம் இலக்க மற்றும் 2021.02.01 ஆம் திகதிய, CP/22/0706/514/001 ஆம் இலக்க மற்றும் 2022.05.30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானங்களின் படி, வரையறுக்கப்பட்ட லங்கா உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் ஆகியவற்றை இணைத்து, 2024.07.11 ஆம் திகதி "ஸ்டேட் பெர்ட்டிலைசர் கம்பனி லிமிடெட்" நிறுவனம் நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் விவசாயிகளுக்குத் தேவையான நேரடி மற்றும் கலப்பு உரங்களை போட்டிமிக்க உரச் சந்தையில் விற்பனை செய்யும் ஒரே அரச நிறுவனம் ஆகும்.

*11.2. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்*

- 2025 ஆம் ஆண்டுக்கான நிதியுதவிக்காக நாங்கள் விண்ணப்பித்திருந்தாலும், எமது நிறுவனம் சுய நிதி நிறுவனம் எனக் கருதி நிதி வழங்குவது நிராகரிக்கப்பட்டதால், 2026 ஆம் ஆண்டுக்கான அரசாங்க நிதியை நாங்கள் கோர எதிர்பார்க்கவில்லை.

*11.3. 2026 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (செயல்படுத்த எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | 2026 ஆம் ஆண்டு: 45,000 மெட்ரிக் தொன் கலப்பு உரங்களையும், 30,000 மெட்ரிக் தொன் நேரடி உரங்களையும் விற்பனை செய்தல். | மெட்ரிக் தொன் | 75,000 | 103.57 | ***7,768 |

*** 2026.04.01 ஆம் திகதி முதல் 2027.03.31 ஆம் திகதி வரை மதிப்பிடப்பட்ட வருமானம்

* எமது நிறுவனத்தின் 2026 நிதியாண்டு 2026.04.01 முதல் 2027.03.31 வரை உள்ளதால், இதன் விநியோகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது மேலே உள்ள அளவு மதிப்பிடப்பட்டுள்ளது.

*11.4. 2025.09.30 ஆம் திகதி வரையான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் நிகழ்ச்சித் திட்டம் | (A) 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | (B) 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | (C) நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| ** | நேரடி மற்றும் கலப்பு உரங்களை விற்பனை செய்தல். | 7,516 | 3,077 ** | 41 ** |

*** எமது நிறுவனம் ஒரு சுய நிதி நிறுவனம் என்பதால், எங்களால் 2025 நிதியாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (A) மூலமாகவும், 2025.09.30 ஆம் திகதிக்கான உண்மை விற்பனை நிதி மதிப்பு (B) மூலமாகவும், உண்மை விற்பனைகளின் சதவீதம் (C) மூலமாகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

*11.5. 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு இறுதி வரையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

- *2025 ஆம் ஆண்டிற்காக 64,700 மெற்றிக் தொன் விற்பனை செய்ய மதிப்பிடப்பட்டுள்ளது. 2025.09.30 ஆம் திகதி வரை 26,846 மெற்றிக் தொன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.*
- *நாடு முழுவதும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் பதுளை, மொனராகலை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு தற்போது அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.*

## *12. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை (தேசிய உணவு ஊக்குவிப்பு சபை)*

*12.1. அறிமுகம்*

*இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை எனும் தேசிய உணவு ஊக்குவிப்பு சபை 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ளது.*

*16.2 தொலைநோக்கு மற்றும் செயற்பணி*

*விவசாயிகள் மற்றும் வசதி குறைந்த மக்கள் ஆகியோரின் கௌரவத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பொருளாதார சுதந்திரத்தையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தல் இதன் தொலைநோக்கு ஆகும். பயனாளிகளின் பொருளாதார சுயாதீனத்தை ஏற்படுத்தும் பொருட்டும், பிறரில் தங்கி வாழும் கலாசாரத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டும் விவசாய, கால்நடை மற்றும் ஏனைய துறைகளின் திறன் விருத்திக்கான ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் இதன் செயற்பணி ஆகும்.*

12.3. நோக்கங்கள்

i.) அரசாங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கிணங்க சமூக, பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்தும் பொருட்டு உள்நாட்டு, வெளிநாட்டு, அரச சார்பற்ற முகவராண்மைகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்

ii.) பொது வசதிகள், சமூக நலனோம்பல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துகையில் நிறுவனங்களுக்கும் பிற சபைகளுக்கும் உதவுதல்

iii.) விவசாய, கைத்தொழில் அபிவிருத்தியின்பால் ஈடுபடுத்தப்பட்ட குறித்துரைத்த செயற்றிட்டங்களுக்கு நன்கொடை வழங்குதலும் அச்செயற்திட்டங்களை மேம்படுத்தலும், ஒருங்கிணைப்பு செய்தலும்.

iv.) விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச சார்பற்ற முகவராண்மையை ஊக்குவித்தல்

v.) சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதனையொத்த வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தல்

12.4. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | - |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 41.3 |

12.6. 2026 ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 1 | வாழை இலை உணவு பொதியிடும் உறைகளைத் தயாரிக்கும் செயற்திட்டம் | ரேப்பர்களின் எண்ணிக்கை | ஒரு இயந்திரத்திலிருந்து ஒரு நாளைக்கு 25,000 பொதிபொருட்கள் | - | 7.73 |
| 2 | சலுகை விலையில் ஆரோக்கியமான உணவு வகைளை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் | ஒரு சேவையாக | 5 புதிய 'சுகுண சப்பாயாம்' உணவு விடுதிகளை நிறுவுதல் | - | 0.22 |
| 3 | தெஹிவளை அக்ரோ ஃப்ரெஷ் சூப்பர் விற்பனை நிலையம் | விற்பனை | - | - | 54.16 |
| 4 | தெஹிவளை நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | விற்பனை | ஒரு வருடத்தில் 2,000 தரத்தில் உயர்ந்த நாற்றுகளை உற்பத்தி செய்தல் | - | 6.92 |
| 5 | அரிசி போசனையூட்டல் | உணவுகளின் | ஒரு நாளைக்கு 500,000 | – | |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | செயற்திட்டம் | எண்ணிக்கை | குழந்தைகளுக்கு<br>மாவட்டங்களின் எண்ணிக்கை = 12 | | 1,309.04 |
| 6 | கால்நடைத் தீவனங்களுக்காக 50,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்தல் | மெட்ரிக் டன் | 50,000 மெற்றிக் தொன் | – | 8,255.29 |
| 7 | உள்நாட்டு சோளத்தைக் கொள்வனவு செய்தல் | 02 மெட்ரிக் டன் | 15,000 மெற்றிக் தொன் | – | 1.73 |
| 8 | நாராஹேன்பிட்ட நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | விற்பனை | ஒரு வருடத்தில் 2,500 தரத்தில் உயர்ந்த நாற்றுகளை உற்பத்தி செய்தல் | – | 13.70 |
| 9 | 15 மற்றும் 10 ஏக்கர் நிலப்பரப்பில் தணமல்வில மற்றும் புத்தல பண்ணைகளில் நில அபிவிருத்தி செய்தல் | மெட்ரிக் டன் | தனியார் துறையுடன் இணைந்து சோளம் பயிரிடல் | – | 2.45 |
| 10 | இடைக்கால போகத்தில் பாசிப்பயறு பயிரிடும் செயற்திட்டம் | மெட்ரிக் டன் | விவசாயிகளின் பங்களிப்புடன் 400 ஏக்கரில் பாசிப்பயறு ஊக்குவிப்பு | – | 2.09 |
| 11 | சலுகை விலையில் ஆரோக்கியமான உணவை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் - கொழும்பு டெலிகொம் நிறுவனம் | ஒரு சேவையாக | ஊட்டச்சத்து நிறைந்த உணவை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துதல் (அனைத்து அரச நிறுவனங்களின் உணவு விற்பனை நிலையங்களுக்கும்) | – | 0.50 |

*12.7. 30.09.2025 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | - | - | - |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 40.00 | 30.62 | 75 |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| 1 | பொலித்தீன் உணவு பொதியிடும் உறைகளுக்குப் பதிலாக வாழை இலையிலான உணவு பொதியிடும் உறைகளை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் | 6.18 | 0.01 | - |
| 2 | சலுகை விலையில் ஆரோக்கியமான உணவை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் | 0.18 | 0.05 | 26 |
| 3 | நாராஹென்பிட்டி நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | 10.96 | 9.55 | 87 |
| 4 | தெகிவளை அக்ரோ ஃப்ரெஷ் சுப்பர் விற்பனை நிலையம் | 43.33 | 30.98 | 71 |
| 5 | தெகிவளை நாற்று மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | 6.92 | 6.67 | 97 |
| 6 | கால்நடைத் தீவனங்களுக்காக 50,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்தல் | 6,604.23 | 43.08 | 1 |
| 7 | அரிசி வலுவூட்டும் செயற்திட்டம் | 1,047.23 | 155.09 | 15 |
| 8 | உள்நாட்டு சோளத்தைக் கொள்வனவு செய்தல் | 2,101.38 | 0.95 | - |
| 9 | 15 மற்றும் 10 ஏக்கர் நிலப்பரப்பிற்காக தணமல்வில மற்றும் புத்தல கமநலப் பண்ணைகளில் நில அபிவிருத்தி செய்தல் | 1.96 | 1.09 | 56 |
| 10 | இடைக்கால போகத்தில் பாசிப்பயறு பயிரிடும் செயற்திட்டம் | 1.66 | 0.04 | 3 |

*12.8. 2025.09.30 ஆம் திகதி வரையான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*i.) வாழை இலை உறை உற்பத்தி செயற்திட்டம்*

*தற்போது, தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையின் கீழ் உள்ள தெகிவளையில் அமைந்துள்ள விற்பனை நிலையத்தில், உணவு பொதியிடும் உறைகளாக உயிரி பொதியிடும் உறைகள் உற்பத்தி செய்து பிரபலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக நிறுவப்பட்டுள்ள மின்சாரம் மூலம் இயங்கும் இயந்திரம் ஒன்றினால் வாழை இலைகளைப் பயன்படுத்தி உணவு பொதியிடும் உறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த இயந்திரம் மூலம் ஒரு மணி நேரத்திற்கு குறைந்தது 150 பொதியிடும் உறைகளைத் தயாரிக்க முடியும். ஒரு உறையின் விற்பனை விலை சுமார் 10.00 ரூபாய் ஆகும். பச்சை வாழை இலைகளை எமது நிறுவனத்திற்கு வழங்கும் போது, 2 அடி நீளமுள்ள வாழை இலைத் துண்டுக்கு 4.00 ரூபாய் வீதம் செலுத்தி கொள்வனவு செய்வதற்கு நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.*

*புகைப்பட இலக்கம் 50*

*ii.) சலுகை விலையில் ஆரோக்கியமான உணவை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம்*

*மக்கள் மத்தியில் ஆரோக்கியமான உணவு வகைகளைப் பிரபலப்படுத்தும் இரண்டாம் கட்டமாக, "சுகுண சப்பாயம" Torrington, Good Market - Saturday special என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவன மாணவர் குழுவால் இந்த விற்பனைக் கூடம் ஆரம்பிக்கப்பட்டு, 2025 மே 03 ஆம் திகதி முதல் 2025 ஜூலை 05 ஆம் திகதி வரை ஒவ்வொரு சனிக்கிழமையும் நடத்தப்பட்டது. இது கொழும்பு நகரில் உள்ள மக்களின் பிரதிபலிப்பு பற்றிய புரிதலைப் பெறுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு சாத்தியக்கூறு ஆய்வு ஆகும். அங்கு சேகரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில், கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில், "சுகுண சப்பாயம" தனியார் துறையின் பங்களிப்புடன் 2025 செப்டம்பர் முதல் வாரத்தில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 51*

*iii.) நாற்று விற்பனை நிலையம் மற்றும் வீட்டுத் தோட்டம் - நாராஹென்பிட்டி*

*கிராமிய மக்களும், நகர்ப்புற மக்களும் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் தமக்குத் தேவையானவற்றை இயன்ற வகையில் பயிரிட்டுப் பயன்படுத்துவதற்கு ஆர்வம் காட்டுவதால், அதற்காக நகர்ப்புற மக்களுக்கு வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான அனைத்து வகையான காய்கறி நாற்றுக்களையும் சலுகை விலையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு செயற்திட்டமாக நாராஹென்பிட்டி நாற்று மேடையை அறிமுகப்படுத்தலாம். மூலிகைத் தாவரங்கள், பூச்செடிகள் மற்றும் பழ மரங்கள் (குறிப்பாக குறைவாகப் பயன்படுத்தப்படும் பழங்கள்) மற்றும் பழங்கள் மற்றும் காய்கறிகளின் விதைகள், காய்கறி மற்றும் பூ உரங்கள், சேதன உரங்கள், பீடை கொல்லிகள், விவசாய உபகரணங்கள் போன்றவற்றை இந்த இடத்தில் கொள்வனவு செய்ய முடியும். அத்துடன், இந்த இடத்தில் பயிர்ச் செய்கை ஆலோசனைகளையும் இலவசமாகப் பெறலாம்.*
*இந்தச் செயற்திட்டத்தின் வருமானம் 7.88 மில்லியன் ரூபாய் ஆகவும், செலவு 9.55 மில்லியன் ரூபாய் ஆகவும் இருந்தது. மேலே உள்ள புள்ளிவிவரங்களின்படி, இந்தச் செயற்திட்டம் கடந்த ஆண்டை விட முன்னேற்றம் அடைந்துள்ளது.*

*புகைப்பட இலக்கம் 52*

*iv.) நாற்று விற்பனை நிலையம் - தெகிவளை*

*நாராஹென்பிட்டி விற்பனை நிலையம் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து விற்பனைப் பணிகளும் தெகிவளை நிலையம் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன. வருமானமாக 6.06 மில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு செலவு 6.69 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*v.) விவசாய விளைபொருட்கள் மற்றும் உணவு விற்பனை நிலையம் - தெகிவளை*

*இந்தச் செயற்திட்டத்தின் இந்த ஆண்டின் செலவு 30.98 மில்லியன் ரூபாய் ஆகவும், வருமானம் 30.83 மில்லியன் ரூபாய் ஆகவும் இருந்தது.*

*புகைப்பட இலக்கம் 53*

*vi.) சோள இறக்குமதி*

*கோழி வளர்ப்புக்கு சோளம் ஒரு முக்கிய விலங்கு உணவுப் பொருளாகப் பயன்படுத்தப்படுவதால், இலங்கை கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியாளர்களிடையே அதற்கு அதிக கேள்வி காணப்படுகிறது. இருப்பினும், இலங்கையில் 200,000 மெற்றிக் தொன் சோளம் உற்பத்தி செய்யப்பட்டாலும், இது வருடாந்தத் தேவையில் சுமார் 50%க்கு மட்டுமே இது போதுமானது.*

*தற்போது, தனியார் நிறுவனங்களால் சோளம் இறக்குமதி செய்யப்படுவதால், அந்நிறுவனங்கள் ஏகபோகத்தைப் பேணி வருகின்றன. எனவே, இதன் மூலம் கோழித் தீவனத்தின் விலை உயர்ந்து, கோழிப் பண்ணை விவசாயிகளுக்கு கடுமையான சிரமங்களை ஏற்படுகின்றன. அதன்படி, தனியார் துறையின் உதவியுடன் 50,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதன் மூலம் 146.74 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. செலவு 43.08 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*vii.) அரிசி வலுவூட்டும் செயற்திட்டம்*

*ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டில் 500,000 பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக வலுவூட்டப்பட்ட அரிசியைத் தயாரிக்கும் பணி எமது சபையின் கல்லங்குட்டிய தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகள் உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் செயற்திட்டத்தின் செலவு 155.09 மில்லியன் ரூபாய் ஆகும். 63.68 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 54*

*viii.) தணமல்வில மற்றும் புத்தல விவசாயப் பண்ணைகளில் 15 மற்றும் 10 ஏக்கர் நிலப்பரப்பு நிலங்களை அபிவிருத்தி செய்தல்*

*புத்தல விவசாயப் பண்ணையில் 6 ஏக்கர் பரப்பளவில் கால்நடைத் தீவனத்திற்காக சோளம் பயிரிடப்பட்டுள்ளதுடன், 16 மெற்றிக் தொன் சோளம் கால்நடைத் தீவனத்திற்காக அம்பேவெல பண்ணைக்கு சரக்கு லொறிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டது. இதன் அறுவடையை மழைக்காலம் ஆரம்பிக்க முன்னர் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், சோள அறுவடையை 80 முதல் 85 நாட்களுக்குள் மேற்கொள்ள வேண்டும்.*

*புகைப்பட இலக்கம் 55*

*ix.) இடைக்கால போகத்தில் பாசிப்பயறு பயிரிடும் செயற்திட்டம்*

*தற்போது, இலங்கையில் பாசிப்பயறு பயிரிடப்படும் பரப்பு அண்ணளவாக 9,100 ஹெக்டேயர் ஆகும். வருடாந்த உற்பத்தி சுமார் 13,000 மெற்றிக் தொன் ஆகும். இருப்பினும், வருடாந்தத் தேவை சுமார் 20,000 மெற்றிக் தொன் ஆகும். மேலும், அறுவடை ஒரு ஹெக்டேயருக்கு 1.1 மெற்றிக் தொன் முதல் 2 மெற்றிக் தொன் வரை வேறுபடுகிறது. இப்போதும் பாசிப்பயறு இறக்குமதி செய்யப்பட்டு வரும் நிலையில், உற்பத்தியை அதிகரிப்பதற்காக இடைப் போகப் பயிர்ச் செய்கையும் ஓரளவு பங்களிப்பு செய்ய முடியும்.*

*புகைப்பட இலக்கம் 56*

*x.) சலுகை விலையில் ஆரோக்கியமான உணவு வகைகளை அறிமுகம் செய்யும் செயற்திட்டம் - கொழும்பு டெலிகொம் நிறுவனம்*

*எமது சபை மூலம் "சுகுண சப்பாயம" என்ற பெயரில் சலுகை விலையில் ஊட்டச்சத்து நிறைந்த உணவை நுகர்வோருக்கு வழங்கும் ஒரு செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தச் செயற்திட்டத்தை இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் உணவு விடுதியில் செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், எமது நிறுவனத்தில் சேவை செய்ய போதுமான ஊழியர்கள் இல்லாததால், வெளிப்புற நிறுவனம் மூலம் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 57*

## *13. இலங்கை ஹதபிம அதிகாரசபை (தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை)*

*13.1 தொலைநோக்கு*

*நிலைபேறான காணிகள் மற்றும் இயற்கை வள முகமையின் பொருட்டு சேவை பல்வகைப்படுத்தலின் ஊடாக பசுமை நிறைந்த சூழல் – வளம் நிறைந்த நாடு*

*13.2. செயற்பணி*

*பயனுறுதிமிக்க காணி முகமைத்துவம் மற்றும் முறையான நீர் பாதுகாப்பு மற்றும் உச்ச அளவில் மனிதவளத்தை பயன்படுத்துவதன் ஊடாக சூழலியல் சமூக கலாசார மற்றும் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்குத் தேவையான பங்களிப்பை நல்குதல்.*

*13.3. நோக்கம்*

*1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2026/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் பினருமாறு;*

- *i.) விவசாய பல்வகைப்படுத்தல், குடியேற்ற அபிவிருத்தி மற்றும் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட ஈரநில முகாமைத்துவத்திற்கு திட்டங்களை தயாரித்தல் மற்றும் கூட்டுத்தாபனம் அல்லது அரசு அல்லது அரசு சாரா நிறுவனங்களால் குறித்த திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.*
- *ii.) விவசாய உற்பத்திகளை தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல்.*
- *iii.) வர்த்தக ரீதியான விவசாயச் செய்கை அல்லது வேறு ஏதேனும் விவசாய முயற்சிகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவசாய முதலீடுகளை மேற்கொள்ள தூண்டுதல், ஊக்குவித்தல் மற்றும் உதவி வழங்கல்.*
- *iv.) விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அபிவிருத்திக்காக பல்வேறு உபகரணங்களை வழங்குதல் மற்றும் பராமரித்தல்.*
- *v.) (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் விவசாய பல்வகைப்படுத்தல், குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நீர்ப்பிடிப்பு பிரதேச முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக் கருதப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் செயற்படுத்துதல்.*
- *vi.) வர்த்தக விவசாயப் பயிர்ச் செய்கை அல்லது வேறு ஏதேனும் விவசாய முயற்சிகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவசாய முதலீடுகளை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் ஆதரவளித்தல்.*
- *vii.) அதிகாரசபையுடன் கூட்டாண்மையுடனோ அல்லது இல்லாமலோ, அரச சார்பற்ற முகவர் நிறுவனங்கள், தனியார் துறை அல்லது விவசாயிகள் மூலம் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய விவசாய முதலீட்டை ஏற்படுத்துவதற்கான திட்டமிடல் மற்றும் அத்திட்டங்களைச் செயற்படுத்துதல், சேவைகளை வழங்குதல் மற்றும் நிபுணத்துவ அறிவை வழங்குதல்.*

13.4. 2026 ஆண்டிற்கான நிதிசார் இலக்குகள்

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 501.20 |
| 2 | மீண்டுவரும் | 177.60 |

13.5. 2025 ஆண்டில் பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மதிப்பிடப்பட்ட மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| § காணி உற்பத்தித்திறனை உச்ச அளவிற்குக் கொண்டு வருதல் மற்றும் பாதுகாப்பான நீர்வளமும் மற்றும் பாதுகாக்கப்பட்ட சூழலும் | | | | | |
| 1.1 | மண் அரிப்பு மற்றும் தரம் குறைதலைக் குறைப்பதற்காக விவசாய நிலங்களில் மண் பாதுகாப்பு கட்டமைப்புகளை அமைத்தல் | ஹெக்டயர் | 1500 | 35,000.00 | 75.00 |
| 1.2 | நீர் மூலங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் மூலங்கள் சார்ந்த வசதிகளை வழங்குதல் | நீர் மூலங்கள் | 52 | 1,750,000.00 | 91.00 |
| 1.3 | நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காக மர நடுகை | நீர்வாழ் தாவரங்கள் | 20000 | _ | 10.00 |
| 1.4 | சமூகப் பங்களிப்புடனான நீர் மூலப் பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | நிகழ்ச்சித் திட்டங்கள் | 100 | 100,000.00 | 10.00 |
| 1.5 | பாடசாலை மட்ட சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் | நிகழ்ச்சித் திட்டங்கள் | 50 | 60,000.00 | 3.00 |
| 1.6 | சமூக மட்ட சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | நிகழ்ச்சித் திட்டங்கள் | 50 | 60,000.00 | 3.00 |
| ▪ உணவு கிடைக்கும்தன்மை மற்றும் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்ட ஆரோக்கியமான, செழிப்பான சமூகமும், உகந்த உட்கட்டமைப்பு வசதிகளும், மேம்படுத்தப்பட்ட அறிவும் தொழில்நுட்பமும் கொண்டு வலுவூட்டப்பட்ட புதிய விவசாய தொழில்முனைவோரும் | | | | | |
| 2.1 | வர்த்தக வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு | உபகரணத் தொகுதிகள் | 2000 | 25,000.00 | 50.00 |
| 2.2 | பொருளாதாரப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு | பொருளாதாரப் பயிர்கள் | 50000 | 500.00 | 25.00 |
| 2.3 | மேலதிக உணவுப் பயிர் ஊக்குவிப்பு | ஹெக்டயர் | 250 | 80,000.00 | 20.00 |
| 2.4 | கலப்பின மிளகாய்ப் பயிர்ச் செய்கையை விஸ்தரிக்கும் செயற்திட்டம் | பயனாளிகள் | 10 | _ | 5.00 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மதிப்பிடப்பட்ட மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 2.5 | கிராமிய சமூகத்தினர் மத்தியில் முட்டையிடும் கோழி வளர்ப்பை (Layer Chicks) ஊக்குவித்தல் | பயனாளிகள் | 100 | 100,000.00 | 10.00 |
| 2.6 | பகுதியளவு வீட்டு கோழி வளர்ப்பு | கோழிக் குஞ்சுகள் | 60000 | 850.00 | 51.00 |
| 2.7 | பயிர்களுக்கு வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்பைக் குறைத்தல் (50% பங்களிப்பு அடிப்படையில்) | மின் வேலிகள் | 100 | – | 10.00 |
| | | வாயுத் துப்பாக்கிகள் | 1600 | – | 40.00 |
| 2.8 | வர்த்தக மட்டத்திலான தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல் (50% பங்களிப்பு அடிப்படையில்) | பயனாளிகள் | 40 | 50,000.00 | 2.00 |
| 2.9 | காளான் உற்பத்தி செய்யும் தொழில்முனைவோரை உருவாக்குதல் (50% பங்களிப்பு அடிப்படையில்) | பயனாளிகள் | 100 | 100,000.00 | 10.00 |
| 2.10 | பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருள் தொழில்முனைவோரை உருவாக்குதல் (50% பங்களிப்பு அடிப்படையில்) | பயனாளிகள் | 20 | 375,000.00 | 7.50 |
| 2.11 | தொழில்முனைவோர் மட்டத்தில் பழக் கிராமங்களை பிரபல்யப்படுத்துதல் | பழக் கிராமங்கள் | 20 | – | 50.00 |
| ▪ விவசாய சமூகத்தை தொழில்நுட்ப அறிவினால் வலுவூட்டுதல் | | | | | |
| 3.1 | விவசாய சமூகத்திற்காக தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் சமூக உயிரூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தி வலுவூட்டுதலும் விவசாயத்தில் ஈடுபடுத்துதலும். | நிகழ்ச்சித் திட்டங்கள் | 100 | 30,000.00 | 3.00 |
| 3.2 | சமூக உயிரூட்டல் மூலம் பங்களிப்பு அபிவிருத்தி கிராமிய அணுகுமுறை நிகழ்ச்சித் திட்டங்கள் (PRA) ஊடாக விவசாய சமூகத்தின் பங்களிப்பைப் பெறுதலும் தலைமைத்துவப் பயிற்சியை வழங்குதலும். | நிகழ்ச்சித் திட்டங்கள் | 52 | – | 2.70 |
| 3.3 | தொழில்முனைவோருக்குத் தேவையான பயிற்சி | நிகழ்ச்சித் திட்டங்கள் | 10 | 200,000.00 | 2.00 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகு ஒன்றுக்கான செலவு | மதிப்பிடப்பட்ட மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சிகளை நடத்துதல் | | | | |
| 3.4 | விவசாயத்தின் முன்னேற்றத்தினால் பொருளாதார அபிவிருத்தியடைந்த விவசாய சமூகங்களை மதிப்பீடு செய்தல் | நிகழ்ச்சித் திட்டங்கள் | 1 | _ | 2.00 |
| 5. ஊழியர் உந்துசக்தியூட்டல் மூலம் சேவை உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் நிறுவன உற்பத்தித்திறனை அதிகரித்தல் | | | | | |
| 4.1 | பௌதீக வள அபிவிருத்தி | - | - | _ | 10.00 |
| 4.2 | மனிதவள அபிவிருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி | பயிற்சி நிகழ்ச்சிகள் | 100 | _ | 3.00 |
| 4.3 | மாதாந்த முன்னேற்ற மீளாய்வு | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 24 | _ | 1.00 |
| 4.4 | இலத்திரனியல் மற்றும் ஊடக நிகழ்ச்சிகள் | - | - | | 5.00 |
| மொத்தம் | | | | | 501.20 |

13.6. 30.09.2025 ஆம் திகதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்

| ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | கடமைகள் மற்றும் பொறுப்புகள் | நிதி முன்னேற்றத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|
| 338 | 52.61 | 51.58 | 31 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டங்கள் | 2025 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 2025.09.30 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| 1.1 | மண் அரிப்பு மற்றும் தரம் குறைதலைக் குறைப்பதற்காக விவசாய நிலங்களில் மண் பாதுகாப்பு கட்டமைப்புகளை அமைத்தல் | 28.00 | 9.71 | 35 |
| 1.2 | சேதன உரங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல் | 26.00 | - | - |
| 1.3 | | 3.25 | 3.06 | 94 |
| 1.4 | மண் பாதுகாப்புக்கான தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல் | 1.00 | - | - |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டங்கள் | 2025 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 2025.09.30 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| 2.1 | நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் ஆதாரங்களுடன் தொடர்பான வசதிகளை வழங்குதல் | 62.40 | 51.58 | 83 |
| 2.2 | நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கான முறைகளை பயன்படுத்தல் | 3.00 | 0.75 | 25 |
| 2.3 | சமூகப் பங்களிப்புடனான நீர் மூலப் பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | 1.56 | 0.84 | 54 |
| 3.1 | வர்த்தக வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு | 17.00 | 0.59 | 3 |
| 3.2 | பொருளாதாரப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு | 7.50 | 0.88 | 12 |
| 3.3 | மேலதிக உணவுப் பயிர் ஊக்குவிப்பு | 6.00 | 1.63 | 27 |
| 3.4 | சீரமைவான விவசாயத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கலப்பின மிளகாய்ப் பயிர்ச் செய்கையை பிரபல்யப்படுத்தும் முன்னோடிச் செயற்திட்டம் | 5.00 | - | - |
| 3.5 | பயிர்களுக்கு வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்பைக் குறைத்தல் (50% பங்களிப்பு அடிப்படையில்) | 4.00 | - | - |
| | | 30.00 | - | - |
| 4.1 | வர்த்தக மட்டத்திலான தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல் (50% பங்களிப்பு அடிப்படையில்) | 2.50 | - | - |
| 4.2 | காளான் உற்பத்தி செய்யும் தொழில்முனைவோரை உருவாக்குதல் (50% பங்களிப்பு அடிப்படையில்) | 2.50 | - | - |
| 4.3 | பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருள் தொழில்முனைவோரை உருவாக்குதல் (50% பங்களிப்பு அடிப்படையில்) | 6.25 | - | - |
| 4.4 | தொழில்முனைவோர் மட்டத்தில் பழக் கிராமங்களை பிரபல்யப்படுத்துதல் | 25.00 | 0.90 | 4 |
| 4.5 | மிளகுச் செய்கையை பிரபல்யப்படுத்தும் செயற்திட்டம் | 19.20 | - | - |
| 5.1 | பாடசாலை மட்ட சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் | 1.30 | 0.30 | 23 |
| 5.2 | சமூக மட்ட சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | 1.04 | 0.59 | 57 |
| 6.1 | பகுதியளவு வீட்டுக் கோழி வளர்ப்பு | 52.70 | 19.73 | 37 |
| 6.2 | கிராமிய சமூகத்தினர் மத்தியில் முட்டையிடும் கோழி வளர்ப்பை | 20.00 | 5.15 | 26 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டங்கள் | 2025 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 2025.09.30 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| | (Layer Chicks) ஊக்குவித்தல் | | | |
| 7.1 | விவசாய சமூகத்திற்காக தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி வலுவூட்டுதலும் விவசாயத்தில் ஈடுபடுத்துதலும். | 2.08 | 1.72 | 83 |
| 7.2 | சமூக உயிரூட்டல் மூலம் பங்களிப்பு அபிவிருத்தி கிராமிய அணுகுமுறை நிகழ்ச்சித் திட்டங்கள் (PRA) ஊடாக விவசாய சமூகத்தின் பங்களிப்பைப் பெறுதல் | 1.25 | 1.24 | 99 |
| 7.3 | தொழில்முனைவோருக்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் | 0.50 | 0.05 | 9 |
| 7.4 | விவசாயத்தின் முன்னேற்றத்தினால் பொருளாதார அபிவிருத்தியடைந்த விவசாய சமூகங்களை மதிப்பீடு செய்தல் | 1.00 | - | - |
| 8.1 | பௌதீக வள அபிவிருத்தி | 5.00 | 4.27 | 85 |
| 8.2 | மனிதவள அபிவிருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி | 1.00 | 0.20 | 20 |
| 8.3 | மாதாந்த முன்னேற்ற மீளாய்வு | 0.96 | 0.30 | 31 |
| 8.4 | இலத்திரனியல் மற்றும் ஊடக நிகழ்ச்சிகள் | 1.01 | 0.60 | 59 |
| மொத்தம் | | 338.00 | 104.09 | 31 |

| விஷேட செயற்திட்டங்கள் | | | |
|---|---|---|---|
| Clean Sri Lanka நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 50 பாடசாலைகளில் ‘சொபா சிப் வந்துல’ நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல் | 29.93 | 1.23 | 4 |
| பல்லேகலே விவசாயப் பண்ணையை ஒருங்கிணைந்த விவசாயப் பண்ணையாக விருத்தி செய்தல் | 8.73 | - | - |

*13.7. 2025.09.30 ஆம் திகதியளவில் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்*

*நோக்கெல்லை 01 : உச்ச அளவு நிலப் பயனுறுதித் தன்மையை அடைதல்*

*1.1 விவசாய நிலங்களில் மண் அரிப்பு மற்றும் தரம் குறைவதைத் தடுப்பதன் மூலம் மண்ணின் உற்பத்தித்திறனைப் பாதுகாத்தல்.*

*இந்தச் செயற்திட்டம் மூலம் விவசாய நிலங்களில் மண் அரிப்பு மற்றும் தரம் குறைவதைத் தடுப்பதன் மூலம் மண்ணின் உற்பத்தித்திறன் பாதுகாக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டம் கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் செயல்படுத்தப்படுகிறது. 2025 ஆம் ஆண்டிற்காக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 28.00 மில்லியன்*

*ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், 800 ஹெக்டேயர் நிலத்தைப் பாதுகாப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, 2025.09.30 ஆம் திகதி வரை விவசாய நிலங்களில் 410.86 ஹெக்டேயர் நிலம் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், பயனாளிகளுக்கு 9.71 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 58*

*1.2 சேதன உர உற்பத்தி மற்றும் பயன்பாட்டைப் பிரபலப்படுத்துதல்*

*மண் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை மேலும் அதிகரிப்பதன் மூலம் வளமான மண்ணை உருவாக்கும் நோக்குடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சேதன உரங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், அச் சேதன உர உற்பத்தியை வெற்றிகரமாக மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 2,600 விவசாய உள்ளீட்டுப் பொதிகளை வழங்குதல் மற்றும் தரமான சேதன உர உற்பத்திக்காக 130,000 கிலோ கிராம் பாறை பொஸ்பேற்றை (Rock Phosphate) வழங்குதல் என்பன இதில் அடங்கும். 2025 ஆம் ஆண்டிற்காக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 29.25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆம் திகதி வரை சேதன உர உற்பத்திக்குத் தேவையான 130,000 கிலோ கிராம் பாறை பொஸ்பேற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 3.07 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள விவசாய உள்ளீட்டுப் பொதிகளுக்கான பெறுகை நடவடிக்கைகள் முடிவடைந்து, உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 59*

*நோக்கம் 02 - பாதுகாப்பான நீர்வளம்*

*2.1 நீர் மூலங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் மூலங்கள் சார்ந்த வசதிகளை வழங்குதல்.*

*2025 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித் திட்டம் கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 52 பிரதேச செயலகப் பிரிவுகளில் செயல்படுத்தப்படுகிறது. 2025 ஆம் ஆண்டிற்காக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 62.40 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், 52 நீர் மூலங்களைப் பாதுகாப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டம் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பிரதேச செயலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளின் பரிந்துரையின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. 2025.09.30 ஆம் திகதி வரை 49 நீர் மூலங்களுக்கான மதிப்பீடுகள் அதிகாரசபைக்குக் கிடைத்துள்ளன. 45 நீர் மூலங்களுக்காக 51.59 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 60*

*2.2 நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் முறைகளைப் பயன்படுத்துதல்*

*நீர் மூலங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இணையாக, தற்போதுள்ள நீர் மூலங்களின் நிலைபேறான தன்மையைப் பாதுகாப்பதற்காக மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் நீர்வாழ் தாவரங்கள் உட்பட நீர் மூலங்களில் பயிரிட பொருத்தமான தவற வகைகளை நடுவதன் மூலம் நீர் மூலங்களைப் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*அதற்காக, நீர்வாழ் தாவரங்களை நடுவதற்காக 15,000 நீர்வாழ தாவர நாற்றுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக 3.00 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி,*

*2025.09.30 ஆம் திகதி வரை 0.75 மில்லியன் ரூபாய் செலவில் 5,000 நீர்வாழ் தாவரங்கள் நீரேந்துப் பிரதேசங்களில் நடப்பட்டன.*

*புகைப்பட இலக்கம் 61*

*2.3 சமூகப் பங்களிப்புடனான நீர் மூலங்களைப் பாதுகாத்தல் மற்றும் தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்*

*நீர் மூலங்களைப் பாதுகாப்பதுடன் இணையாக, தற்போது தரம் குறைந்த அல்லது அசுத்தமடைந்துள்ள நீர் மூலங்களை அடையாளம் கண்டு, அந்த நீர் மூலங்களைப் பயன்படுத்தும் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அச் சமூகத்தின் பங்களிப்புடன் இந்த நீர் மூலங்களைத் தூய்மைப்படுத்தும் சிரமதானங்கள் மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.*

*அதன்படி, 2025 ஆம் ஆண்டில் 52 தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக 1.56 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதி வரை 33 தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதற்காக 0.85 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*நோக்கம் 03: உணவு கிடைக்கும்தன்மை மற்றும் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்ட ஆரோக்கியமான, செழிப்பான சமூகம்*

*3.1 வர்த்தக வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல்*

*உணவுப் பாதுகாப்பு, நஞ்சு அற்ற உணவு உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் விவசாயிகள் சந்தையில் தங்கியிருப்பதை குறைப்பதன் மூலம் பொருளாதார நிலையை உயர்த்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்காக விவசாயிகளை ஊக்குவிக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் இந்த ஆண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்காகத் தெரிவு செய்யப்படும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக வீட்டுத் தோட்ட நாற்றுப் பொதிகள், வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான வவசாய உபகரணப் பொதிகள், சேதன திரவ உரங்களை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.*

*2025 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் பிரதேச செயலகப் பிரிவுகளில் வர்த்தக வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் விவசாய உள்ளீடுகளை வழங்குவதுடன் கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ள 52 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 1,700 வீட்டுத் தோட்டங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 17.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*2025.09.30 ஆம் திகதி வரை 630 பயனாளிகளுக்கு 18,058 வீட்டுத் தோட்ட நாற்றுப் பாத்திரங்களும் 637 பயனாளிகளுக்கு 1,274 திரவ உரங்களும் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 0.60 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*3.2 பொருளாதாரப் பயிர்ச் செய்கை மேம்படுத்தல்*

*2025 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் பிரதேச செயலகப் பிரிவுகளில் பொருளாதாரப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காகத் தென்னை, கமுகு, மிளகு, வெனிலா, கறுவா, கோப்பி, எலுமிச்சை போன்ற பொருளாதாரப் பயிர் நாற்றுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 30,600 பொருளாதாரப் பயிர் நாற்றுகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 7.50 மில்லியன் ரூபாய் நிதி*

*மதிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி, 2025.09.30 ஆம் திகதி வரை 17,644 நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 1.64 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.*

*3.3 மேலதிக உணவுப் பயிர்கள் மேம்படுத்தல்*

*2025 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் பிரதேச செயலகப் பிரிவுகளில் மேலதிக உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கான சாத்தியப்பபடுகள் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் மேலதிக உணவுப் பயிர்களைப் பயிரிடும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் மேலதிக உணவுப் பயிர்களான கௌபி, பாசிப்பயறு, நிலக்கடலை மற்றும் கேழ்வரகு போன்ற விதைகளை விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.*

*அதன்படி, 2025 ஆம் ஆண்டில் 200 ஹெக்டேயர் மேலதிக உணவுப் பயிர்களை இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் பயிரிட எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக 6.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதி வரை 53 ஹெக்டேயருக்கான விதைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஒதுக்கப்பட்ட நிதியில் 1.60 மில்லியன் ரூபாய் அதற்காகச் செலவிடப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 62*

*3.5 பயிர்களுக்கு வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்பைக் குறைத்தல். (50% பங்களிப்பு அடிப்படையில்)*

*2025 ஆம் ஆண்டில் வனவிலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களைக் குறைப்பதற்காக, அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் பிரதேச செயலகப் பிரிவுகளில் பயனாளிகளுக்கு காற்றுத் துப்பாக்கிகள் மற்றும் மின்சார வேலிகள் என்பவற்றை வழங்குவதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டம் 50% பயனாளிப் பங்களிப்பு மற்றும் 50% நிறுவனப் பங்களிப்பின் கீழ் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், 1,000 காற்றுத் துப்பாக்கிகள் மற்றும் 100 மின்சார வேலிகள் 2025 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மூலம் பயனாளிகளுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக 34.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆம் திகதி வரை அது தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. பயனாளிகளுக்கு காற்றுத் துப்பாக்கிகள் வழங்குவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

*நோக்கம் 04: உகந்த உட்கட்டமைப்பு வசதிகளால் மேம்படுத்தப்பட்ட அறிவும் தொழில்நுட்பமும் கொண்டு வலுவூட்டப்பட்ட புதிய விவசாய தொழில்முனைவோர்*

*4.1 வர்த்தக மட்டத்திலான தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல் (50% பங்களிப்பு அடிப்படையில்)*

*2025 ஆம் ஆண்டில் வர்த்தக மட்டத்தில் தேனீ வளர்ப்பில் ஈடுபடும் அல்லது அதற்கு விருப்பம் தெரிவிக்கும் பயனாளிகளை அடையாளம் கண்டு, அதற்கான தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் உள்ளீடுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் 25 தொழில்முனைவோரை வலுவூட்டத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், ஒரு பயனாளிக்கு 100,000.00 ரூபாய் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 2.50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயற்திட்ட முன்மொழிவுகள் மற்றும் அந்தச் செயற்திட்டங்களின் சாத்தியக்கூறு என்பன ஆய்வு செய்யப்பட்ட பின்னர் உரிய உதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*4.2 காளான் உற்பத்தி செய்யும் தொழில்முனைவோரை உருவாக்குதல். (50% பங்களிப்பு அடிப்படையில்)*

*2025 ஆம் ஆண்டில் வர்த்தக மட்டத்தில் காளான் உற்பத்தியில் ஈடுபடும் அல்லது அதற்கு விருப்பம் தெரிவிக்கும் பயனாளிகளை அடையாளம் கண்டு, அதற்கான தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் உள்ளீடுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் 25 தொழில்முனைவோரை வலுவூட்டத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், ஒரு பயனாளிக்கு 100,000.00 ரூபாய் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.*

*அதன்படி, இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2.50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயற்திட்ட முன்மொழிவுகள் மற்றும் அந்தச் செயற்திட்டங்களின் சாத்தியக்கூறு என்பன ஆய்வு செய்யப்பட்ட பின்னர் உரிய உதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*4.3 பெறுமதி சேர்த்த தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் தொழில்முனைவோரை உருவாக்குதல். (50% பங்களிப்பு அடிப்படையில்)*

*2025 ஆம் ஆண்டில் விவசாய விளைபொருட்களைப் பெறுமதி சேர்த்த உற்பத்திகளாக மாற்றும் தொழில்முனைவோர் அல்லது அதற்கு விருப்பம் தெரிவிக்கும் பயனாளிகளை அடையாளம் கண்டு, அதற்கான தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் உள்ளீடுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த ஆண்டில் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் 25 தொழில்முனைவோரை வலுவூட்டத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், ஒரு பயனாளிக்கு 0.25 மில்லியன் ரூபாய் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 6.25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், செயற்திட்ட முன்மொழிவுகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் தேவையான உதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*4.4 தொழில்முனைவோர் மட்டத்தில் பழக் கிராமங்களை பிரபல்யப்படுத்துதல்.*

*பழப் பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல், பழ இறக்குமதிச் செலவைக் குறைத்தல் மற்றும் பழ ஏற்றுமதியை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் 2025 ஆம் ஆண்டின் செயல்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் உள்ள கள அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் செயற்திட்ட அறிக்கைகளைப் பரிசீலித்து பழக் கிராமங்களாக மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.*

*அதன்படி, 10 பழக் கிராமங்களுக்காக 25.00 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆம் திகதி வரை 23 செயற்திட்ட அறிக்கைகள் பழக் கிராமங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. நாற்றுகளை வழங்குவதற்காக 0.90 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தேவையான கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த நாற்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 63*

*நோக்கம் 05: பாதுகாக்கப்பட்ட சூழல்*

*5.1 பாடசாலை மட்ட சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள்*

*2025 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் 52 பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், விவசாய சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் அதிகமாகக் கல்வி கற்கும் பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து, பாடசாலைச் சமூகத்தின் முழுப் பங்களிப்புடன் மேலே உள்ள நிகழ்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. இதன் போது, பாடசாலை வளாகத்தில் மண் பாதுகாப்பை*

*முதன்மைப்படுத்தி பயிர்ச் செய்கை செயல் விளக்கத்தை நிறுவுதல், தற்போது குறைந்த பயன்பாட்டில் உள்ள பாடசாலை வளாகத்தின் ஒரு பகுதியை உற்பத்தித்திறன் மிக்க விவசாய நிலமாக மாற்றி உற்பத்தி அலகாக அபிவிருத்தி செய்தல், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் கோட்பாட்டு விவசாய அறிவை நடைமுறையில் பரிசோதிக்கும் களத்தை பாடசாலை வளாகத்திலேயே உருவாக்குதல், விவசாயம் மற்றும் சுற்றுச்சூழலில் ஆர்வம் கொண்ட எதிர்கால சந்ததியினரை உருவாக்க பங்களிப்பை வழங்குதல் போன்ற பணிகள் இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இது தெரிவு செய்யப்பட்ட 9 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 52 பிரதேச செயலகப் பிரிவுகளில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, இதற்காக 1.30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025.09.30 ஆம் திகதி வரை 22 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக இதுவரை 0.47 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*5.2 சமூக மட்ட சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்*

*2025 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள விவசாய சமூகத்தை ஒன்றிணைத்து சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்த இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 52 பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, இதற்காக 1.04 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆம் திகதி வரை 47 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக 0.99 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 64*

*நோக்கம் 06: ஆரோக்கியமான சமூகம்*

*6.1 பகுதியளவு வீட்டுக் கோழி வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்*

*கிராமிய சமூகத்தின் போசணைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் மேலதிக வருமானத்தை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக, தெரிவு செய்யப்பட்ட 52 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள விவசாயக் குடும்பங்களுக்கு 62,000 கோழிக் குஞ்சுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதற்காக 52.70 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025.09.30 ஆம் திகதி வரை 27,290 கோழிக் குஞ்சுகள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 23.20 மில்லியன் ரூபாய் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 65*

*6.2 கிராமிய சமூகத்தினர் மத்தியில் முட்டைக் கோழி வளர்ப்பை (Layer Chicks) அபிவிருத்தி செய்தல்*

*சந்தையில் முட்டையின் தேவைக்கும் வழங்கலுக்கும் இடையிலான சமநிலையற்ற தன்மை காரணமாக, முட்டையின் சந்தை விலை ஆண்டுதோறும் தொடர்ந்து மாறி வருகிறது. தேசிய மட்டத்தில் இந்த பிரச்சினையைக் குறைப்பதற்கு பங்களிக்கும் நோக்குடன், கிராமிய சமூகத்திற்கு முட்டையிடும் கோழிகளை (Layer Chicks) வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் 210 பயனாளிகளுக்கு தலா 50 கோழிக் குஞ்சுகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கோழிக் கூடுகளை அமைப்பதற்காக 45,000 ரூபாய் பொருளுதவி வழங்கப்படவுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டம் 50% பயனாளிப் பங்களிப்பின் கீழ் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, 209 தொழில்முனைவோரை உருவாக்குவதற்காக 20 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025.09.30 ஆம் திகதி வரை 79 பயனாளி*

குடும்பங்களுக்கு 4,850 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதுவரை இதற்காக 6.48 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 66

நோக்கம் 07: விவசாய சமூகத்தை விவசாய தொழில்நுட்ப அறிவினால் வலுவூட்டப்படுதல்

7.1 விவசாய சமூகத்திற்கு தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி வலுவூட்டுதலும் விவசாயத்தில் ஈடுபடுத்துதலும்.

2025 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காகத் தெரிவு செய்யப்படும் விவசாய சமூகத்திற்கு தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவது இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு 0.02 மில்லியன் ரூபாய் வீதம் நாடு முழுவதும் 104 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2.08 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2025.09.30 ஆம் திகதி வரை 88 கமநல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக 1.59 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

புகைப்படம் இலக்கம் 67

7.2 சமூக உயிரூட்டல் மூலம் பங்களிப்பு அபிவிருத்தி கிராமிய அணுகுமுறை நிகழ்ச்சித் திட்டங்கள் (PRA) ஊடாக விவசாய சமூகத்தின் பங்களிப்பைப் பெறுதல்.

பங்களிப்பு அபிவிருத்தி கிராமிய அணுகுமுறை நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் விவசாய சமூகத்தின் தேவைகளை அடையாளம் கண்டு, நிகழ்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவது மற்றும் விவசாய சமூகத்தை விவசாய தொழில்நுட்ப அறிவினால் வலுவூட்டுவது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். 2025 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் 9 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 52 பிரதேச செயலகப் பிரிவுகளில் 52 பங்களிப்பு கிராமிய அணுகுமுறை நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, 2025 ஆம் ஆண்டிற்கு இதற்காக 1.25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆம் திகதி வரை அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

# கால்நடை வளங்கள் பிரிவு

செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

*1. 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம் (2025.09.30 ஆம் திகதி வரை)*

| தொ/ இல | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்தி | 69.00 | 7.21 | 10.45 |
| 2 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) | 150.00 | 18.27 | 12.20 |
| 3 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (அபிவிருத்தி) | 100.00 | 9.17 | 9 |
| 4 | ஆடு வளர்ப்பின் ஊடக வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 200.00 | 0.005 | 0.003 |

**2025** ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

உள்நாட்டு அபிவிருத்தி செயற்திட்டங்கள்

*2.1. கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்தி*

*2.1.1 கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணை விருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

விலங்கு இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்திக்காக 62.57 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டு நிதி, வட மத்திய, ஊவா, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்கம் மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை என்பன செயல்படுத்தும் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. இதன் முன்னேற்றம் பின்வருமாறு:

| நிறுவனம் / மாகாணம் | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபாய்) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| ஊவா மாகாணம் | பொரலந்த பண்ணையில் கால்நடை இனப்பெருக்க நிலையத்தை அபிவிருத்தி செய்தல் | 4.00 | செயற்திட்ட முன்மொழிவுகள் மற்றும் அளவறி பட்டியல் (BOQ) என்பன அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |
| வட மத்திய மாகாணம் | திறப்பனை பண்ணையில் கால்நடை இனப்பெருக்க நிலையத்தை அபிவிருத்தி செய்தல் | 4.00 | |
| சப்ரகமுவ மாகாணம் | உந்துகொட பண்ணையில் கால்நடை இனப்பெருக்க | 4.00 | செயற்திட்டங்களைச் நடைமுறைப்படுத்துவது |

| நிறுவனம் / மாகாணம் | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபாய்) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| | நிலையத்தை அபிவிருத்தி செய்தல் | | சிரமம் என சம்பந்தப்பட்ட மாகாணத் திணைக்களங்கள் அறிவித்துள்ளன. |
| கிழக்கு மாகாணம் | வெள்ளைப் பசு மரபணுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | 4.00 | |
| தேசிய கால்நடை அபிவிருத் திச் சபை | போபத்தலாவ மற்றும் நிக்கவரட்டிய பண்ணைகளில் மாட்டுத் தொழுவங்களை அபிவிருத்தி செய்தல் | 12.00 | விநியோகத்தர் தேர்ந்தெடுக்கப்பட்டு கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. |
| | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை மூலம் உயர் இன மாட்டு விந்துணுக்களை இறக்குமதி செய்தல் மற்றும் மாட்டு விந்துணுக்களை சேமிக்கும் வசதிகளை வழங்குதல் | 30.00 | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஏல மதிப்பீடுகள் செய்யப்படுகிறது. |
| அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்காகப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் | | 2.77 | தேசிய பால் உற்பத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக மாகாணத் திணைக்களங்களின் அதிகாரிகளுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. |
| செயற்திட்ட மேற்பார்வை மற்றும் நிர்வாகச் செலவுகள் | | 1.80 | |
| மொத்த நிதி ஒதுக்கீடு | | 62.57 | |

2.1.2 நிதிப் பொறுப்புகள் - 2024

2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட, கால்நடை இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய 6.43 மில்லியன் ரூபாய் இந்த நிதி மூலமாக செலுத்தப்பட்டுள்ளது.

3. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வளங்கல் அபிவிருத்தி (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்)

3.1. மத்தியகால கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

கால்நடை வளத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக வட மாகாணத்தில் காணப்படும் பாரிய சாத்தியப்பாடுகளுள் கால்நடை வைத்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதன் மூலம் கால்நடை வளத் துறையின் சேவை வழங்கலை விருத்தி செய்யும் பொருட்டு இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்தச் செயற்திட்டத்தின் கீழ் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பருத்தித்துறை கால்நடை வைத்திய அலுவலகத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்காக 2025 ஆம் ஆண்டுக்கு 40.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டுமான நடவடிக்கைகளில் 90% இற்கும் அதிகமானவை தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களுக்காக 6.84 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

புகைப்பட இல. 01

*3.2. கோழிப்பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்குவதற்காக தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான மாரவில பண்ணையில், முட்டையிடும் கோழி இனவிருத்தி அலகின் கொள்ளளவை விரிவுபடுத்தும் நோக்கில் 5,000 தாய் விலங்குகளுக்காக மூடிய கோழி வளர்ப்பு இல்லத்தை நிறுவுவதற்காக 49.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் கேள்விக் கோரல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டு கட்டுமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*3.3. பால் உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*மடிவீக்க (Mastitis) நோய் பாலில் தரம் மற்றும் அளவு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு பிரதான நோய் ஆகும். இந்தச் செயற்திட்டம் மூலம் நோயைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் பண்ணை மட்டத்தில் பாலின் தரம் மற்றும் அளவு ஆகியவற்றை குறிப்பிடத்தக்க அளவில் விருத்தி செய்வதே இதன் நோக்கம் ஆகும். இதன் கீழ் மடிவீக்க நோயைக் கண்டறிவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான உள்ளீடுகளை வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்குத் தரமான பால் உற்பத்தி குறித்து விழிப்புணர்வு வழங்குவதற்காகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன மேற்கொள்ளப்படுகிறன. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி 35.00 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*இந்தச் செயற்திட்டம் 6 மாகாணங்கள் மற்றும் 13 மாவட்டங்களில் (யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, கொழும்பு மற்றும் களுத்துறை) செயல்படுத்தப்படுகிறது. மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் இந்தச் செயற்திட்டத்தை மாகாண நிதிகள் மூலம் செயல்படுத்தி வருகிறது, மேலும் வடக்கு, கிழக்கு, ஊவா, சப்ரகமுவ மற்றும் தெற்கு ஆகிய மாகாணங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீட்டை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*3.4 ஏற்றுமதிக்கு வசதியளிக்கும் செயற்திட்டம்*

*இதற்காக 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி 10.00 மில்லியன் ரூபாய் ஆகும். அலங்கார மீன்கள் ஏற்றுமதி மற்றும் கோழி இறைச்சி, முட்டை என்பவற்றின் ஏற்றுமதிக்குக் காணப்படும் அதிக சாத்தியப்பாடுகளை இனங்கண்டு, அந்த உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டிற்கு அதிகளவு வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக் கொடுப்பதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும். தற்போது மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிளுக்கு மேலதிகமாக புதிய ஏற்றுமதி மூலங்களை இனங்காண்பதுவும் ஏற்றுமதி அளவை உயர்த்துவதும் இதன் இலக்குகள் ஆகும்.*

*அதேபோன்று, தற்போதைய அரசாங்கத்தின் "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற கொள்கைப் பிரகடனத்தில் கால்நடை வளங்கள் மற்றும் நீர்வளங்கள் ஏற்றுமதி என்பவற்றின் மேம்பாடு குறித்துச் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, விலங்குகள் மற்றும் கால்நடை ஏற்றுமதியை அபிவிருத்தி செய்தல்/ ஊக்குவித்தல் மற்றும் ஏற்றுமதிச் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல் ஆகிய நோக்கத்துடன் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கடற்றொழில் மற்றும் நீர்வளத் திணைக்களம், இலங்கைச் சுங்கத் திணைக்களம், வெளிவிவகார அமைச்சு, கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு போன்ற சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்து, ஏற்றுமதிச் செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய கொள்கைகள், வழிகாட்டல்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி சாத்தியப்பாடுகள், கவனம் செலுத்தப்பட வேண்டிய குறைபாடுகள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து கவனம் செலுத்தி ஏற்றுமதியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையில் சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணுவதன் மூலம் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் அதன்பின்னர் ஏற்றுமதியாளர்கள் முன்னிலையில் கண்டறியப்படும் தேவைகளுக்கு ஏற்ப ஏற்றுமதி வசதியளிப்புத் திட்டத்தை வரிசைப்படுத்திக் கொள்வது இந்தச் செயற்திட்டத்தின்*

*மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து ஏற்றுமதி தொடர்பான பிரச்சினைகளை இனங்காண்பதற்காக ஏற்கனவே கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, அதற்கான குழுக்கள் நியமிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*புகைப்பட இலக்கம் 02*

*3.5. திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*2025 ஆம் ஆண்டில் இந்தச் செயற்திட்டத்திற்காக 5.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்கள் யாதெனில் அதிகாரிகள், விவசாயிகள் மற்றும் இளைஞர் தொழில்முனைவோரின் திறன் விருத்தி மற்றும் கால்நடை வளங்களுடன் தொடர்பான கொள்கை வகுத்தல் என்பனவாகும். மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி முடிவில் இதன் கீழ் 0.12 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. "Dairy Hub" நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பால் உற்பத்தித் திட்டம் குறித்துக் களத்தில் உள்ள செயற்பாட்டாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன், விஷேட சூழல் விலங்கு வளர்ப்புக்காகக் கழுதைகளை வளர்க்கும் செயற்திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. செயற்திட்டத்தின் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

*3.6. நிதிப் பொறுப்புகள் - 2024*

*2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட கால்நடை இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காகச் செலுத்த வேண்டிய 11.00 மில்லியன் ரூபாய் இந்த ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம்*

*4. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வளங்கள் அபிவிருத்தி (அபிவிருத்தி உதவி)*

*4.1. பால் அபிவிருத்தி செயற்திட்டம்*

*2025 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின்படி கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவு, பால் மாடுகளின் போஷணையை மேம்படுத்தும் நோக்கத்துடன் பால் மாடு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 72.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளதுடன், இந்தச் செயற்திட்டத்தின் கீழ் இரண்டு உப செயற்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.*

- *பால் மாடுகளின் போஷணையை அபிவிருத்தி செய்தல் (மேய்ச்சல் புல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்)*

*உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) உதவியின் கீழ் செயல்படுத்தப்பட்ட தரமான மேய்ச்சல் புல் வர்க்கங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட போஷணை முகாமைத்துவ நடைமுறைகள் மூலம் சிறு அளவிலான பால் உற்பத்தியை அதிகரித்தல் எனும் செயற்திட்டத்தின் பயனாளிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 22 பயனாளிகளுக்குத் தெளிப்பு நீர்ப்பாசனத் தொகுதிகள் மற்றும் தேவையான உபகரணங்கள், சைலேஜ் உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள் உள்ளிட்ட உள்ளீடுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு அரசாங்கம் வழங்கும் அதிகபட்சப் பங்களிப்பு 150,000.00 ரூபாய் ஆகும், இது குறித்த செயற்திட்டச் செலவில் 50% ஆகும். மீதமுள்ள 50% பங்களிப்பை பயனாளி ஏற்க வேண்டும். தற்போது மத்திய, தெற்கு, வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் 13 பயனாளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, அதற்காகச் சம்பந்தப்பட்ட மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களுக்கு 1.99 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு செயற்திட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. ஏனைய மாகாணங்களில் பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

- *பால் மாடு அபிவிருத்தி செயற்திட்டம் (மேய்ச்சல் புல் அபிவிருத்தி செயற்திட்டம்)*

*தரமான கால்நடை உணவுப் பொருட்களை இலகுவாக்குதல், பால் மாடுகளின் போஷணை மட்டத்தை உயர்த்துவதற்காக அபிவிருத்தி செய்யப்பட்ட மேய்ச்சல் புல் வர்க்கங்கள் பயிரிடுவதை ஊக்குவித்தல், வருமானம் ஈட்டும் நடவடிக்கையாக மேய்ச்சல் புல் மற்றும் சைலேஜ் உற்பத்தியை அபிவிருத்தி செய்தல் மற்றும் நீரை வினைத்திறனாகப் பயன்படுத்துவதை மேம்படுத்தும் பொருட்டு மேய்ச்சல் புல் வளர்ப்புக்குப் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றுக்காக இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 445 பயனாளிகளுக்கு நிலப் பண்படுத்தல், புல் செய்கையை நிறுவுதல், எல்லை வேலி அமைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*இந்தச் செயற்திட்டம் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதன் கீழ் ஒரு பயனாளிக்காக அரசாங்கம் வழங்கும் அதிகபட்சப் பங்களிப்பு 150,000.00 ரூபாய் ஆகும், இது குறித்த செயற்திட்டச் செலவில் 50% ஆகும். மீதமுள்ள 50% பங்களிப்பை பயனாளி ஏற்க வேண்டும். தற்போது வட மாகாணத்தில் 166 பயனாளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, 112 பயனாளிகளுக்கு உரியதாக வட மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு 17.136 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு செயற்திட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. ஏனைய மாகாணங்களில் பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*4.2. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*இந்தச் செயற்திட்டத்தின் கீழ், சுகாதார முறைகளுக்கு அமைவாகப் பேணப்படும் நிலைபேறான சிறிய அளவிலான முட்டையிடும் கோழி வளர்ப்பு அலகுகளை நிறுவுவதற்காக 10.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.*

*இதன் கீழ், கிராமிய சமூகத்தில் போஷணை நிலையை உயர்த்துதல் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை இலக்காகக் கொண்டு சிறிய அளவிலான முட்டையிடும் கோழி வளர்ப்பு அலகுகளை நிறுவ எதிர்பார்க்கப்படுகிறது. இதில், சுகாதார முறைகளைப் பேணி குஞ்சுகளைப் பராமரிப்பதன் மூலம் இந்தச் செயற்திட்டத்தை நிலைபேறாகப் பல வருடங்கள் பேணுவதற்காக ஒரு பயனாளிக்கு ஒரு மாத வயதுடைய 25 நாட்டுக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. இந்த 25 குஞ்சுகளில் தேவைக்கேற்ப அதிகபட்சமாக 3 சேவல் குஞ்சுகளை வழங்க முடியும். பயனாளியின் 50% பங்களிப்பின் கீழ் கூண்டு அமைத்தல், தீவனங்களை வழங்குதல் மற்றும் பராமரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த நிகழ்ச்சித் திட்டம் வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் செயல்படுத்தப்படுகிறது. தற்போது 9.86 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு மாகாணப் பிரதம செயலாளருக்கு விடுவிக்கப்பட்டு, கால்நடை வைத்திய அலுவலக மட்டத்தில் செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட மாகாணங்கள் ஏற்கனவே விலங்குகளை விநியோகிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளன.*

*புகைப்பட இலக்கம் 03*

*4.3. பன்றி வளர்ப்புத் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*சூழல் பிரச்சினைகளைக் குறைத்து, சூழலுக்கு இணக்கமான பன்றி வளர்ப்புப் பண்ணை அபிவிருத்திக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்கும் நோக்கத்துடன் இந்தச் செயற்திட்டம் 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டதுடன், 61 பன்றி வளர்ப்புப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக 12.60 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.*

*எனினும், இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 12.60 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு, ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல் வைரஸ் நோய் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள பன்றித் தொழிற் துறையை மேம்படுத்துவதற்கான தேசியச் செயலணிக் குழுவின் தீர்மானத்தின்படி கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது பரிசோதனைக் கருவிகள் கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*4.4. நிதிப் பிணைப்புகள் - 2024*

*2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட கால்நடை இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காகச் செலுத்த வேண்டிய 5.40 மில்லியன் ரூபாய் இந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி செலுத்தப்பட்டது.*

*5. ஆடு வளர்ப்பின் மூலம் வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டம்*

*2025 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின்படி கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவு, ஆட்டுப் பால் மற்றும் ஆட்டு இறைச்சியை மேலும் பிரபலமாக்கும் நோக்கத்துடன் ஆடு வளர்ப்பின் மூலம் வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் இரண்டு உப செயற்திட்டங்களைச் செயல்படுத்துகிறது.*

*அபிவிருத்தி உதவிகள் செயற்திட்டம்*

*இந்தச் செயற்திட்டத்திற்காக 100.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆடு வளர்ப்புப் பண்ணை அலகுகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 445 ஆட்டுப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள ஆட்டுப் பண்ணைகளுக்கு விலங்குகளை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டம் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இங்கு ஒரு பயனாளிக்காக அரசாங்கம் வழங்கும் அதிகபட்சப் பங்களிப்பின் கீழ் 10 விலங்குகளை (9 பெண் விலங்குகள் மற்றும் 1 ஆண் விலங்கு) கொள்வனவு செய்வதற்கு 300,000 ரூபாய் அல்லது 5 விலங்குகளை (4 பெண் விலங்குகள் மற்றும் 1 ஆண் விலங்கு) கொள்வனவு செய்வதற்கு 150,000 ரூபாய் வழங்கப்படுகிறது, இது சம்பந்தப்பட்ட செயற்திட்டச் செலவில் 50% ஆகும். மீதமுள்ள 50% பங்களிப்பை பயனாளி ஏற்க வேண்டும். தற்போது மேற்கு, மத்திய, தெற்கு மற்றும் வட மாகாணங்களில் 155 பயனாளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, அதற்காகச் சம்பந்தப்பட்ட மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களுக்கு 28.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு செயற்திட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.*

*புகைப்பட இலக்கம் 04*

*உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம்*

*இந்தச் செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 100.00 மில்லியன் ரூபாய் ஆகும். நாட்டிலுள்ள ஆட்டு இறைச்சித் தேவைக்கு பங்களிக்கும் நோக்குடன் இறைச்சி உற்பத்தியை இலக்காகக் கொண்டு போயர் ஆடுகளை அறிமுகப்படுத்துதல், போயர் ஆடுகள் வளர்ப்பதை அபிவிருத்தி செய்தல் மற்றும் போயர் ஆட்டுப் பண்ணைகளை ஆரம்பிப்பதற்காக விவசாயிகளுக்கு இனவிருத்திப் பொருட்களை வழங்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இந்தச் செயற்திட்டத்தின் கீழ் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் போபத்தலாவ பண்ணையில், ஆட்டு இனவிருத்திப் பண்ணையை நிறுவுவதற்காக 100 போயர் ஆடுகளை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கொள்முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*இதற்கு மேலதிகமாக, இனவிருத்திப் பண்ணைகள் மற்றும் இனவிருத்திப் பொருட்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல், பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் புல் செய்கையில் உற்பத்திச் செலவைக் குறைத்தல் ஆகியவற்றுக்காக வட மாகாணத்தில், வவுனியா, செக்கடிப்புலவுப் பிரதேச கால்நடை வளங்கள் பண்ணையில் நிறுவப்பட்டுள்ள மாகாண ஆட்டு இனவிருத்திப் பண்ணையை அபிவிருத்தி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம்*

*1. ஒருங்கிணைந்த இணைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் - பகுதி II (Inclusive Connectivity Development Project – ICDP)*

*உலக வங்கிக் கடனுதவியின் கீழ் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் செயற்திட்டத்தின் விவசாயத்துடன் தொடர்புடைய II ஆம் செயற்திட்டக் கூறின் பிரிவு கால்நடை வளங்கள் பிரிவால் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் நாட்டின் தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களில் "பால் விவசாயிகளை ஒழுங்கமைத்து வலுவூட்டுவதன் மூலம் அவர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் பாலின் பெறுமதிச் சங்கிலியை அபிவிருத்தி செய்தல்" ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.*

*இங்கு பால் பெறுமதிச் சங்கிலியை அபிவிருத்தி செய்வதற்கும் விநியோகச் சங்கிலியை அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான அடிப்படை உள்ளீடுகளான பண்ணைகளில் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்காக மூலோபாய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஒரு முறையான உற்பத்தித் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்காகப் புதிய தொழில்நுட்பம் மற்றும் உள்ளீடுகளை அறிமுகப்படுத்துதல், மாற்றுச் சக்தி மூலங்களாக சூரிய சக்தியைப் பயன்படுத்தி பாலைக் குளிரூட்டக்கூடிய உபகரணங்களை அறிமுகப்படுத்துதல், புல் பயிரிடுபவர்களை உருவாக்குதல் மற்றும் அவர்களை தொழில்முனைவோராக மாற்றுதல், மாலை நேரப் பால் சேகரிக்கும் வலையமைப்பை வலுப்படுத்துவதற்காகப் பால் குளிரூட்டும் வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மடிவீக்கம் உள்ளிட்ட பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் விரிவாக்கச் சேவைகளை முறைப்படுத்துதல் ஆகியவற்றுக்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டின் அளவு 3,000.00 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*இந்தச் செயற்திட்டத்தின் பணிகள் 2025 மே மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2025.06.26 ஆம் திகதி கிடைத்தது. இதுவரை பங்குதாரர்களுடனான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. களத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தப் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிப்பதற்குரிய மாதிரிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.*

## காலநடை வளங்கள் விடயப் பரப்புக்குரிய நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

### *01. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்*

*1.1. அறிமுகம்*

*1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் இலங்கையின் கால்நடை வளங்கள் அபிவிருத்தி குறித்துப் பொறுப்பேற்கும் பிரதான அரச நிறுவனம் ஆகும். இது கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இயங்குகிறது. மேலும், இந்தத் திணைக்களம் நாட்டிற்குள் விலங்கு நோய் பரவுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், கால்நடை வளங்கள் துறை தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள், தொழில்நுட்பத் தலைமைத்துவம் வழங்குதல் மற்றும் கால்நடை இனவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் உதவிச் சேவைகளை வழங்குவது தொடர்பாக சட்டரீதியான அதிகாரம் வழங்கப்பட்ட தேசிய நிறுவனம் ஆகும். நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் ஏனைய பிரதான பணிகளில்; கால்நடை வளர்ப்பு குறித்துப் பயிற்றுநர்களுக்குப் பயிற்சி அளித்தல், அந்தத் தொழிற்துறையை விருத்தி செய்வது தொடர்பான செயற்திட்டங்களைத் தயாரித்தல், பொருளாதார மதிப்பீடுகள் மற்றும் ஏனைய விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியனவும் உள்ளடங்கும். கால்நடை வளங்கள் துறையின் அபிவிருத்திக்கு உதவி வழங்கும் பொருட்டு இந்தத் திணைக்களம் உரிய சட்டங்களை இயற்றிச் செயல்படுத்துகிறது. மாகாண சபைகள் நிறுவப்பட்டதன் பின்னர், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கள மட்டத்திலான பணிகள் ஒன்பது (09) மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களுக்கு ஒப்படைக்கப்பட்டன.*

*தேசிய கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தொழில்நுட்பத் தலைமைத்துவம், நிபுணதத்துவ சேவைகள் மற்றும் உதவிச் சேவைகள் ஆகியவற்றை மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களுக்கு வழங்குவதன் மூலம் கால்நடை வளங்கள் துறைக்குப் பாரிய சேவையை வழங்குகிறது. கால்நடை வைத்திய அதிகாரிகளால் வழிநடத்தப்படும் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு அலகுகள் ஆகும். மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களின் கீழ் செயல்படும் நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் நிறுவப்பட்டுள்ள 337 பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்கள் மூலம் கள மட்டத்தில் இருந்து அனைத்துக் கால்நடை வளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.*

*1.2. 2026 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்குகள்*

| தொ/ இல | பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) |
|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 753.60 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 1,040.40 |

*1.3. 2026 ஆம் ஆண்டிற்கான பௌதீக இலக்குகள் (நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| 1 | கால்நடை இனவிருத்திச் செயற்திட்டம் | | | 200.00 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| | செயற்கை கருவூட்டல் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | உற்பத்தி செய்யப்பட்ட மாட்டு விந்தணுப் குப்பிகளின் எண்ணிக்கை | 220,000 | |
| | | இறக்குமதி செய்யப்பட்ட மாட்டு விந்தணுப் குப்பிகளின் எண்ணிக்கை | 2,000 | |
| | | குட்டி ஈனுதல்களின் எண்ணிக்கை | 100,000 | |
| | செயற்கை கருவூட்டல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 18 | |
| | கால்நடை உணவு வளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | | | |
| | இம்புலந்தண்ட புல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் பயிற்சி மையத்தில் 10 ஏக்கர் பரப்பளவில் விருத்தி செய்யப்பட்ட புல் மற்றும் அவரைக் குடும்ப வர்க்கங்களை நிறுவுதல் | நிறுவப்பட்ட ஏக்கர் அளவு | 10 ஏக்கர் | |
| | புல் அபிவிருத்தி தொழில்முனைவோரைப் பதிவு செய்தல் | பதிவு செய்யப்பட்ட புல் அபிவிருத்தி தொழில்முனைவோரின் எண்ணிக்கை | 50 | |
| | அபிவிருத்தி செய்யப்பட்ட புல் வகைகளின் நடுகைப் பொருட்களை வெளியிடுவதற்கு உதவி வழங்கல் | வெளியிடப்பட்ட நடுகைப் பொருட்களின் எண்ணிக்கை | கேள்விக்கு ஏற்றவாறு | |
| 2. | விலங்குகளின் தொற்றும் நோய்களைத் தடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் | தடுப்பூசி போடப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை<br>-<br>- | கால்வாய் - 360,000<br>கருங்காலி - 81,000<br>தொண்டையடைப்பான் - 112,500 | 20.00 |
| 3 | கோமாரி நோய் தடுப்பூசியை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல் | உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பூசி அளவுகளின் எண்ணிக்கை | 300,000 | 40.00 |
| 4 | மடிவீக்கக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | உற்பத்தி செய்யப்பட்ட மடிவீக்க மருந்துகளின் எண்ணிக்கை | 30,000 | 20.00 |
| 5 | உயர் தர கால்நடை தடுப்பூசிகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல் | உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பூசி அளவுகளின் எண்ணிக்கை | | |
| | | மாட்டு இரத்தக் கசிவு நோய் | 170,000 | 20.00 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| | | (HS) | | |
| | | தொற்றும் நிணநீர் நோய் (BQ) | 130,000 | |
| | | இராணிக்கெட் நோய் (ND) | 8 மில்லியன் 8 | |
| | | கோழிக் காலரா, | கேள்விக்கு ஏற்றவாறு | |
| | | பன்றி பாஸ்ச்சுரெல்லா | | |
| 6 | கோழிச் சுகாதார முகாமைத்துவம் மூலம் கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதிக்கு உதவி வழங்குதல் | பறவைக் காய்ச்சல் நோயைக் கண்காணிப்பதற்காகப் பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | 32,250 | 10.00 |
| | | சால்மோனெல்லா நோயைக் கட்டுப்படுத்துவதற்காகப் பரிசோதிக்கப்பட்ட இனவிருத்தி மற்றும் குஞ்சு பொரிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை | 286 | |
| | | கண்காணிக்கப்படும் ஏற்றுமதி மையங்களின் எண்ணிக்கை | 10 | |
| 7 | கால்நடை வளங்கள் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் | செயல்படுத்தப்பட்ட ஆராய்ச்சிக் செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 23 | 100.00 |
| | | ஆய்வகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | 65,000 | |
| 8 | கால்நடை வைத்திய அலுவலகங்களில் சேவை வழங்கல் முறைமையை அபிவிருத்தி செய்தல் (பிரதான அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்களில் டிஜிட்டல் மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்தல்) | உபகரணங்கள் கொள்வனவு செய்தல் சதவீதமாக | 100% | 20.00 |
| 9 | விலங்குகளை இனங்காணும் நிகழ்ச்சித் திட்டம் | காதுக் குறியீடு இடப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை | 100,000 | 10.00 |
| 10 | விலங்குத் தனிமைப்படுத்தல் அலகுகளை விரிவுபடுத்தல் மற்றும் நவீனமயமாக்கல் | திட்டமிடப்பட்ட கட்டுமானங்களின் சதவீதமாக | 100% | 5.00 |
| 11 | வனவிலங்கு நோய் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம் | மேற்கொள்ளப்படும் பிரேதப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 140 | 2.00 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| 12 | கால்நடை உணவு மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்தல் | பகுப்பாய்வு செய்யப்பட்ட கால்நடை உணவு மாதிரிகளின் எண்ணிக்கை | 5,000 | 30.00 |
| 13 | கால்நடை வளர்ப்பு டிப்ளோமாதாரிகளை உருவாக்கும் திறனை வலுப்படுத்துதல் | சீப்புகுளம் மற்றும் கரந்துகொல்ல கால்நடை வளர்ப்புப் பாடசாலைகளில் இருந்து உருவாகும் கால்நடை வளங்கள் தொழில்நுட்பம் குறித்த உயர் தேசிய டிப்ளோமா மாணவர்களின் எண்ணிக்கை | 50 | 40.00 |
| 14 | கால்நடை ஆய்வு மையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களைக் கண்டறிதல் மற்றும் கண்காணிக்கும் வசதிகளை அபிவிருத்தி செய்தல் | சேவை வழங்கப்பட்ட பண்ணைகளின் எண்ணிக்கை | 70 | 2.00 |
| 15 | குண்டசாலை செயற்கை கருவூட்டல் மையத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் தரமான மாட்டு விந்தணுப் குப்பிகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை அதிகரிக்கும் செயற்திட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அதிக உற்பத்தித் திறன் கொண்ட, இனத்தால் உயர்ந்த காளைகளின் எண்ணிக்கை | 15 | 150.00 |
| 16. 1 | தரப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | | | 20.00 |
| | கால்நடை உணவுகளின் தரம் மற்றும் தரநிலைகளை உறுதிப்படுத்துதல் | பதிவு செய்யப்பட்ட உற்பத்திகளின் எண்ணிக்கை | 4,000 | |
| | கால்நடை உணவு மற்றும் கால்நடை உணவுகளில் உள்ள பொருட்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தை உதவி வழங்கல் | முன் அனுமதி வழங்கப்பட்ட அங்கீகாரங்களின் எண்ணிக்கை | 6,500 | |
| | ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுச் செயல்முறைகளுடன் கால்நடை மருத்துவப் பொருட்கள் மற்றும் உயிரியல் உற்பத்திகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பதிவு/அனுமதி வழங்குதல் | பதிவுகள்/புதுப்பித்தல்களின் எண்ணிக்கை | கேள்விக்கு ஏற்றவாறு | |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்த செலவு (மில். ரூபா.) |
|---|---|---|---|---|
| | கோழி முன்னோடி மற்றும் பெற்றோர் தலைமுறை இனவிருத்திப் பண்ணைகளை நிறுவுவது தொடர்பான ஆரம்பப் பணிகள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களின் கண்காணிப்புப் பதிவு | பதிவுகள்/புதுப்பித்தல்களின் எண்ணிக்கை | 240 | |
| 16. 2 | சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்/கணக்கெடுப்புகளின் எண்ணிக்கை | 04 | |
| | | வெளியிடப்பட்ட பிரசுரங்களின் எண்ணிக்கை | 07 | |
| 16. 3 | கால்நடை வளங்களைப் பிரபலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் (பிரதான அலுவலகம் மற்றும் மாகாணங்களுக்காக) | உற்பத்தி செய்யப்பட்ட தொலைக்காட்சி/வானொலி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | வானொலி நிகழ்ச்சிகள். - 90 தொலைக் காட்சி மற்றும் வீடியோ காணொளிகள் - 175 | |
| | | நடத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை | கேள்விக்கு ஏற்றவாறு | |
| 16. 4 | புத்தகங்கள் மற்றும் பிரசுரங்கள் நிகழ்ச்சித் திட்டம் | நூலகத்திற்காகப் புத்தகங்கள் கொள்வனவு செய்தல் | தேவைக்கு ஏற்றவாறு | |

*1.4. 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம் (2025.09.30 ஆம் திகதியளவில்)*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 717.00 | 204.22 | 29 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 903.00 | 677.54 | 75 |
| | | | | |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | |
| 1 | கால்நடை இனவிருத்திச் செயற்திட்டம் | 190.00 | 82.63 | 44 |
| 2 | கால்நடை வளங்கள் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் | 85.00 | 25.20 | 30 |
| 3 | உயர் தர கால்நடை தடுப்பூசிகளை | 24.00 | 5.91 | 25 |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டுக்கு வரவுசெலவு மூலம் ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபா) | 30.09.2025 வரை செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் சதவீதத்தில் (%) |
|---|---|---|---|---|
| | உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல் | | | |
| 4 | கால் மற்றும் வாய் நோய்/ கோமாரி நோய் தடுப்பூசியை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல் | 45.00 | 2.76 | 06 |
| 5 | விலங்குகளின் தொற்றும் நோய்களைத் தடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 41.00 | 32.90 | 80 |
| 6 | மடிவீக்கக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 20.00 | 8.36 | 42 |
| 7 | கால்நடை வளர்ப்பு டிப்ளோமாதாரிகளை உருவாக்கும் திறனை வலுப்படுத்துதல் | 20.00 | 9.59 | 48 |
| 8 | விலங்குகளை இனங்காணும் நிகழ்ச்சித் திட்டம் | 20.00 | 0.08 | 0.40 |
| 9 | வனவிலங்கு நோய் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 2.00 | 0.83 | 42 |
| 10 | கால்நடை ஆய்வு மையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களைக் கண்டறிதல் மற்றும் கண்காணிக்கும் வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 5.00 | 0.76 | 15 |
| 11 | தரப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம், சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்,<br>கால்நடை வளங்களைப் பிரபலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம், புத்தகங்கள் மற்றும் பிரசுரங்கள் நிகழ்ச்சித் திட்டம் | 22.00 | 2.94 | 13 |
| 12 | உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை எளிதாக்குதல் மற்றும் கால்நடை உணவு மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்தல் | 40.00 | 0.87 | 02 |
| 13 | கால்நடை வைத்திய அலுவலகங்களில் சேவை வழங்கல் முறைமையை அபிவிருத்தி செய்தல் | 15.00 | 3.98 | 27 |
| 14 | கோழிச் சுகாதார முகாமைத்துவம் மூலம் கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதிக்கு உதவி வழங்குதல் | 10.00 | 2.11 | 21 |
| 15 | விலங்குத் தனிமைப்படுத்தல் அலகுகளை விரிவுபடுத்தல் மற்றும் நவீனமயமாக்கல் | 5.00 | 0.23 | 05 |
| 16 | குண்டசாலை செயற்கை கருவூட்டல் மையத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் தரமான மாட்டு விந்தணுப் குப்பிகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை அதிகரிக்கும் செயற்திட்டம் | 100.00 | 2.22 | 02 |

*1.5. 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் (2025.09.30 ஆம் திகதியளவில்)*

*1.5.1. மனித வள அபிவிருத்திப் பிரிவு*

*1.5.1.1 கால்நடை வளர்ப்பு டிப்ளோமாதாரிகளை உருவாக்கும் திறனை வலுப்படுத்துதல்*

*கரந்துகொல்ல கால்நடை வளர்ப்புப் பாடசாலையில் கால்நடை வளங்கள் தொழில்நுட்பம் குறித்த உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியை (NVQ 6) 46 மாணவர்கள் தற்போது கற்று வருகின்றனர். அந்த மாணவர்களின் பரீட்சைகளை நடத்துதல் மற்றும் பண்ணை புனரமைப்புக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் பணிகள் சுமார் 70% நிறைவடைந்துள்ளன. சீப்புகுளம் கால்நடை வளர்ப்புப் பாடசாலையில் 25 மாணவர்கள் தங்கிப் பயில்வதுடன் மொத்தம் 45 மாணவர்கள் (NVQ 04) பாடநெறியைக் கற்கின்றனர். அத்துடன், சீப்புகுளம் பாடசாலையின் புனரமைப்புப் பணிகள் மிஹிந்தலை பிரதேச செயலகம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த பாடநெறிகளைக் கற்கும் மாணவர்கள் பாடநெறியின் விடயங்களுக்கு இணையாகப் பிரயோக நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.*

*புகைப்பட இலக்கம் 05 - 07*

*1.5.1.2 பயிற்சி கொள்ளளவை அதிகரித்தல்*

*கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் 37 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன, மேலும் திறன் தடைப் பரீட்சை I / II / III இன் கீழ் 06 பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன. கால்நடை ஆராய்ச்சி அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான 01 பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.*

*1.5.1.3 கால்நடை வளங்களைப் பிரபலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்*

*45 வானொலிப் பிரசார நிகழ்ச்சிகள் மற்றும் 108 தொலைக்காட்சி மற்றும் காணொளி நிகழ்ச்சிகளை வழங்க முடிந்துள்ளது. கால்நடை வளங்களைப் பிரபலப்படுத்தும் ஊடக நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக 09 புத்தகங்கள் அச்சிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*1.5.1.4 புத்தகங்கள் மற்றும் பிரசுரங்கள்*

*Dairy Hub செயற்திட்டத்திற்கு இணையாகப் பிரசார நடவடிக்கைகளுக்காக 5,000 துண்டுப் பிரசுரங்கள் மற்றும் 10,000 புத்தகங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன.*

*1.5.2. கால்நடை கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டப் பிரிவு*

*1.5.2.1 விலங்குகளை இனங்காணும் நிகழ்ச்சித் திட்டம்*

*இந்தச் செயற்திட்டத்தின் கீழ் கள விரிவாக்க அதிகாரிகள் பதிவு செய்யப்பட்ட பண்ணைகளைக் கண்காணித்து, அவற்றில் உள்ள விலங்குகளுக்குக் காதுக் குறியீடு இடுதலை மேற்கொள்கின்றனர். 2025.08.30 ஆம் திகதி வரை 14,618 விலங்குகளுக்குக் காதுக் குறியீடுகள் பொருத்தப்பட்டுள்ளதுடன் இதுவரை விநியோகிக்கப்பட்ட காதுக் குறியீடுகளின் எண்ணிக்கை 22,076 ஆகும். அத்துடன், காதுக் குறியீடுகள், மார்க்கர் பேனாக்கள், குத்தும் ஊசிகள் ஆகியவற்றுக்கான பெறுகை நடவடிக்கைகள் பெறுகைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், 7.0 மில்லியன் ரூபாய் பெறுமதியான இணைப்பு ஆவணங்களை அச்சிடும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*1.5.2.2 விலங்குத் தனிமைப்படுத்தல் அலகுகளை விரிவுபடுத்தல் மற்றும் நவீனமயமாக்கல்*

*இந்தச் செயற்திட்டத்திற்காக 5.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், காணி உரிமை குறித்த பிரச்சினை காரணமாக கொழும்பு விலங்குத் தனிமைப்படுத்தல் அலுவலகத்தின் பழுதுபார்க்கும் பணி தாமதமாகியுள்ளது. அத்துடன், அங்குள்ள எரியூட்டி (Incinerator) ஒரு தொல்பொருள் நினைவுச் சின்னம் என்பதால், அந்த விதிமுறைகளின் கீழ் இந்த வேலையைச் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*1.5.2.3.* தரப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்

"தரப் பாதுகாப்பு மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக அடையாளம் காணப்பட்ட இலக்குகளான கால்நடை உணவு சம்பந்தப்பட்ட பணிகள், கால்நடை மருத்துவப் பொருள் அதிகாரசபையின் பணிகள், விலங்குகள் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான முன்கூட்டிய அனுமதி வழங்குதல் மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் ஆகிய பணிகளுக்கான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஒட்டுமொத்த முன்னேற்றம் சுமார் *75%* ஆகும்.

*1.5.3.* கால்நடை சுகாதாரப் பிரிவு

*1.5.3.1* விலங்குகளின் தொற்றும் நோய்களைத் தடுக்கும் நிகழ்ச்சித் திட்டம்

இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி *35* மில்லியன் ரூபாய் ஆகும். இதன் கீழ் பால் மாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என அடையாளம் காணப்பட்ட *05* பிரதான நோய்களுக்கான தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டங்கள் நோய் அடிப்படையில் பின்வரும் பிரதேசங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

| இல | தடுப்பூசி போடும் நோய் | செயல்படுத்தப்படும் பிரதேசங்கள் | விநியோகிக்கப்பட்ட தடுப்பூசி குப்பிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *1* | கோமாரி நோய் *(FMD)* | நாடு முழுவதும் | *212,160* |
| *2* | மாட்டு இரத்தக் கசிவு நோய் *(HS)* | வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் | *125,040* |
| *3* | தொற்றும் நிணநீர் நோய் *(BQ)* | வடக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் | *92,037* |
| *4* | தோல் கட்டி நோய் *(LSD)* | வட மத்திய, ஊவா, மத்திய, வடமேல், சப்ரகமுவ, வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்கள் | *36,000* |
| *5* | புருசெல்லோசிஸ் *(Bovine Brucellosis)* | அம்பாறை, அநுராதபுரம், மட்டக்களப்பு, புத்தளம், மொனராகலை, வவுனியா, நுவரெலியா, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, பதுளை, திருகோணமலை, கிளிநொச்சி, குருநாகல் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் | *6,700* |

குறித்த பிரதேசங்களுக்கு விநியோகிக்கப்பட்ட தடுப்பூசி குப்பிகளின் எண்ணிக்கை இலக்கு வைக்கப்பட்ட அளவில் *85%* ஆகும், மேலும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி முடிவில் அந்த அளவில் *78%* பயன்படுத்தப்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கோமாரி நோய் பதிவாவது *33%* ஆல் குறைந்துள்ளதுடன், தொற்றும் நிணநீர் நோய் நிலைமை முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி முடிவில் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட முழு நிதியும் செலவிடப்பட்டுள்ளதுடன், *75%* பௌதிக முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

*1.5.3.2* வனவிலங்கு நோய் கண்காணிப்பு மூலம் மனிதர்கள் மற்றும் பண்ணை விலங்குகளுக்கு வனவிலங்குகள் மூலம் நோய் பரவுவதைக் குறைக்கும் செயற்திட்டம்

இந்த அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக *2* மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், வனவிலங்குகள் மூலம் கால்நடை வளங்கள் துறைக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நோய்களை இனங்காணுதல் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டம் அம்பாறை, தம்புள்ளை, அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை, ஹோமாகம, குண்டசாலை, மாங்குளம், பொலன்னறுவை மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் செயல்படுத்தப்படுகிறது. இந்த

செயற்திட்டத்தின் கீழ் தற்போது கால்நடை ஆய்வு மையங்களில் 32 பிரேதப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, மேலும் பன்றித் தொழிலுக்கு முக்கியமான ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல் நோய் வனப்பகுதி பன்றிகளிலும் உள்ளது என இனங்காணப்பட்டுள்ளது. தற்போது செயற்திட்டத்திற்காக 0.85 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன், 26% பௌதிக முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

1.5.3.3 கோழி மற்றும் மீன் நோய்களைக் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

இந்த அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மீன் ஏற்றுமதி நடவடிக்கைகளின்போது தேவையான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு, அதற்கான பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் மீன் ஏற்றுமதிப் பண்ணைகளைப் பதிவு செய்வதற்காக உயிரியல் பாதுகாப்பு முறைகளைச் செயல்படுத்தல் மற்றும் பதிவு செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குதல் என்பன இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

மீன் ஏற்றுமதிப் பண்ணைகளின் இருப்பிடத்தின் அடிப்படையில் இந்தச் செயற்திட்டம் மேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலும், மாத்தறை, கேகாலை, சிலாபம், குருநாகல், திருகோணமலை, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. உலக விலங்குச் சுகாதார அமைப்புடன் இணைந்து PVS Aquatic Animal Health Mission எனும் நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டது, இதன் மூலம் இலங்கையின் மீன் வளர்ப்புத் தொழிற்துறை மற்றும் மீன் ஏற்றுமதித் துறையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டிற்குள் ஏற்பட்ட ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல் தொற்றுநோய் நிலைமை காரணமாக மேற்கொள்ளப்பட்ட விசேட தீர்மானத்தின்படி அந்த நோய்க் கட்டுப்படுத்தலுக்குத் தேவையான உள்ளீடுகளை இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அதன்படி அந்த உள்ளீடுகளை நாடு முழுவதும் உள்ள அடையாளம் காணப்பட்ட பண்ணைகளுக்கு விநியோகிக்கும் பணிகள் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டம் மூலம் மீன் வளர்ப்புத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள 70 ஏற்றுமதி மீன் பண்ணைகளின் தரத்தை உயர்த்த முடிந்துள்ளது. இந்தச் செயற்திட்டத்திற்காக தற்போது 0.7 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன், 94% பௌதிக முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

1.5.3.4 கோழி நோய் முகாமைத்துவம் மூலம் கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதிக்கான வசதிகளை அபிவிருத்தி செய்தல்

இந்த அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 10 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், நாடு முழுவதும் பறவைக் காய்ச்சல், ரெனிக்கெட் மற்றும் சால்மோனெல்லா ஆகிய நோய்க் கட்டுப்பாடுகளை இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி, இனவிருத்திப் பண்ணைகள், குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மற்றும் முட்டை ஏற்றுமதிப் பண்ணைகளில் உயிரியல் பாதுகாப்பு முறைகள் கண்காணிக்கப்படுவதுடன், வருடாந்தப் பதிவுக்கான பரிந்துரைகளும் வழங்கப்படுகின்றன. வர்த்தக ரீதியான முட்டை ஏற்றுமதிக் கோழிப் பண்ணைகளுக்காகப் பொருளாதார ரீதியில் முக்கியமான கோழி நோய்களைப் பரிசோதித்து, முட்டை ஏற்றுமதிக்குத் தேவையான சுகாதாரச் சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை மேம்படுத்த முடிந்துள்ளது.

ரெனிக்கெட் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அதற்கான தடுப்பூசிகள் நாடு முழுவதும் கால்நடை வைத்திய அலுவலகங்கள் மற்றும் கால்நடை ஆய்வு மையங்கள் என்பவற்றுக்கு ஊடாக விநியோகம் செய்யப்படுவதுடன், தற்போது 3,976,800 ரெனிக்கெட் தடுப்பூசி குப்பிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த தடுப்பூசிகள் சிறிய அளவிலான பண்ணைகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன, இதன் மூலம் தொற்றுநோய் நிலைமை ஏற்படாத அளவுக்கு நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இனவிருத்திப் பண்ணைகள் மற்றும் குஞ்சு பொரிக்கும் நிலையங்களில் சால்மோனெல்லா நோய்க் கட்டுப்பாட்டை மேற்கொள்வதன் மூலம் வர்த்தக ரீதியான பண்ணைகளுக்கு அந்த நோய் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பறவைக் காய்ச்சல் கண்காணிப்பு மூலம் பறவைக் காய்ச்சல் இல்லாத நாட்டைப் பேண முடிந்துள்ளது.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை 2 மில்லியன் ரூபாய் ஆகும், மேலும் பௌதிக முன்னேற்றம் 52% ஆகும்.

1.5.4. கால்நடை வளங்கள் திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பிரிவு

1.5.4.1 சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

இதன் கீழ் கால்நடை வளங்கள் துறையின் உற்பத்தித் தரவுகள், விலங்குத் தொகை, பதிவு செய்யப்பட்ட பண்ணைகளின் எண்ணிக்கை ஆகியன மாதாந்தம் மற்றும் காலாண்டு அடிப்படையில் வழங்கப்படுவதுடன், கால்நடை வைத்திய அலுவலகங்களின் மனித மற்றும் பௌதிக வளங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. அந்தத் தகவல்களின் அடிப்படையில் கால்நடை புள்ளிவிவரச் செய்திமடல் (Livestock Statistical Bulletin), கால்நடை கண்ணோட்டம் (Livestock Outlook), வருடாந்த அறிக்கை போன்ற பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன. கால்நடை வளங்கள் துறையின் தொழில்முனைவோர் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கோழி வளர்ப்பு முன்னறிவிப்பு (Poultry forecast), கோழி வளர்ப்புச் செய்திமடல் (Poultry Bulletin), பால் உற்பத்திச் செய்திமடல் (Dairy Bulletin) என்பன வெளியிடப்படுகின்றன. தற்போது கோழி வளர்ப்பு முன்னறிவிப்பு, கால்நடை புள்ளிவிவரச் செய்திமடல், கால்நடை கண்ணோட்டம் மற்றும் வருடாந்தச் செயற்பாட்டு அறிக்கை ஆகிய பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், பண்ணைப் பதிவு நிகழ்ச்சித் திட்டத்திற்காகச் உரிய படிவங்கள் மாகாண மட்டத்தில் வெளியிடுவதற்காக அந்தப் படிவங்கள் மற்றும் பதிவேட்டுப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு 09 மாகாணங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி முடிவில் பதிவு செய்யப்பட்ட மொத்தப் பண்ணைகளின் எண்ணிக்கை 13,307 ஆகும். இந்த பிரிவுக்குக் கால்நடை வைத்திய அலுவலகங்கள் மூலம் கிடைக்கும் தரவுகளின் தரத்தை உயர்த்துவதற்காக தற்போது நாடு முழுவதும் 09 மாகாணங்களையும் உள்ளடக்கிய பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படுகின்றன.

1.5.4.2 கால்நடை வைத்திய அலுவலகங்களின் சேவை வழங்கல் முறைமைகளை விருத்தி செய்தல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு செலவிடும் காலத்தைக் குறைப்பதற்கும் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள சமூகத்திற்கான செயல்முறைகளை இலகுபடுத்துவதற்கும், 2023 முதல் விலங்குகள் மற்றும் விலங்குப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வலைப்பின்னல் உருவாக்கம் என்பவற்றுக்காக VRRAS செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கால்நடை கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டப் பிரிவு, கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் விலங்குத் தனிமைப்படுத்தல் மையங்களின் பணிகள் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வலைப்பின்னலாக்கல் செய்யப்படும்.

அதன் அபிவிருத்திப் பணிகளுக்காக அரச பெறுகை செயல்முறை மூலம் வெளிச் சேவைகள் பெறப்படுகின்றன, மேலும் இந்தச் செயற்திட்டம் கால்நடை வளங்கள் திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பிரிவால் செயல்படுத்தப்படுகிறது. கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் உப-முறைமைகளுக்கு ஏற்ற பல்வேறு வகையான மொடியுல்கள் உள்ளதுடன் அவை ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்டு பயனர் ஏற்புச் சோதனைக்கும் (User Acceptance Test) உட்படுத்தப்பட்டுள்ளன. கால்நடை கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டப் பிரிவு மற்றும் தனிமைப்படுத்தல் அலுவலகங்களுக்கு உரிய உப-முறைமைகள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன் இந்த வருடத்தில் முழுமையான முறைமை செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*1.5.5. கால்நடை ஆராய்ச்சி நிறுவனம்*

*1.5.5.1 உயர் தர கால்நடை தடுப்பூசிகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல்*

இந்தச் செயற்திட்டத்தின் மூலம் உயர் தர கால்நடை தடுப்பூசி வகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி நடவடிக்கை செய்வது மேலும் விரிவுபடுத்தப்படுகிறது. அதற்கு அமைவாக, இந்தச் செயற்திட்டத்தின் கீழ் மாட்டு இரத்தக் கசிவு நோய், தொற்றும் நிணநீர் நோய் மற்றும் ரெனிக்கெட் நோய்களுக்கான தடுப்பூசி வகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

| தடுப்பூசி வகை | வருடாந்த இலக்கு | 2025.09.30 ஆம் திகதியளவில் அளவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி குப்பிகளின் அளவு |
|---|---|---|
| தொண்டையடைப்பான் (OAV) தடுப்பூசி | 125,000 | 125,040 |
| தொண்டையடைப்பான் (APV) தடுப்பூசி | 20,040 | 20,040 |
| கருங்காற் நோய் (BQ ) தடுப்பூசி | 90,000 | 86,757 |
| புருசெல்லோசிஸ் (Brucella S190 தடுப்பூசி | 10,000 | 7,500 |
| ரெனிகட் (Primary) தடுப்பூசி | 2,874,000 | 3,000,800 |
| ரெனிகட் (Secondary) தடுப்பூசி | 2,521,000 | 2,148,600 |
| தனியார் நிறுவனங்களுக்கு கேள்விக்கு ஏற்றவாறு தடுப்பூசி வகைகள் உற்பத்தி செய்து வினியோகிக்கப்படும். | | |
| கோழி காலரா (FC) தடுப்பூசி | 400,000 கேள்விக்கு ஏற்றவாறு | 235,440 |
| பன்றிகளின் பாஸ்ச்சுரெல்லா (SP) தடுப்பூசி | 3,000 | கேள்விக்கு ஏற்றவாறு |
| ரெனிகட் (primary) தடுப்பூசி | 1,500,000 | 2,894,600 |

*1.5.5.2 கால்நடை வளங்கள் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம்*

இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 23 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்படுகின்றன. கேள்விக்கு ஏற்றவாறு மாதிரிப் பரிசோதனை மற்றும் உயிரியல் உற்பத்திகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

| நடவடிக்கை | வருடாந்த இலக்கு | 2025.09.30 அன்றைய முன்னேற்றம் |
|---|---|---|
| உயிரியல் உற்பத்திகள் | | |
| பகுப்பாய்வு அறிக்கைகள் | தேவைக்கேற்ப | 47,691 |
| பரிசோதனை அறிக்கைகள் | | 2,039 |
| நோய் கண்காணிப்பு அறிக்கைகள் | | 1,464 |
| மடிவீக்கத்தைக் கண்டறிவதற்கான CMT வினையாக்கி (CMT reagent) | | 17 லீற்றர் |
| புல்லோரம் பிறபொருளெதிரி அளவுகள் | | 101,000 |
| RBPT பிறபொருளெதிரி அளவுகள் | | 7,700 |
| காம்பு நனைப்பு கரைசல் (Teat dip solution) | | 46.765 லீற்றர் |

*1.5.5.3 கோமாரி நோய் தடுப்பூசியை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல்*

இந்தச் செயற்திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே கோமாரி நோய் தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் பணிமேற்கொள்ளப்படுகிறது. 2025 ஆம் ஆண்டிற்காக 450,000 தடுப்பூசி அளவுகளைஉற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், 208,860 தடுப்பூசி அளவுகள் திணைக்களத்தின்

*கால்நடை சுகாதாரப் பிரிவுக்கு வழங்கப்பட்டன. அண்ணளவாக 100,000 இற்குப் போதுமான கோமாரி நோய் பிறபொருளெதிரி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.*

*1.5.5.4 மடிவீக்க நோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்*

*இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 30,000 மடிவீக்க தடுப்பூசிகளைத் உற்பத்தி செய்வதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் 26,662 மடிவீக்க தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், 24,501 களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.*

## *02. மில்கோ (தனியார்) லிமிடெட்*

*2.1. அறிமுகம்*

*மில்கோ நிறுவனம் பிரதானமாக 03 துறைகள் ஊடாகத் தனது செயற்பாட்டுச் செயல்முறையை முன்னெடுத்து வருகிறது:*

i.) *உள்நாட்டுப் பால் விவசாயிகளின் பால் அறுவடைகளைச் சேகரித்தல்*

ii.) *பால் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளல்*

iii.) *மேற்படி உற்பத்திகளை "ஹைலண்ட்" வர்த்தகப் பெயரின் கீழ் நாடு முழுவதும் விநியோகித்தல்*

*2.2. 2026 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்குகள்*

| *தொ/ இல* | *பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்* | *மதிப்பிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்)* |
|---|---|---|
| *1* | *மூலதனச் செலவுகள்* | *1,100.0* |
| *2* | *மீண்டுவரும் செலவுகள்* | *25,933.0* |

*2.3.* **2026** *ஆம் ஆண்டிற்கான பௌதிக இலக்குகள் (செயல்படுத்த எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)**

| *தொ/ இல* | *நிகழ்ச்சித் திட்டம்* | *அளவீட்டு அலகு* | *இலக்கு* | *மொத்தச் செலவு மற்றும் நிதி மூலம் (மில்லியன் ரூபாய்)* |
|---|---|---|---|---|
| *1* | *பால் பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி* | | | *உலக வங்கி உதவி மற்றும் 25% மில்கோ நிதியுதவி* |
| | *10 லீற்றர் பால் கொள்கலன்கள்* | *அலகுகளின் எண்ணிக்கை* | *2,141* | |
| | *20 லீற்றர் பால் கொள்கலன்கள்* | | *1,236* | |
| | *தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள்* | | *1,236* | |
| | *இலக்கமுறை நிறுவைத் தராசுகள்* | *பயனாளி பால் விவசாயச் சங்கங்களின் எண்ணிக்கை* | *271* | |
| | *பால் பகுப்பாய்வுப் பொருட்கள்* | | *254* | |
| | *வைக்கோல் பொதி கட்டும் இயந்திரம் (Hay bailing machine)* | | *10* | |
| | *பால் குளிரூட்டும் அலகுகள்* | | *200* | |
| | *முள்வேலி* | *பயனாளி பால் விவசாயிகளின் எண்ணிக்கை* | *311* | |
| | *மின்கம்பி வேலி* | | *122* | |
| | *சூரிய சக்தி அலகுகளைக்* | | *290* | |

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | மொத்தச் செலவு மற்றும் நிதி மூலம் (மில்லியன் ரூபாய்) |
|---|---|---|---|---|
| | கொண்ட நீர்ப் பம்பிகள் | | | |
| 2 | "மில்கோ பால் அபிவிருத்தி நிதியத்தை" உருவாக்குதல் மற்றும் அந்த நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி மில்கோ விநியோக தளத்தைப் பாதுகாப்பதன் மூலம் தேசியப் பால் உற்பத்தியை அதிகரித்தல் | | 2,000 | - |
| 3 | படல்கம பால் தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தயார் செய்தல் | | | அரசாங்க நிதி |

** 2026 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது, மேலும் ஆரம்ப நிகழ்ச்சித் திட்டங்கள் மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.*

*2.4. 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு இறுதி வரையிலான நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் (2025.09.30 வரை)*

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | 2025.09.30 வரை செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| | மூலதனச் செலவுகள் | 1,239.00 | 234.00 | 19 |
| | மீண்டுவரும் செலவுகள் | 24,936.00 | 13,399.00 | 54 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | | |
| 1 | கால்நடை இனவிருத்தியைச் செயற்றிறனாக்குதல் (நடமாடும் கால்நடை வைத்திய நிலையங்களை நடத்துதல்) | 11.80 | 3.60 | 31 |
| 2 | அதிக பால் அறுவடைக்காக மாடுகளுக்குத் தொடர்ச்சியாகக் குடிநீரை வழங்குதல் (நீர்த் தொட்டிகளை வழங்குதல்) | 4.80 | 1.30 | 27 |
| 3 | பால் விவசாயிப் பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல் | 8.90 | 4.80 | 54 |
| 4 | சுயாதீனமாக செயற்படும் பால் விவசாயச் சங்கங்களின் செயற்பாட்டுக் கையாளுகை குறித்து அந்தச் சங்கங்களின் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் | 5.60 | 3.50 | 63 |

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | 2025.09.30 வரை செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| 5 | விநியோக முகவர்களின் விநியோக மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | 0.50 | 0.30 | 60 |

2.5. 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு இறுதி வரையிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதிக முன்னேற்றம்

2.5.1. பசுமைப் புல் செயற்திட்டம்

பால் மாடுகளின் போஷணை மட்டத்தை உயர்த்துவதற்காக நாட்டிற்குள் ஒரே சீரான கால்நடை உணவு உற்பத்தி முறையை உருவாக்குதல் மற்றும் உயர் போஷணை மதிப்புடைய புல்லை வழங்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இந்தச் செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அதன் கீழ் 2025 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 575 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடத் திட்டமிடப்பட்டது. அதன்படி, மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி முடிவில் மில்கோ கள அதிகாரிகளின் வழிகாட்டுதல் மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் 357 ஏக்கர் பயிரிடப்பட்டுள்ளது. இதற்கான செலவைச் சம்பந்தப்பட்ட விவசாயிகளே ஏற்கின்றனர்.

புகைப்பட இலக்கம் 08

2.5.2. பால் மாடுகளுக்குத் தொடர்ச்சியாகக் குடிநீர் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

உயர் பால் உற்பத்தியைப் பெறுவதற்கும் ஒரே சீரான உற்பத்தி முறையைப் பேணுவதற்கும் பால் மாடுகளுக்குப் போஷணையை வழங்கும் போது தொடர்ச்சியான குடிநீர் வழங்குவது அத்தியாவசியமானது ஆகும். அந்த தேவையைப் பிரபலப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் 2025 ஆம் ஆண்டில் செலவில் அரைவாசியை மீளப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் விவசாயிகளுக்கு 800 நீர்த் தொட்டிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி முடிவில் வடக்கு, மத்திய, வட மத்திய, வடமேல், தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 222 குடிநீர்த் தொட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதற்காக மில்கோ நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவிட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 09

2.5.3. விவசாயிப் பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்

பால் உற்பத்தியைச் செயற்றிறனுடனும், பயனுறுதி மிக்கதாகவும் மற்றும் தொடர்ச்சியாகவும் பேணுவதற்காக பால் மாடு வளர்ப்பு மற்றும் முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பிரயோக மற்றும் கோட்பாட்டு அறிவை வழங்குதல் இந்தப் பயிற்சிப் பட்டறைகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இது மில்கோ களப் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், 2025 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 11,150 பால் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பது இந்தச் செயற்திட்டத்தின் இலக்காகும். அதன்படி, செப்டெம்பர் மாதம் இறுதிவரை 6,050 பால் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக மில்கோ நிறுவனம் 4.84 மில்லியன் ரூபாய் செலவிட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 10

*2.5.4. கால்நடை இனவிருத்தியைச் செயற்றிறனாக்குதல்*

*தரமான உயர் பால் உற்பத்திக்கு விலங்குகளின் சுகாதார முகாமைத்துவம் அத்தியாவசியமானது ஆகும். பண்ணையிலேயே அதே இடத்தில் பால் மாடுகளின் நோய்களை இனங்காணுதல், சிகிச்சையளித்தல், நோய்களைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதியில் செயற்கை கருவூட்டலை மேற்கொள்ளுதல் என்பனவும் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். அதன் கீழ் 2025 ஆம் ஆண்டில் இலக்கு வைக்கப்பட்ட நடமாடும் கால்நடை வைத்திய நிலையங்களின் எண்ணிக்கை 1,819 ஆகும், மேலும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி முடிவில் 376 நிலையங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதற்காக மில்கோ நிறுவனம் 3.58 மில்லியன் ரூபாய் செலவிட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 11*

*2.5.5. சிறிய அளவிலான விவசாய வர்த்தகப் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டம் (SAPP)*

*விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் (IFAD) இலங்கையில் செயல்படுத்தப்படும் இந்த செயற்திட்டம் சிறிய அளவிலான விவசாய வர்த்தகப் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டம் (SAPP), மில்கோ நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட 3,000 பால் விவசாயிகளின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு ஊவா, மத்திய, வடமேல், வட மத்திய மற்றும் தென் மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 செப்டெம்பர் இறுதிவரை 1,971 மாட்டுத் தொழுவங்கள், 51 கிணறுகள் மற்றும் 681 அசோலா குளங்கள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், 852 புல் வெட்டும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 529 பால் விவசாயிகளுக்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 04 உயிர்வாயு அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 12 - 13*

*2.5.6. புதிய அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களைத் ஆரம்பித்தல்*

*மில்கோ விநியோக வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தும் வகையில் 2025 ஆம் ஆண்டில் 500 புதிய அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்களைத் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த நிலையில், மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி முடிவில் 81 அங்கீகரிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. விற்பனை நிலையங்களைத் ஆரம்பிப்பதற்கான அனைத்துச் செலவுகளையும் விற்பனை நிலைய உரிமையாளர்களே ஏற்கின்றனர்.*

*புகைப்பட இலக்கம் 14 – 15*

## *03. தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை*

### **3.1.** *அறிமுகம்*

*தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை 1973 ஆம் ஆண்டில் 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதுடன், அதன் களப்பணிகள் 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது சபைக்குச் சொந்தமான 32 பண்ணைகள் உள்ளன. இந்தப் பண்ணைகளில் மாடு, எருமை, ஆடு, செம்மறியாடு, பன்றி மற்றும் கோழி வளர்ப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. விவசாயிகளுக்கு இனவிருத்திக்குரிய விலங்குகளை வழங்குவது சபையின் பிரதான நோக்கம் ஆகும். இது தவிர, பண்ணை உற்பத்திகளான பால், முட்டை, இறைச்சி போன்றவை தரமான உற்பத்திகளாக நுகர்வோருக்கு வழங்கப்படுகின்றன. மேலும், சபையின் அனைத்துப் பண்ணைகளிலும் கால்நடை வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் வருடாந்தம் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த 50 ஆண்டுகளில் நாட்டில் கால்நடை வளங்கள் துறையின் அபிவிருத்தியில் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை முன்னோடிப் பங்களிப்பை வழங்கியுள்ளது.*

3.2. 2026 ஆம் ஆண்டிற்கான பௌதிக இலக்குகள் (செயல்படுத்த எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்)

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | அளவீட்டு அலகு | இலக்கு | அலகுச் செலவு (ரூ.) | மொத்தச் செலவு (மில்லியன் ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 1 | பசும் பால் உற்பத்தி | மில்லியன் லீற்றர் | 8.60 | 271.0 | 2340.40 |
| 2 | எருமைப் பால் உற்பத்தி | மில்லியன் லீற்றர் | 0.95 | 430.0 | 407.00 |
| 3 | ஆட்டுப் பால் உற்பத்தி | லீற்றர் | 21,462 | 937.0 | 20.10 |
| 4 | ஒரு நாள் வயதுடைய பிராய்லர் கோழிக் குஞ்சுகள் | மில்லியன் எண்ணிக்கை | 3.80 | 142.0 | 539.37 |
| 5 | ஒரு நாள் வயதுடைய முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் | மில்லியன் எண்ணிக்கை | 1.20 | 222.0 | 260.48 |
| 6 | பிராய்லர் கோழி இறைச்சி | கிலோகிராம் | 106,400 | 758.0 | 61.24 |
| 7 | முட்டை உற்பத்தி | மில்லியன் எண்ணிக்கை | 5.60 | 30.0 | 166.59 |
| 8 | தென்னை உற்பத்தி | மில்லியன் காய்கள் | 15.80 | 67.0 | 1049.43 |

3.3. நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் (2025.08.31 அன்றைய நிலவரம்)

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | 2025.08.31 வரை செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | நிதி முன்னேற்றம் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதனச் செலவுகள் | 629.63 | 39.35 | 6.25 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 6,710.16 | 2,504.15 | 37.32 |

3.4. 2025.08.31 அன்றைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதிக முன்னேற்றம்

| செயற்பாடுகள் | அலகு | 2025/08/31 அன்றைய இலக்கு | 2025/08/31 அன்றைய உண்மைப் பெறுமானம் | அடையப்பட்ட சதவீதம் |
|---|---|---|---|---|
| பசும் பால் உற்பத்தி | லீற்றர் | 4,266,652 | 2,750,361 | 64 |
| எருமைப் பால் உற்பத்தி | லீற்றர் | 635,807 | 483,997 | 76 |
| ஆட்டுப் பால் உற்பத்தி | லீற்றர் | 17,252 | 10,550 | 61 |
| தென்னை உற்பத்தி | காய்களின் எண்ணிக்கை | 13,752,772 | 6,555,384 | 48 |
| பிராய்லர் கோழிக் குஞ்சு உற்பத்தி | எண்ணிக்கை | 2,573,926 | 2,060,707 | 80 |
| முட்டையிடும் கோழிக் குஞ்சு உற்பத்தி | எண்ணிக்கை | 825,863 | 581,383 | 70 |

| செயற்பாடுகள் | அலகு | 2025/08/31 அன்றைய இலக்கு | 2025/08/31 அன்றைய உண்மைப் பெறுமானம் | அடையப்பட்ட சதவீதம் |
|---|---|---|---|---|
| வர்த்தக ரீதியான முட்டை உற்பத்தி | எண்ணிக்கை | 4,151,018 | 2,917,956 | 70 |
| நாட்டுக் கோழி முட்டை | எண்ணிக்கை | 657,163 | 259,481 | 39 |
| பிராய்லர் கோழி இறைச்சி உற்பத்தி | எண்ணிக்கை | 15,200 | 18,629 | 123 |
| விலங்குகளை வழங்குதல் | | | | |
| மாடு - ஆண் | எண்ணிக்கை | 717 | 399 | 55 |
| மாடு - பெண் | எண்ணிக்கை | 106 | 26 | 24 |
| எருமை - ஆண் | எண்ணிக்கை | 278 | 135 | 48 |
| எருமை - பெண் | எண்ணிக்கை | 20 | - | |
| ஆடுகள் | எண்ணிக்கை | 207 | 125 | 60 |
| செம்மறியாடுகள் | எண்ணிக்கை | 725 | 544 | 75 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் | | | | |
| யோகட் | 80 மில்லி லீற்றர் | 794,260 | 555,987 | 70 |
| உறைந்த எருமைத் தயிர் | 1 லீற்றர் | 540,408 | 283,822 | 53 |
| பால் டொபி | பொதிகள் | 417,051 | 109,373 | 26 |
| UHT பால் பொதிகள் | பொதிகள் | 591,502 | 38,466 | 7 |
| யோகட் பானம் | 200 மில்லி லீற்றர் | 133,350 | 112,987 | 85 |
| ஐஸ்கிரீம் | 1 லீற்றர் | 16,232 | 7802 | 48 |
| | கோன் | 105,868 | 56,664 | 54 |
| இரப்பர் சீட் | கிலோகிராம் | 19,426 | 11,034 | 57 |
| விவசாயிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | எண்ணிக்கை | 71 | 14 | 20 |

3.4.1. UHT 1 லீற்றர் பால் பொதியை மீண்டும் சந்தையில் வெளியிடுதல்

தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையினால் தற்காலிகமாக உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்த UHT 1 லீற்றர் பால் பொதியை மீண்டும் சந்தையில் வெளியிட ஆரம்பித்தது.

இந்த நிகழ்வில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன கௌரவ அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டதுடன், தேசியப் பால் உற்பத்தியை உயர்த்துதல் மற்றும் உள்நாட்டுப் பால் உற்பத்திக் கைத்தொழிலை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்குப் பங்களிப்புச் செய்வதே இதன் நோக்கம் ஆகும்.

புகைப்பட இலக்கம் 16

3.4.2. உலகப் பால் தினக் கொண்டாட்டம்

ஜூன் மாதம் 01 ஆம் திகதி உலகப் பால் தினத்தை முன்னிட்டு, தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையினால் விசேட விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கம் திரவப் பால் நுகர்வைக் பொதுமக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல் மற்றும் அதன் சுகாதார நன்மைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். இந்த விழாவின்போது, நிறுவனம் இலவசமாகத் திரவப் பாலை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தியது. அதில் பெரிமளவிலான மக்கள் கலந்து கொண்டதுடன், திரவப் பாலை அருந்துவதன் முக்கியத்துவம் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வாய்ப்பு கிடைத்தது.

*புகைப்பட இலக்கம் 17*

*3.4.3. மாரவிலைப் பண்ணையில் புதிய விற்பனை நிலையத்தைக் கட்டுதல்*

*திரவப் பாலை ஊக்குவித்தல் மற்றும் தரமான பண்ணை சார்ந்த உற்பத்திகளை நுகர்வோருக்கு வழங்குதல் ஆகிய நோக்கங்களுக்காக தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையினால் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டத் தொடரில் மற்றுமொரு விசேட மைல்கல்லாக, 50 ஆவது NLDB விற்பனை நிலையம் மாரவிலைப் பண்ணையுடன் இணைந்த மாதம்பைப் பகுதியில் உள்ள பண்டார பெதும வளாகத்தில் 2025.07.18 அன்று கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் கௌரவ பிரதி அமைச்சர் அவர்களின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.*

*இந்த விற்பனை நிலையம் மூலம் பிரதேச மக்களுக்குத் தரமான மற்றும் போஷணைமிக்க NLDB உற்பத்திகளை கொள்வனவு செய்ய வாய்ப்புக் கிடைத்துள்ளது.*

*புகைப்பட இலக்கம் 18*

*3.4.4. மருதானை புகையிரத நிலைய வளாகத்தின் விற்பனை நிலையத்தை நவீனமயமாக்கல்*

*மருதானைத் புகையிரத நிலைய வளாகத்தில் இருந்த சபைக்குச் சொந்தமான திரவப் பால் விற்பனை நிலையத்தை நவீனமயமாக்கி, மருதானைத் புகையிரத நிலையத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் புதிய வடிவில் திறந்து வைத்தல் 2025 ஜூலை மாதம் 11 ஆம் திகதி கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த விற்பனை நிலையம் மூலம் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பண்ணைகளினால் உற்பத்தி செய்யப்படும் திரவப் பால் உள்ளிட்ட உயர்தரப் பால் சார்ந்த உற்பத்திகளைப் பொதுமக்கள் இலகுவாகக் கொள்வனவு செய்ய வாய்ப்புக் கிடைக்கும்.*

*புகைப்பட இலக்கம் 19*

*3.4.5. மாவத்தை பண்ணையின் விற்பனை நிலையத்தை நவீனமயமாக்கல்*

*சந்தை அணுகலை விரிவுபடுத்தும் கொள்கையின் கீழ் மாவத்தைப் பண்ணையில் இருந்த பழைய விற்பனை நிலையத்திற்குப் பதிலாகப் புதிய விற்பனை நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இதன் நோக்கமாக நுகர்வோர் சமூகத்துக்கு NLDB உற்பத்திகளை கொள்வனவு செய்யும் திறனை மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் அவர்களுக்கு உயர்ந்த உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குதல் என்பன காணப்படுகிறது.*

*புகைப்பட இலக்கம் 20*

*3.4.6. சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத் தொகுதியை நிறுவுதல்*

